சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரிய புராண உரைத்திறன்



முனைவர் மு. பழனியப்பன்

சி. கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராண உரைத்திறன்

(சுந்தரர் வாழ்வுப் பகுதிகள் மட்டும்)

முனைவர் மு. பழனியப்பன்
உதவி இயக்குநர்,
தமிழ் இணையப் பல்கலைக்கழகம்,
தரமணி, சென்னை.

சுமன் வெளியீடு
293, அகமது வணிக வளாகம்,
இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை - 600 014.

சி. கே. சுப்பிரமணிய முதலியாரின்
பெரியபுராண உரைத்திறன்

முனைவர் மு. பழனியப்பன்

பதிப்பு : ஜனவரி 2006
பக்கம் : 144

பதிப்பு :
சுமன் வெளியீடு
293, அகமது வணிக வளாகம்,
இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை - 600 014.

விலை : **100. 00**

வடிவமைப்பு :
வே. கருணாநிதி

அச்சிட்டோர்:
தி பார்க்கர்
293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.
தொலைபேசி : 044 - 55904058.

பெற்றோர் மணிவிழாச் சிறப்பு
வெளியீடு



முனைவர் பழ. முத்தப்பன்

திருமதி மு. அழகம்மை

தாய்த்தமிழைக் கற்பித்த தந்தை நல்லார்
தரணிபோற்றும் முத்தப்பர் தாயும் ஆவார்
ஆய்ந்தறிந்து வளர்த்திட்ட அன்னை நல்லாள்
அருளாலே அழகம்மை தந்தை ஆவார்
சேய்நானும் பெற்றபேறு உம்மால் கோடி
சேர்க்கின்றேன் உங்களுக்கே புகழைத் தேடி
வாய்ப்பாக மணிவிழாவைக் காண்பீர் வாழ்க!
வாயார வாழ்த்துகிறேன் வணக்கம்! வாழ்க!

புதுவயல்

11-05-06.

'திறனாய்வுத் தென்றல்'
பேராசிரியர் மது. ச. விமலானந்தம்
கல்லூரி முதல்வர் (ஓய்வு)
தமிழக புலவர் குழு உறுப்பினர்

அணிந்துரை

அன்று பொதுவாக சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடு, சேது நாடு போலே, இன்று கொங்கு நாடும் செட்டி நாடும் குறிப்பிடத்தக்க நற்றமிழ் நாட்டுப் பிரிவுகளாக நிலவுகின்றன. சிறப்பாகச் சோழ நாடும் தமிழும், பாண்டி நாடும் தமிழும், சேர நாடும் தமிழும், தொண்டை நாடும் தமிழும், சேது நாடும் தமிழும் என அறிவிலே செழுமை பெற்றிருந்தமை போன்றே, இந்நாளில் 'கொங்கு நாடும் தமிழும்', 'செட்டி நாடும் தமிழும்' இரு கண்களாகப் பெருந்தமிழ் பேணும் பெற்றிமை சான்று பிறங்குகின்றமையை இலக்கிய வரலாறு உணர்த்தா நிற்கிறது.

ஓர் இலட்சமே மக்கள் தொகை கொண்ட செட்டியார் (நகரத்தார்) சமூகம், எல்லாத் துறைகளிலும் - ஏன்? திரும்பும் திசையெல்லாம் சுவடு பதித்து எழில் சான்ற இனமாக - பண்பட்ட சமுதாயமாகச் சிறந்தோங்கி வருதல் சிந்தை கொள்ளத்தக்கது.

வங்கி, கல்வி, தாளகம், நூல் வெளியீடு, இதழியல், கவிதை, தாலாட்டு, ஒப்பாரி, தமிழ், ஆராய்ச்சி எனப் பல்வேறு துறைகளிலும்; கவிஞர்கள் தமிழ்ப் பேரா சிரியர்கள், கல்விக் காவலர்கள், பல்கலைக்கழகம் கண்டோர், தமிழிசை வளர்த்தோர், துணை வேந்தர்கள், தொழிலதிபர்கள், வள்ளல்கள், திருப்பணிச் செல்வர்கள், திரைத்துறை, திரையிசை, இயக்கம், திரைப்படம்

எடுத்தல் என என்னென்ன துறைகள் உண்டோ அத்துணைத் துறைகளிலும் முன்னோடியாக முதன்மை பெற்று ஒளிர்கின்றனர்.

அண்ணாமலை அரசர், வள்ளல் அழகப்பர், கருமுத்து தியாகராசர். சேவுகன் அண்ணாமலை செட்டியார், இராமசாமி செட்டியார்; பண்டித மணி, ராய. சொ. மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், தமிழண்ணல், ஆறு அழகப்பன், தே. சொக்கலிங்கம்; கண்ணதாசன், அர. சிங்கார வடிவேலன், மீனவன்; ஏ.வி. மெய்யப்பச் செட்டியார், சுப. முத்துராமன், எஸ்.ஏ.பி. அண்ணா மலை, தமிழ்வாணன், லேனா தமிழ்வாணன்; இப்படி நனிபுகழ் நகரத்தாருள் பேர் சொல்பவர்கள் பல்லோர் ஆவர். உரைக்கின் ஒவ்வொன்றிலும் பட்டியல் நீளும்.

இத்தனைக்கும் பார்சி சமூகம் போல, ஒரே ஒரு லட்சம் புள்ளிகளே உள்ளனர். இந்தப் பண்பட்ட சீர்மிகு செட்டியார் மரபில், வீறு ஏறும் தமிழ் பேசும் பேராசிரியர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்கள் குறிப்பிடத்தக்கோர் மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வராக முறுவலித்தவர்; இது போது திருச்சிராப்பள்ளி செட்டி நாடு கலைக் கல்லூரி முதல்வராக முகிழ்ப்பவர்.

இத்தகு ஏற்றம் சான்ற தந்தைக்குரிய தனையனாகத் திகழ்பவர் முனைவர். பழனியப்பன் அவர்கள். அன்பானவர், அமைதியே உருவானவர், அடக்கம் மிக்கவர். 32 அகவைக்குள் 'பெரியபுராணப் பெண்கள் - ஓர் ஆய்வு', 'பெண்ணிய வாசிப்பு'. 'விடுதலைக்கு முந்தைய பெண்களின் புதினங்கள்', 'சி.கே.சுவின் பெரியபுராண உரைத்திறன்' ஆகிய அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். இலக்கியத் திறனாய்வு, சமய இலக்கியம், பெண்ணியம் போன்ற களங்களில் கை தேர்ந்தவர். இதுபோது தமிழ் இணையப் பல்கலையில் உதவி இயக்குநர்.

இந்த இனியவரை எளியேன், தலைநகர் சென்னையில் சந்தித்தேன். 1995 மே திங்கள், வைணவ விற்பன்னர்.

சே.ரா. அவர்கள், ஆண்டுதோறும் நடாத்தி வரும் 'திருவாய்மொழி' பயிற்று வகுப்பில், உடனுறைந்து ஊடாடிப் பழகினோம். அப்போது தான் இவர், என் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய இளவல் பேரா. பழ. முத்தப்பன் அவர்களின் அருமை மகன் என அறிந்து உவந்தேன். அன்று முதல் என்பால் தலைநாட் போன்ற அன்பினராக இருந்து வரும் இனியவர்.

நூலுக்கு உரியவரோ சிவக்கவிமணி கோவை சி.கே. சுப்பிரமணிய முதலியார். நல்லோர் எல்லோரின் மதிப்பிற்கும் துதிப்பிற்கும் உரிய ஒரு பெரும் தமிழ் மாமணி. அவரின் சாதனையாகிய பெரியபுராண உரை பற்றிய திறனே இந்நூல். கேட்கவா வேண்டும். அணிந்துரை தர ஏது?

வைணவத்துக்கு ஈட்டு உரைபோலே, சைவத்திற்குப் பேருரைகள் வாய்க்கவில்லையே என்பது பெருங்குறை, ஆதங்கமும் ஆகும். அதற்கு ஈடு செய்யுமாப் போலே சிவக்கவிமணியாரின் பெரிய புராணப் பேருரை பேர் சொல்கிறது, பெருமை புரிகிறது.

அவ்வரிய உரைத்திறனை திறனாய்ந்து, சைவ இலக்கிய உரையாசிரியர்களின் உரையினைப் பெருமைப் படுத்தும் பெருநோக்கில் இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது.

சி.கே.சு.வின் உரை, ஏழு தொகுதியுள், பாட்டுடைத் தலைவர் சுந்தரர் பற்றிய பகுதியை மட்டுமே (1, 6, 7 தொகுதிகள்) எடுத்துக் கொண்டு, அவரின் உரையின் ஒண்மையினை ஓர்கின்றது இந்நூல்.

நூலின் நான்கு பகுதிகளில், முதலியாரின் வாழ்வும் பெரிய புராண உரைத் தோற்றமும் வளர்ச்சியும்; உரை மேற்கொண்ட பொது நெறிகள்; சிறப்பு நெறிகள்; அவரின் பல்துறைப் புலமை நலம் வகுத்துக் காட்டப் பெறுகின்றன.

சி.கே.சுவின் உரை, 1. விரிவு, 2. விளங்கிய பொருள், 3. விகற்பம், 4. தொன்முறை, 5. தொகுப்பு, 6. ஆய்வு,

7. மூலத்தோடு முரணாமை, 8. அருந்தொடர் நயங்கள், 9. பிறர் உரை ஒப்பு நோக்கல், 10. கவிநயம் காட்டல் பழமொழி ஆட்சி போன்ற பொதுப் பண்புகளைப் போற்றுகிறது. நன்னூல் நவிலும் (சூ.21) 14 உரைப் பெற்றிகளையும் தனித்தனியே முதலியாரின் உரை யோடு பொருந்த வருவது புலப்படுத்தப்படுகிறது. இது நூலாசிரியரின் பொறுமை, சகிப்புத் தன்மை, செவ்வனே செய்யும் சீர்மை ஆகியவற்றைக் காட்டுகிறது.

திறனாய்வு, பாத்திரப் பண்பு பகரல், சிக்கல் சுட்டல், தீர்வு காணும் திறன் என்ற சிறப்பு நெறிகளும் சித்திரிக்கப் படுகின்றன.

ஆக, தம் எல்லையில் நின்று, சி.கே.சுவின் உரை ஒட்ப நுட்பங்களை அகழ்ந்தெடுத்துக் காட்டி, அவர் உரை, 'ஓர் அகல ஆழ முழு உரை' என நிறுவுகிறார் தெள்ளிய அழகு நடையில்!

உண்மையான ஈடுபாட்டுடன் திறனாய்ந்து தெளிந் திருக்கும் பழனியப்பன், நல்லோர் எல்லோரின் பாராட்டுக்கு உரியவர் ஆகிறார். பயனுள்ள நூல்.

இதுபோல் திறனாய்வு பல ஆற்றி, ஆண்டுக்கு இரு நூல் என்றவாறு பன்னூல்கள் யாத்து ஏற்றமுற வேண்டும்; காவிரி மணலினும் பன்னாள் பயனுற வாழ்ந்து புகழ் பூத்துப் பொலிந்திட வேணும் எனத் தமிழன்னையின் தண்ணருளும் பரம்பொருளின் பேரருளும் இறைஞ்சுதும். நன்றி.

நினைவன்

37/21 இடையர் தெரு — மது. ச. விமலானந்தம்
தஞ்சாவூர் 613 001. — (மாசில்மகிழ்நன்)

பணிமொழி

1992ஆம் ஆண்டில் முதுகலைத் தமிழ்ப் பயில்வின் போது 'பெரியபுராணத்தில் பெண்கள் - ஓர் ஆய்வு' என்ற தலைப்பில் திட்டக்கட்டுரையை எழுதினேன். திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழக முதல் மாணவனாக வெல்லும் வாய்ப்பும் பெற இத்திட்டக் கட்டுரையும் ஒரு காரணம். இத்திட்டக் கட்டுரைக்கு தமிழக அரசின் சிறந்த நூல் வெளியிடும் திட்டத்தின் கீழ் நிதிஉதவி கிடைத்தது. 1999 ஆம் ஆண்டு இது நூலாக வெளி வந்து தமிழ் இலக்கிய உலகிற்கு என்னை அறிமுகம் செய்தது. இந்நூல் குறித்த பாராட்டுகளும், நூல் வேண்டி விண்ணப்பங்களும் இன்று வரை வந்து கொண்டிருப்பது பெருமகிழ்விற்குரிய செய்தியாகும்.

இது ஒரு புறம் இருக்க, முதுகலை முடித்தபின் மேலும் படிக்க வாழ்க்கை என்னை வரவேற்றது. புதுக்கோட்டை அரசு கல்வியியல் கல்லூரி - இள நிலை கல்வியியல் கற்க என்னை அழைத்தது; அதே நேரத்தில் ஒசூரில் ஆசிரியப் பணிபுரிய பள்ளிக் ஒன்றழைத்தது. எங்கு செல்வது? என்ற கேள்விக்குப் பணியே என்ற பதில் வென்றது.

பணியின் பரபரப்பிற்கு இடையிலும் நூல் எழுதும் எண்ணம் தலையெடுத்தது. எதனை எழுதுவது என்றபோது மனம் திரும்பத் திரும்பச் சொன்னது; "பெரியபுராணமே நம் களம்" என்ற அதன் சொல்லடுக்கில் வயப்பட்டு பெரியபுரா ணத்தையே ஆராய்வது என முடிவெடுத்தேன். பெரியபுராணத்தை எவ்வகையில் ஆராய்வது என

எண்ணிய போது, வீட்டில் அப்பா சேமித்து வைத்திருந்த புத்தங்களிலே பழமையானதும், உயர மானதும், அகலமானதுமான சி.கே. சுப்பிர மணிய முதலியாரின் உரைப்பகுதிகள் கண்களில் ஒளி பரவச் செய்தன. அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் பிரித்தேன். படிக்கப் படிக்க விரியும் புத்தகக் கடலைத் தொட்ட உணர்வு. இதனுள் தான் நாம் ஆராயப் புக வேண்டும் என்ற உந்துதல் உடனே ஏற்பட்டுவிட்டது.

பொதுத்தலைப்பு கிடைத்துவிட்டது. சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் உரையை உரசிப் பார்த்து இன்பங்கொள்ள மனம் விழைந்தது; படிக்க நுழைந்தேன். தனிமனிதர் ஒருவரின் தளராத முயற்சி, அயராத உழைப்பு இவற்றின் கூட்டுமுயற்சியால் உருவான காகிதப் பொன்னேடுகளில் நான் கரைந்து போனேன்; எழுத்தில் பதிமூன்று ஆண்டுகள், அச்சில் பதினேழு ஆண்டுகள் என்ற முயற்சி திரு வினை ஆக்கத்தை எண்ணி உளம் நெகிழ்ந்தேன்.

நூலின் நிறைவுப் பகுதியில் சுட்டப் பெற்ற, 'யானை மீது ஏற்றி உரைப்பகுதிகள் உலாவந்த காட்சி' கண்களை நனைத்தது. பாராட்டுரைகள், உதவிகள் எனத் தொடரும் அப்புத்தகத்தின் கனமிக்க பக்கங்கள் தமிழ்ப்பக்தி இயக்கத்தை மீண்டும் காட்டும் வரலாறாக என்னுள் நிலைத்தது. இப்பக்தி இயக்கப் பணிக்கு வளம் சேர்க்க எண்ணி இவ்வுரைப் பகுதிகளை நூல் ஆக்கத்திற்குத் தேர்ந்தேன்.

முழுமையும் ஆராய எண்ணமிருந்தாலும் புத்தக எல்லை கருதி, சுந்தரர் வாழ்வுப் பகுதிகளை மட்டும் ஆராயச் சுருக்கி வகுத்துக் கொண்டேன். சுந்தரர் வாழ்வுப் பகுதிகளை மட்டும் ஆராய எடுத்துக் கொண்டமைக்கு இரு காரணங்கள் உண்டு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் 'சுந்தரரைக் கதைத் தலைவராகவும், பரவையார் சங்கிலியாரைத்

தலைவியராகவும் கொண்டு பெரியபுராணம் பெருங் காப்பிய தகுதி பெறுகின்றது' என்ற கருத்தினர். மேலும் சுந்தரர் பகுதிகள் ஆங்காங்கு சுட்டப் பெறுவதால் ஒருங்கிணைத்து கதைத் தலைவரை முழுமையாக அறிய வேண்டும் என்பது கருதி சுந்தரர் பகுதிகள் மட்டும் தேர்ந்து கொண்டேன். இது ஒரு காரணம்.

சுந்தரரை ஆய்ந்தால் பெரியபுராணத்தையே ஆராய்வது போன்ற முழுமை உடையது என்பது இரண்டாவது காரணம்.

தலைப்பு முழுமை பெற்றதும், அத்தலைப்பின் வழியில் செல்ல உதவியது பேராசிரியர், முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களின், 'அடியார்க்கு நல்லார் உரைத்திறன்' என்ற நூலாகும். அவரின் நூல் உதவியையும், அவர் இன்றுவரை என் மீது காட்டிவரும் அன்பு, ஆய்வு உதவிகளையும் என்றும் மறவேன்.

இரண்டாண்டுகள் சுந்தரர் - குறித்த பெரிய புராண உரைப்பகுதிகளைக் கவனமுடன் படித்தேன்; குறித்தேன்; ஒரு கோடையில் எழுதி முடித்தேன்; மகிழ்ந்தேன். இம்மகிழ்வின் பதிவை வாசகர்களான நீங்களும் உணர இப்புத்தகத்தை, 'தி பார்க்கர்' பதிப்பகம் மூலம் வெளியிட்டுள்ளேன்.

இந்நூல் வெளிவர ஊக்கமூட்டிய, மணிவிழாக் காணும் என் பெற்றோர், முனைவர் பழ. முத்தப்பன் அழகம்மை முத்தப்பன் ஆகியோர்க்கும், மனைவி பழ. விஜயலட்சுமிக்கும், மகள் அழகு நந்தினிக்கும் மெய்ப்புத் திருத்திய நண்பர் சொ. சேதுபதிக்கும் நன்றிகள்.

என் இலக்கியத் தடத்திற்கு அவ்வப்போது போதிய ஊட்டமளித்து வரும் திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் தாமோதரன் (அறவேந்தன்) அவர்கட்கும், புதுவை

மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனப் பேராசிரியர் முனைவர் சிலம்பு. ந. செல்வராசு அவர்களுக்கும் என் இனிய நன்றிகள்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கி இருக்கின்ற பேராசிரியர் மது.ச. விமலானந்தம் அவர்களுக்கும் என் நன்றிகள். தமிழ்ப் பயிலும் காலத்து, நூல்கள் வழி அறிமுகமானவர் அவர். அதன்பின் நேரில் சந்தித்து அன்பின் காரணமாய் அவரின் நட்பைப் பெறவும் முடிந்தது. அவரின் தமிழறிவுக்கும், தொண்டுக்கும் பாராட்டுதல்களைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

அறிமுகவுரை வழங்கிய பள்ளிப்பருவத்து நண்பர் வேல். கார்த்திகேயன் அவர்கட்கும் நன்றி.

என்னை உயர்த்தி வழிநடத்தும் திருவருளுக்கும், திருவாரூர் தலத்திற்கும், சுந்தரர்க்கும் வணக்கங்கள்.

19.12.2005 அன்போடு
சென்னை. – மு. பழனியப்பன்

உள்ளுறை

ooo

குறுக்க விளக்கம்

அர.	-	அரங்கேற்றுகாதை
ஆ.ப.	-	ஆறாம்பகுதி
உ.	-	உரை (திருத்தொண்டர் புராணஉரை குறித்தது)
உ.ஆ.	-	உரை ஆசிரியர்
உ.ஆ.கள்.	-	உரை ஆசிரியர்கள்
ஏ.ப.	-	ஏழாம்பகுதி
சிலப்.	-	சிலப்பதிகாரம்
சுப்பிரமணிய முதலியார்	-	சி.கே. சுப்பிரமணிய முதலியார்
சூ.	-	சூத்திரம்
சொல்.	-	சொல்லதிகாரம்
சொ.பொ.வி.	-	சொற்பொருள் விளக்கம்
தி.தொ.பு.	-	திருத்தொண்டர் புராணம்
தொல்.	-	தொல்காப்பியம்
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
பொருள்.	-	பொருளதிகாரம்
பொ.வி.	-	பொருள்விளக்கம்
மு.ப.	-	முதல்பகுதி

OOO

நூன்முகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் உரையாசிரியர்களின் பணி குறிப்பிடத் தக்கதாகும். அவர்களின் உரைகள் தொன்மையான இலக்கியங்களைக் காலங் காலமாகப் பரவச்செய்து பாது காத்து வருகின்றன. தொடக்க காலத்தில் இலக்கண நூல்களுக்கு உரைகள் தோன்றி, அவற்றை எளிமைப்படுத்திப் பரவச் செய்தன. பிறகு சமய இலக்கியங்களுக்கு உரைகள் தோன்றின. எனினும் சமய இலக்கியங்களில் வைணவ இலக்கியங்களுக்கு உரை தோன்றியதைப்போலச் சைவ இலக்கியங்களுக்கு உரை தோன்ற வில்லை. சிவனைப் போற்றிப் பரவும் சைவ மரபினர் இலக்கியங் களைப் பொருள் நோக்கோடு பரவாமல், பக்தி நோக்கோடு வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்துப் போற்றிப் புகழ்ந் தார்கள். சைவ இலக்கியங்களுக்கும் பொருள் ஆழமும், தத்துவ விளக்கமும் காண முற்பட்ட போது உரை தோன்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உரைகள் தோன்ற ஆரம்பித்தன.

"வைணவ இலக்கிய உரைகளில் முதன்மையானது நாத முனிகள் உரை என்றும், அவரின் காலம் பத்தாம் நூற்றாண்டு என்றும் கணக்கிட்டு வைணவ இலக்கிய உரையின் தோற்றத்தைப் பத்தாம் நூற்றாண்டு என்பர்."[1] வைணவ இலக்கிய உரைகளுக்கு ஏற்பட்ட வளர்ச்சி, சிறப்பு ஆகியன கண்டு, சைவ இலக்கியங் களுக்கு (சாத்திரங்களுக்கு) உரைகள் தோன்ற ஆரம்பித்தன.

சைவ இலக்கியங்களில் குறிப்பாக "திருமந்திரம்", "திருவாசகம்", "பெரியபுராணம்" ஆகிய திருமுறைகளுக்குத் தத்துவ விளக்கங்களோடு உரைகள் தோன்றின. இவ்வாறு வளர்ந்த சைவ இலக்கிய உரைகளுள் தனித்த சிறப்பிடம் பெறுவது சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராண உரையாகும்.

வைணவ இலக்கிய உரைகள் சிறந்த ஆய்வுக்களமாக விளங்குவதைப் போலவே சுப்பிரமணிய முதலியாரின் பெரிய

புராண உரையும் சிறந்த ஆய்வுக்களமாக விளங்குகின்றது. அவரின் உரைத்திறனை மதிப்பிடும் நோக்கில் இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது.

பெரியபுராணத்துக்குக் கிடைத்துள்ள சுப்பிரமணிய முதலியாரின் உரையின் சிறப்பியல்புகளையும், அதன் இலக்கிய வளத்தையும், அதனுள் பின்பற்றப் பெற்றுள்ள பொது, சிறப்பு உரை நெறிகளையும் ஆராய்ந்து, அதன்வழியே பெரியபுராணத்தின் சிறப்பினையும், சேக்கிழாரின் கவி நலத்தையும் வெளிக்கொணர்வது இந்நூலின் நோக்கமாகும்.

சுப்பிரமணிய முதலியாரின் உரை ஏழு தொகுதிகளை உள்ளடக்கியதாகும். ஏழு தொகுதிகளையும் ஆய்வு செய்து உரைத்திறனை வெளிக்கொணருவது விரிந்த எல்லைக்குச் சென்றுவிடும் என்பதால் பெரியபுராணத்தின் பாட்டுடைத் தலைவரான சுந்தரமூர்த்தி நாயனாரின் வாழ்வில் இடம்பெற்றுள்ள பகுதிகள் மட்டுமே நூலுக்குரிய எல்லையாக எடுத்துக் கொள்ளப் பெறுகிறது. அப்பகுதிகள் முதல்பகுதி, ஆறாம் பகுதி, ஏழாம்பகுதி ஆகிய மூன்று நூல் வடிவங்களில் இடம்பெற்றுள்ளன. இம்மூன்று பகுதிகளிலும் சுந்தரர் வரலாறு இடம் பெற்ற பகுதிகளே உட்படுத்தப் பெற்றுள்ளன.

சுப்பிரமணிய முதலியாரின் உரையின் சிறப்பு பற்றி மு.வை. அரவிந்தன் ‘உரையாசிரியர்கள்’ என்ற நூலில் அறிமுகம் செய்துள்ளார். சுப்பிரமணிய முதலியார் பெரியபுராண உரை வெளியீட்டு நிறைவு விழாவில் மதுரை ஆதீனம் சார்ந்த சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளிய தலைமையுரையில் சுப்பிரமணிய முதலியாரின் உரை பற்றிய கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார்கள். அவரின் உரை, சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வு, பெரியபுராணத் தெய்வக் கவி நயங்கள், யாப்பமைப்பு, பாடல் எண் அமைந்த நயங்கள், உரையில் எடுத்தாளப்பட்ட மேற்கோள்கள், கற்பனை ஆகிய கருத்தமைவுகள் கொண்ட ஆய்வுரையாக விளங்குகின்றது. இவை தவிரச் சுப்பிரமணிய முதலியாரின் உரைபற்றிய முழுமையான விரிவான நூல் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

பெரியபுராண உரைப்பகுதிகளுள் முதல்பகுதியில் உள்ள,

1. திருமலைச்சருக்கம்
2. தடுத்தாட்கொண்ட புராணம்

ஆறாம் பகுதியில் உள்ள,

3. ஏயர்கோன் கலிக்காமர் புராணம்

ஏழாம் பகுதியில் உள்ள,

4. கழறிற்றறிவார் நாயனார் புராணம்

5. வெள்ளானைச் சருக்கம்

ஆகிய ஐந்து சிறுபகுதிகளில் இடம்பெறும் சுந்தரர் தொடர்புடைய பாடல்கள் மட்டுமே இந்நூலுக்கு உரிய மூலங்களாக எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

சுப்பிரமணிய முதலியாரின் உரை பல கூறுகளாகப் பகுக்கப் பெற்று பொதுக் கருத்துக்களை அடையும் வகையில் இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது.

இந்நூல் நூன்முகம், நிறைவுரை நீக்கி, நான்கு பகுதிகளைக் கொண்டதாகும். அவை,

1. சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வும், பெரியபுராண உரைவரலாறும்
2. சுப்பிரமணிய முதலியாரின் உரைஇயல்புகளுள் பொதுநெறி
3. சுப்பிரமணிய முதலியாரின் உரைஇயல்புகளுள் சிறப்புநெறி
4. சுப்பிரமணிய முதலியாரின் பல்துறைப் புலமை

என்பனவாகும்

முதற் பகுதியில் சுப்பிரமணிய முதலியாரின் இல்லற, துறவற வாழ்வும், பெரியபுராணத்திற்கு ஏற்பட்ட உரைத்தோற்றங்களும், அவற்றின் வளர்ச்சி நிலைகளும் விளக்கப் பெற்றுள்ளன.

சுப்பிரமணிய முதலியார் தமது உரையில் கையாண்ட பொது நெறிகளான 1. நன்னூல் கூறும் உரை இலக்கண வழி நிற்றல், 2. கட்டமைப்பு முதலான பல பொது நெறிகளை விளக்கல் என்ற இருவகைப் பகுப்பு உடையதாக இரண்டாம் பகுதி அமைக்கப் பெற்றுள்ளது,

மூன்றாம் பகுதியில் சுப்பிரமணிய முதலியாரின் உரையில் கண்ட சிறப்பு நெறிகள் விளக்கப்படுகின்றன. திறனாய்வுப்

போக்கு, பாத்திர நலன் காணல், சிக்கல்களுக்கேற்ற தீர்வு காணல் முதலான சிறப்பு நெறிகள் எடுத்துக் காட்டுடன் விளக்கம் பெறுகின்றன.

நான்காம் பகுதியில் சுப்பிரமணிய முதலியாருக்கு இருந்த இலக்கிய, இலக்கண, சாத்திரப் புலமைகளும்; வழக்கியல், உடலியல், அறிவியல் அறிவுத் திறன்களும் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

இந்நூலின் நிறைவுரையில் நூல்வழி பெற்ற திறனாய்வுக் கருத்துகள் தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

பின்னிணைப்பில் 'சொல் பொருள்' என்ற தலைப்பில் சுப்பிரமணிய முதலியார் கையாண்ட அருஞ்சொற் பொருள் பட்டியல் தரப்பெற்றுள்ளது. அடுத்ததாக சுப்பிரமணிய முதலியார் கையாண்ட நூல்களில் பட்டியலும் தரப்பெற்றுள்ளன.

இறுதியில் துணைநூற்பட்டியலும் இணைக்கப் பெற்றுள்ளது.

குறிப்பு

1. தெ. ஞானசுந்தரம் வைணவ உரைவளம், தாயம்மை பதிப்பகம், சென்னை 1989, ப. 8.

OOO

1

சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வும் பெரியபுராண உரை வரலாறும்

சைவ இலக்கியங்களில் 'காப்பியம்' என்ற அமைப்பில் தலைசிறந்து விளங்குவது 'திருத்தொண்டர் புராணம்' என்ற 'பெரியபுராணம்' ஆகும். அதற்கு உரைகண்டு பெருமை பெற்றவர் சுப்பிரமணிய முதலியார் ஆவார்.

பொதுவாக உரையாசிரியர்களின் வாழ்வினை அறிந்தால் தான் அவர்களின் உரைமேன்மையை உணரமுடியும். ஆகவே சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வினை இக்கட்டுரை விளக்கு கின்றது.

சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வு

பிறப்பு

சுப்பிரமணிய முதலியார் 1878ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20ம் நாள் பிறந்தார். இவருடைய பெற்றோர் பன்னூலாசிரியர் வித்துவான் கந்தசாமி முதலியார்; வடிவம்மை ஆகியோர் ஆவர். இவர் "தொண்டை மண்டல மாங்காட்டிலிருந்து குடியேறிய கொண்டல் கட்டிக் குடியில் நெல் விளையார் மரபினைச்"[1] சார்ந்தவராவார்.

இவரின் தந்தையாரும் சைவத்தொண்டு புரிந்தவராகவும், தமிழ்த் தொண்டு புரிந்தவராகவும் விளங்கியுள்ளார் என்பதை,

"வண்டமிழ் வளர்த்த வேளாண் தலைவன் கந்தனீன்ற காதற்றனயன்"[2] எனச் சிறப்புப்பாயிரம் குறிக்கும்.

கல்வியும் ஞானமும்

சுப்பிரமணிய முதலியார் பள்ளி, கல்லூரிகளின் வழியே பட்டப் படிப்புக் கல்வியினையும், பெருவிருப்பத்தின் காரண

மாகப் பெரியபுராணமும் கற்று, அதன் வழியே சிவஞானத்தையும் பெற்றார்.

கல்வி

சுப்பிரமணிய முதலியார் கோவைக் கல்லூரி வழியாக எப்.ஏ (F.A.) என்ற பட்டப்படிப்பினைப் பயின்றார். இதன் தொடர்ச்சியாக 1903ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் பி.ஏ (B.A.) பட்டப்படிப்பினை கற்றுத் தேர்ந்தார். இத்தேர்வில் தமிழில் மாநில முதன்மைக்காகத் தங்கப்பதக்கம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படிப்பிற்குப் பிறகு பி.எல். பட்டப்படிப்புப் பயின்றார். கோவையில் சிறந்த வழக்கறிஞராக இருந்து சிறப்புப் பெற்றார். இவ்வாறாக இவர் கல்லூரிக் கல்விவழி சிறந்த வழக்கறிஞராக விளங்கினார்.

ஞானம்

ஏட்டுக் கல்வியில் சிறப்புற்று விளங்கிய போதே பெரிய புராணம் கற்றுச் சிவஞானத்திலும் சிறப்புடையவராகச் சுப்பிர மணிய முதலியார் விளங்கினார். இளமைப் பருவந்தொட்டே சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணம் கற்று வருவதில் சிறந்த ஆர்வமுடையவராகத் திகழ்ந்திருக்கிறார் இதனை,

> ‘பெரியபுராணத்திலே எனது இளமை முதல் எனையறியாமல் ஒரு விருப்பம் உண்டாகி வளர்ந்து வந்தது’[3]

என்ற சுப்பிரமணிய முதலியாரின் கூற்றால் அறியலாம்.

1894ஆம் ஆண்டில் அதாவது தமது பதினாறாம் வயதில் முதன் முதலாக சு. திருச்சிற்றம்பலம் என்ற தமிழாசிரியர் வழியாகச் சுப்பிரமணிய முதலியார் முறைப்படி பெரியபுராணப் பாடம் கேட்டார். இக்காலக் கட்டத்தில் இவர் பள்ளிச் சிறுவராய் இருந்ததால் ஓரளவிற்கே பெரியபுராணத்தைக் கற்க முடிந்தது. 1906ல் திருச்சிற்றம்பலனார் இறந்ததும் இக்கல்வி முடிவுபெற்றது.

அதன்பிறகு பன்னிரண்டு ஆண்டுகள் தகுந்த ஆசிரியர் சுப்பிரமணிய முதலியாருக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் அவர் பெரிய புராணம் பயில்வதைக் கைவிடவில்லை.

1918ஆம் ஆண்டில் பேரூரில் சாந்தலிங்க சுவாமிகள் சன்மார்க்க சங்க இரண்டாம் ஆண்டுவிழாவிற்கு, கயப்பாக்கம்

சதாசிவ செட்டியார் என்பவர் வருகை புரிந்தார். அவரைக் கோவை சைவ அன்பர்கள், கோவையில் நாள்தோறும் பெரிய புராண விரிவுரை செய்ய அழைத்தனர். அவரும் விரிவுரை செய்ய இசைந்து 1919ஆம் ஆண்டு விரிவுரையைத் தொடங்கினார்.

இவ்வாறு இவர் விரிவுரை ஆற்றும்போது கையேடு படிக்கும் வாய்ப்பு சுப்பிரமணிய முதலியாருக்குக் கிடைத்தது. கையேடு படிப்பதோடு சுப்பிரமணிய முதலியார் சதாசிவ செட்டியார் சொல்லும் பாடல் நயங்களை மனதிலும், குறிப்பிலும் குறித்துக் கொண்டார். இவ்விரிவுரை 1922ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 11 ஆம் நாள் முடிவு பெற்றது. ஏறக்குறைய மூன்றாண்டுகள் பெரியபுராண விரிவுரை கேட்கும் வாய்ப்பினைச் சுப்பிரமணிய முதலியார், சதாசிவ செட்டியார் வாயிலாகப் பெற்றார்.

மேலும் 1918ஆம் ஆண்டு முதல் சுப்பிரமணிய முதலியார் ஆண்டுதோறும் பன்னிரு திருமுறைகளிலுள்ள எல்லாப் பாடல் களையும் ஓதிவரும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வந்தார். இதனால் பெரியபுராணம் முழுமையும் படிக்கும் வழக்கம் ஆண்டுதோறும் நிகழ்ந்தது.

இவற்றோடு சுப்பிரமணிய முதலியாருக்குத் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் உள்ளிட்ட பல பெரியவர்கள்; பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், வித்வான் ந.மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய ஆய்வாளர்கள் ஆகியோருடன் கலந்து பழகும் வாய்ப்பும் ஏற்பட்டது. இத்தகையவர்களின் உறவால் பெரியபுராணப் பாடல்கள் பலவற்றின் நயங்களை, அவரால் உணரமுடிந்தது.

இத்தகைய பயிற்சிகளே சுப்பிரமணிய முதலியாருக்குப் பின்னாளில் பெரியபுராண உரைசெய்யப் புகுந்தபோது பேருதவி புரிந்தன.

வழக்கறிஞர் பணி

கல்விச் சிறப்பால் சுப்பிரமணிய முதலியார் கோவையில் ஒப்பற்ற வழக்கறிஞராக விளங்கினார். அப்போது இவர் சிறந்த நாட்டுப் பற்றாளரான வ.உ. சிதம்பரம் பிள்ளையின் சிறைக் கொடுமைகளை நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார். இதனால் வ.உ. சிதம்பரனாரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு இவர் செய்த அருஞ்செயல் கருதியே வ.உ. சிதம்பரனாரும் தன் மகன்-மகளாருக்கு இவர் பெயரையும், இவரின் மனைவி பெயரையும் வைத்தார். எனவே வழக்கறிஞராகக் கோவையில் சிறப்புற விளங்கினார் என்பது இதன் மூலம் அறியப்பெறுகின்றது.

தமிழ்ப்பணி

சுப்பிரமணிய முதலியார் தமிழ்ப்பணி செய்வதில் தன்னிகரற்று விளங்கினார். இவர் கோவைக்கிழார் சி.எம். இராமச்சந்திரன் செட்டியாருடன் இணைந்து 1915ல் கோவைத் தமிழ்ச் சங்கம் கண்டார். இச்சங்கம் சைவத்தையும், தமிழையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்தது.

இவர் 1866ல் இவரின் தந்தையார் கந்தசாமி முதலியார் ஏற்படுத்திய 'சைவ பிரசங்க சாலையில்' பல சொற்பொழிவுகள் நிகழ்த்திச் சைவப்பயிர் வளர்த்து அப்பிரசங்க சாலையினையும் வளர்த்தார்.

மேலும் இவர் தேவாரத்தின் மீது கொண்ட விருப்பத்தால் தேவாரப் பாடசாலை வைத்து நடத்தினார். பெரியபுராணத்தின் மீது கொண்ட பற்றினால் 'சேக்கிழார் திருக்கூட்டம்' என்ற அமைப்பினையும் ஏற்படுத்தினார்.

1926 மற்றும் 1929ல் இவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழி ஆணையராக இருந்து தமிழ்மொழி வளரப் பல பணிகள் செய்தார்.

இவற்றோடு காலத்தால் நிலைத்து நிற்கக் கூடிய தமிழ்நூற் பணிகளையும் சுப்பிரமணிய முதலியார் செய்தார்.

இவர் பெருஞ்சாதனையாகப் பெரியபுராணக் காப்பியத்திற்கு ஏழு தொகுதிகளாக விரிவுரை செய்தார். வேறு எந்த இந்திய மொழிகளிலும் இத்துணை பெரிய விரிவுரை இது வரை வெளியாகவில்லை என்பதே இவரின் தமிழ்ப் பணிக்குச் சான்று பயக்கும். இன்னும் பல நூல்களையும் படைத்தார். அவை கீழே தரப்படுகின்றன.

கவி நூல்கள்

1. அவிநாசி கருணாம்பிகை பிள்ளைத்தமிழ்.
2. கந்தபுராணப் போற்றிக் கலிவெண்பா.
3. திருப்பேரூர் இரட்டை மணிமாலை.

உரைநடை நூல்கள்

1. மாணிக்கவாசகர் (அ) நீத்தார் பெருமை.
2. வாகீசர் (அ) மெய்யுணர்தல்.
3. கருவூர்த்தேவர்.
4. சேக்கிழாரும் சேயிழையார்களும்.
5. சேக்கிழார்.
6. செம்மணித்திரள்.
7. அர்த்தநாரீசுவரர் அல்லது மாதிருக்கும் பாதியான்.
8. திருத்தொண்டர் புராணத்துள் முருகன்.

ஆகிய நூல்களைச் சுப்பிரமணிய முதலியார் இயற்றித் தமிழ்ப் பணி ஆற்றியுள்ளார்.

வாழ்வில் நிகழ்ந்த நிலைத்த நிகழ்ச்சி

சேக்கிழார் மீது மிக்க பற்றுக் கொண்டவர் சுப்பிரமணிய முதலியார். இதனை இவரின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று விளக்குகின்றது.

"சுப்பிரமணிய முதலியார் திருப்பேரூர்ப் பட்டிப்பெருமான் ஆலயத்தில் சேக்கிழாரின் திருவுருவினைச் செய்து வைத்து வழி பட விழைந்தார். அதன்படி அத்திருவுருவத்தினை வார்க்க ஏற்பாடு செய்தபோது, அந்த வார்ப்பில் சிறிதளவு தங்கம் சேர்க்கப் பெறல் வேண்டும் என்று வார்ப்பாளர்கள் தெரிவித் தனர். உடனே சுப்பிரமணிய முதலியார் தமது கைக்கடிகாரத்தில் இருந்த ஒரு தங்கப் பதக்கத்தைக் கழற்றிக் கொடுத்து அதனைச் சேர்க்கச் செய்தார். அப்பொற்பதக்கம் சுப்பிரமணிய முதலி யாருக்கும் பி.ஏ. தேர்வில் தமிழில் முதலாவதாக வந்ததற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் தரப்பட்டதாகும்."[4]

இவ்வாறு சேக்கிழாருக்காக எதனையும் தரும் இயல் புடையவராகச் சுப்பிரமணிய முதலியார் விளங்கியுள்ளார்.

பெற்ற பட்டங்கள்

சுப்பிரமணிய முதலியாரின் தொண்டுகளைப் பாராட்டும் விதமாகப் பல பட்டங்கள் அவருக்கு அளிக்கப் பெற்றன. அவற்றில் சிறப்பானவை கீழே தரப்பெற்றுள்ளன.

சிவகவிமணி

சென்னை மாகாணத்தமிழ்ச் சங்கத்தால் தரப்பெற்ற பட்டம்

திருமுறை ஞானபாநு

மதுரை ஆதீனத்தாரால் தரப்பெற்ற பட்டம்

இல்லற வாழ்வு

சுப்பிரமணிய முதலியார் இல்லறத்தையும் நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தவர். இவருக்கு இரு மனைவியர்கள். ஒரு மனைவி பெயர் 'மீனாட்சி' என்பது கிடைக்கப் பெறுகின்றது. மற்றொருவர் பெயர் அறிய முடியவில்லை. ஆண்பிள்ளைப் பேறு இவருக்கு வாய்க்கப் பெறவில்லை. ஒரு மகளார் பிறந்தார். அவரும்[5] அவரது துணைவரும் தற்போது இவரது பெரிய புராண விரிவுரைகளை மறுபதிப்பு செய்துள்ளனர்.

மேலும் இவர் வாழ்வினில் அகத்துறவு பூண்டு சைவத் திருவாழ்வு பெற்று வாழ்ந்தார்.

சிவதீக்கை பெறல்

இல்லற வாழ்வின் போதே சைவநெறிக்கு ஏற்பச் சிதம்பரம் முத்துக்குமாரக் குருக்களிடம் சிவதீக்கை பெற்றார். நாள்தோறும் சிவபூசை செய்து வந்தார். இதனை,

> சிதம்பரம் முத்துக்குமாரக் குருக்கள்
> உணர்ந்து தீக்கை ஒரு மூன்றால்

என ஆறுமுக நாயனார் தமது வாழ்த்துப்பாவில் குறிப்பிடு கின்றார்.

இல்லற விழாக்கள்

வாழ்வில் அறுபதாண்டு கடந்தபோது அதனைப் பெரு விழாவாகச் சுப்பிரமணிய முதலியார் திருக்கடவூரில் கொண் டாடினார்.

பிறகு எழுபதாண்டு கடந்தபோது திருப்பேரூரில் விழா வாகக் கொண்டாடினார்.

இவ்விரு விழாக்களும் இவரின் இல்லறப் பெருமையினை வெளிக்காட்டி நிற்பனவாகும்.

பொதுவாழ்வு

இல்லற வாழ்வில் சிறப்புற்ற சுப்பிரமணிய முதலியார் பொது வாழ்விலும் தொண்டாற்றிச் சிறப்புற்றார். கோவை நகர சபையின் உறுப்பினராக 1922 முதல் 1925 வரை பணியாற்றினார்.

துறவுவாழ்வு

முன்பே அகத்துறவு பூண்ட சுப்பிரமணிய முதலியார், மதுரை ஆதீனத்தின் வழியாகப் புறத்துறவும் பூண்டார். இவர் துறவு பூண்ட பின், 'சம்பந்த சரணாலயத் தம்பிரான்' என்று அழைக்கப்பட்டார்.

இறுதிக்காலம்

மூச்செல்லாம் சைவ மூச்சாகவும், பேச்செல்லாம் பெரிய புராணமாகவும், சிந்தனையெல்லாம் சேக்கிழாராகவும், செய லெல்லாம் தமிழ்த் தொண்டாகவும் வாழ்ந்த சுப்பிரமணிய முதலியார் 24.1.1961 அன்று இறைவனடி நீழல் சார்ந்தார்.

பெரியபுராண உரை வரலாறு

"குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே அறிவுப் பசி தலையெடுக்கின்ற பொழுது, தங்கள் பழம்பெரும் நூல் களுக்குத் தங்கள் காலத்திய வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப விளக்கம் தர அக்காலத்திய அறிஞர்கள் முயலுகின்றனர். அவர் களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை மேலோங்கி நிற்கின்ற பொழுதும், பழமையில் புதுமை காணவேண்டும் என்ற உணர்ச்சித்துடிப்பு உண்டாகின்ற பொழுதும் அவர்கள் பழைய நூல்களுக்கு உரையெழுதுகின்றனர்."[6] என்ற கருத்து உரையெழுதப்படுவதன் தேவையை உணர்த்தும்.

இவ்வாறு உரையெழுத முன்வந்தோர் தனித்தனியாக உரை செய்திருப்பினும் கூட அவை குறிப்பிட்ட ஒரு காலத்தில் நிகழ்ந்தன என்பதைக் காணும்போது உரை எழுதுதல் ஓர் இயக்க மாக நடைபெற்றது எனக் கணிக்கின்றனர் ஆய்வாளர்கள்.

'இவ்வியக்கத்தை 'மீட்டு இயக்கம்' (Return to Classicism) எனக் குறிப்பிடுகின்றார் வையாபுரிப்பிள்ளை.'[7] 'உரைநூற் காலம்' எனக் கூறுவாரும் உண்டு.[8]

இக்காலத்தின் எல்லையினை, 'கி.பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கிப் பதினைந்தாம் நூற்றாண்டின் வரையிலான இடைக் காலத்தில் பழந்தமிழ் நூல்களுக்கெல்லாம் உரையெழுதப் பட்டிருக்கின்றது"[9] எனக் காட்டுவார் தமிழண்ணல்.

பெரிய புராணத்தின் காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற் றாண்டாகும். எனவே பெரியபுராணம் ஆய்வாளர்கள் குறித்துள்ள உரைநூல் காலத்தில்தான் பாடப்பெற்றது என்பது பெறப்படு

கின்றது. ஆகவே பெரியபுராணத்திற்கு உரை, உரைநூற் காலத்தில் தோன்றியிருக்க வாய்ப்பில்லை.

பெரியபுராணத்திற்கு உரை பதினெட்டாம் நூற்றாண்டில் தான் தோன்ற ஆரம்பித்தது. தொடக்கத்திலேயே பெரியபுராணத் திற்கு முழுமையான உரை தோன்றிடவில்லை. "ஒரு நூலுக்கு முதன்முதலில் உரை எழுத முயன்றவர்கள் எடுத்த எடுப்பிலே பெரிய விரிவுரையையோ, விளக்கவுரையையோ எழுதவில்லை. அவர்கள் முதலில் செய்யுளில் உள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுதினர். சொற்களைக் கொண்டு கூட்டிமுடிக்கும் வகையினைச் சுட்டி, 'இன்றியமையாத சில வரலாற்றுக் குறிப்பு களை வரைந்து சில பகுதிகளுக்கு மிகச் சுருக்கமாக உரைநயம் எழுதினர்.' "[10] என்ற கருத்தின்படியே தொடக்க காலத்தில் குறிப்புரைகள், சூசனங்கள் என்ற முறையில் பெரியபுராணத் திற்கு எழுதப்பட்டன. இம்முயற்சி ஒருபுறம் நடந்து கொண் டிருக்க மறுபுறம் 'பெரியபுராண வசனம்' எழுதும் முயற்சியும் நடந்து கொண்டிருந்தது. 'வசனமெழுதுவதிலும்' உரையின் ஒருகூறு இருப்பதால் அதனையும் உரைத்தோற்றமாகக் கொள்ள வேண்டும்.

வசனம் – தோற்றம்

அ. தொழுவூர் வேலாயுத முதலியார் *(1832 – 1889)*

இவர் வள்ளலாரின் தலைமாணாக்கராகவும், சென்னை மாநிலக் கல்லூரிப் பேராசிரியராகவும் இருந்தவர்.

> "இவரே முதன் முதலில் பெரியபுராண வசனம் எழுதி மக்களிடம் பெரியபுராணத்தைப் பரவச் செய்தார்"[11]

என்கிறார். - மு.வை. அரவிந்தன்.

ஆ. ஆறுமுக நாவலர் *(1822–1879)*

ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர். தமிழை யும், சைவத்தையும் இரு கண்களாகக் கொண்டவர். பெரிய புரணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய வற்றிற்கு வசனம் எழுதினார். பெரியபுராணத்திற்கு உரைசெய்த முயற்சியில் இவரின் பங்கு குறிப்பிடத் தக்கது ஆகும். ஏனெனில் சூசனம் என்ற குறிப்புரையை எழுதி வெளியிட்ட முதலாமவர் இவரேயாவார். மேலும் பெரியபுராணத்தினை ஏட்டிலிருந்து அச்சு வாகனம் ஏற்றிப் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும்.

இவர் உபோற்காதம் முதல் காரைக்காலம்மையார் புராணம் வரை சூசனம் எழுதினார். இவரின் இம்முயற்சி முற்றுப் பெறாத தால், பின்னர் யாழ்ப்பாணம் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா அவர்கள் எஞ்சிய பகுதிகளுக்குச் சூசனம் எழுதினார். இச்சூசனம் இப்போது வண்ணப்படங்களுடன் எண்ணூறு பக்க அளவில் ‘மலேஷியா, கோலாலம்பூர் சைவ சித்தாந்த நிலையத்தினரால்’ வெளியிடப்பட்டுள்ளது. இதனுள்,

1. திருமுறை கண்ட புராணம்,
2. திருத்தொண்டர் புராண சாரம்,
3. திருப்பதிகக் கோவை,
4. திருப்பதிக்கோவை,
5. திருத்தொண்டத் தொகை,
6. திருத்தொண்டர் திருவந்தாதி,
7. திருத்தொண்டர் திருநாமக் கோவை,
8. சேக்கிழார் நாயனார் புராணம்,
9. திருமலைப் புராணச் சிறப்புப் பாயிரம்,
10. திருநாட்டுச் சிறப்பு,
11. மனுநீதி கண்ட புராணம்,
12. திருக்கூட்டச் சிறப்பு,
13. தடுத்தாட்கொண்ட புராணம்,
14. அறுபத்துமூன்று நாயன்மார் புராணமும், சூசனமும்,
15. சுந்தரமூர்த்தி நாயனார் புராணச்சூசனம்,
16. அருஞ்சொல் விளக்க அகராதி,
17. சூசனங்களில் மேற்கோள் காட்டிய நூல்கள்,
18. அருஞ்சொல் விளக்க அகராதி,
19. தேவார மூவர் முதலிகள் வழிபட்ட திருக்கோயில் களிலும், ஆற்றிய அற்புதங்களினதும் அட்டவணை,
20. பாட்டு முதற்குறிப்பு அகராதி,[12]

ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ளன. இப்பதிப்பு பிற வெளிநாடு களில் உள்ள பெரியபுராண ஆட்சியினையும், பயில்வையும் காட்டுவதாகும்.

திரு.வி. கல்யாணசுந்தரனாரின் குறிப்புரை (1883–1953)

கல்யாணசுந்தரனார், 1908ல் பெரியபுராணக் குறிப்புரை எழுதத் தொடங்கினார். இவர் 'உலகெலாம்' என்ற முதல் பாடலுக்கு முப்பத்து நான்கு பக்கங்கள் உரை தந்துள்ளார். பாடல் முதலடிகட்குப் பல பக்கங்களில் ஆழ்பொருள் தருவது இவரின் சிறப்பாகும்.

இவர் தந்த குறிப்புரை இவர் இருந்த காலத்திலேயே இரண்டு பதிப்புகளாக வெளிவந்தன. முதல் பதிப்பினை விட இரண்டாம் பதிப்பு திருத்திய பதிப்பாக அமைந்தது. இதனை அவரே தமது வாழ்க்கைக் குறிப்புக்கள் என்ற நூலில்,

"பெரியபுராணம் இரண்டாம் பதிப்பில் புரட்சி நிகழ்ந்துள்ளது. உரிமைப் புரட்சியை நிகழ்த்தி நிலைமையைச் சீர் செய்வது இயற்கையே. என்ன புரட்சி? ஜைனத்தைப் பற்றிச் சைவ உலகில் சில கறைகள் படிந்தன. அக்கறைகள் உரையால் களையப்பட்டன. அக்களையே புரட்சியாயிற்று"[13] என்று குறிப்பிடுகின்றார். இவரின் உரை அரும்பத உரை என்ற அமைப்பில் செய்யப்பட்டதாகும்.

இவரின் உரையைப் பயன்படுத்தி, தற்போது சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் 'திருத்தொண்டர் புராணம் - பெரிய புராணம்' என்ற நூலை வெளியிட்டுள்ளது. இதனுள் மா. பால சுப்பிரமணிய முதலியாரின் அரும்பொருள் விளக்கமும் இடையிடையே தரப்பட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் ஆவார்.

பொழிப்புரைகள்

பெரிய புராணத்திற்குக் குறிப்புரைகள் ஒருபக்கம் தோன்றுகின்ற போதே மற்றொரு பக்கம் பெரியபுராணத்திற்குப் பொழிப்புரைகள் தோன்ற ஆரம்பித்தன.

அ. பெரிய புராணத்திற்கு முதன்முதல் பொழிப்புரை எழுதியவர் மழவை வீரசைவப் புலவர் மகாலிங்க ஐயர் ஆவார். இவர் திருக்குறிப்புத் தொண்டர் புராணம் வரையே பொழிப்புரை எழுதியுள்ளார். ஆகவே இவரின் பொழிப்புரை முற்றுப் பெறாது போயிற்று என்பது பெறப்படுகின்றது.

ஆ. அடுத்து, திருவண்ணாமலை ஆதீனம், ஆறுமுகத் தம்பிரானார் -பெரியபுராண முக்காற் பகுதிக்குப் பொழிப்புரை

கண்டார். இதனுடைய எஞ்சிய பகுதிகளைப் பொம்மபுரம் சிவஞானபாலைய தேசிக சுவாமிகள் ஆதீனம்-இராமலிங்க சுவாமிகள் பொழிப்புரை கண்டு முற்றுப் பெற வைத்தார்கள்.

இ. பெரியபுராணத்திற்குச் சென்னைப் புலவர் சுப்ராயலு நாயக்கர் என்பவரும் பொழிப்புரை ஒன்றினைச் செய்துள்ளார்.

ஈ. ஆலால சுந்தரம் பிள்ளை அவர்களும் ஒரு பொழிப்புரை செய்துள்ளார்கள். இவ்வுரையே மக்களிடத்தில் அதிகமாக அக்காலத்தில் பரவி இருந்தது.

உ. இவை தவிர " 'பெரியபுராண அரும்பத விளக்கம்' என்ற ஓர் உரையும் யாழ்ப்பாணத்தில் நீண்ட காலந்தொட்டே இருந்து வருகின்றது. அது 'செந்தமிழ்' என்ற இலக்கிய இதழ்வழி தமிழகத்தில் வெளிவந்து பரவியது."[14]

இவ்வாறு பெரியபுராணத்திற்கு உரை செய்யப்படும் முயற்சி வளர்ச்சியடைந்தது. இவ்வழியில் வந்த சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணத்திற்கு விரிவான, முழுமையான உரையினைத் தந்துள்ளார்.

சுப்பிரமணிய முதலியாரின் உரை

உரை எழுதும் எண்ணம் தோன்றக் காரணம்

பெரிய புராணத்தினைத் தெளிவாகக் கற்றறிந்த சுப்பிரமணிய முதலியாரை 1930ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் உரையாற்ற அழைத்தது. அதற்கு இணங்கி இவர் 1930ஆம் ஆண்டு திங்கள் 31ஆம் நாள் பிப்ரவரித் திங்கள் 1, 3 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் 'சேக்கிழார்' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார்.

நிகழ்த்திய உரையினை பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பின்னாளில் 'சேக்கிழார்' என்ற நூலாக வெளியிட்டார் சுப்பிரமணிய முதலியார். இதற்குப் பின்னரே பெரியபுராணத்திற்கு விளக்கவுரை காணும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

உரை எழுதுவதற்கான முயற்சிகள்

இவ்வாறு உரை எழுதும் எண்ணம் ஏற்பட்டவுடன் அதற்காகப் பல தரவுகளை சுப்பிரமணிய முதலியார் தொகுக்க ஆரம்பித்தார்; முதலில் மூலப் பிரதிகளைத் தேடித் தொகுத்தார். ஏட்டுப் பிரதிகளையும் அவற்றோடு தொகுத்து வைத்தார். அவர் தொகுத்தவை பின்வருமாறு;

மூலப்பிரதிகள்

1. வித்வான் காஞ்சி சபாபதி முதலியாரவர்கள் முதற்பதிப்பு (1859)
2. மேற்கண்ட பெரியாரின் இரண்டாம் பதிப்பு (1879)
3. சிதம்பரம் இராமலிங்க பிள்ளை பதிப்பு (1879)
4. ஸ்ரீ ஆறுமுக நாவலர்கள் பதிப்பு, முதற்காண்டம் (1884)

பழைய ஏட்டுப் பிரதிகள்

1. "திருவாவடுதுறையினின்று கிடைத்த பிரதி-2
2. தருமபுர ஆதீனப்பிரதி-1
3. சிதம்பரம் மூர்த்திதேசிகர் மடத்துப்பிரதி-1
4. டி.கே. சிதம்பரநாத முதலியார் தந்த நெல்லைப் பிரதி-1
5. சாத்தூர் கந்தசாமி முதலியார் தந்த பிரதி-1
6. சுப்பிரமணிய முதலியார் வீட்டில் இருந்த மிக்ச் சிதைந்த தனி ஏடுகள்
7. மற்ற பிரதிகள்-5

   மொத்தம் 11"[15]

என்று பல மூலப்பிரதிகளைத் தொகுத்து அவற்றிலிருந்து மூலத்தைத் தெளிவாகச் சுப்பிரமணிய முதலியார் வெளிப் படுத்தினார்.

பிறகு சில உரைப்பகுதிகளையும் கண்டு, தொகுத்து அவற் றையும் உரைசெய்யத் தரவுகளாக ஏற்றுக் கொண்டார் சுப்பிர மணிய முதலியார்.

உரைக் கையெழுத்துக் குறிப்புக்கள்

1. கயப்பாக்கம் திரு. சதாசிவஞ் செட்டியார்
2. திரு. இராமநாதஞ் செட்டியார்

உரைப்பிரதிகள்

1. மகாலிங்கையர் பொழிப்புரை
   (திருக்குறிப்புத் தொண்டர் புராணம் வரை)
2. ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரை
3. சுப்ராயலு நாயக்கர் உரை
4. ஆலால சுந்தரம்பிள்ளை உரை
   (முதல் மூன்று சருக்கங்கள்)

ஆகிய உரைகளைத் தொகுத்து அதன் வழியே சுப்பிரமணிய முதலியார் உரை செய்தார்.

உரை எழுதிய காலம்

சுப்பிரமணிய முதலியார் தனது ஐம்பத்தெட்டாம் வயதில் அதாவது 1935ல் உரை எழுதும் பணியினைத் துவக்கினார்; உடல் நலக்குறைவு உள்ளிட்ட பலவித இடையூறுகள் இருந்த போதிலும், பதிமூன்று ஆண்டுகளாக உரையினை முழு மூச்சாகச் செய்து வந்தார். இதன் தொடர்வாக 13.7.1948ல் உரை எழுதும் கையெழுத்துப் பணியினை நிறைவு செய்தார் சுப்பிரமணிய முதலியார்.

உரை வெளியீடு

உரை எழுதியதோடு மட்டும் நின்றுவிடாமல் அதனைக் 'கோவைத் தமிழ்ச்சங்க' வழி வெளியிடவும் வைத்து, அவ்வெளி யீட்டுப் பணியிலும் வெற்றி கண்டார் சுப்பிரமணிய முதலியார்.

பெரியபுராண உரையின் முதல் தொகுதி 15.9.1937ல் அச்சிடப் பெற்று வெளியிடப்பட்டது. உலகப்போர் இரண்டின் இடையீடு, பணப்பற்றாக்குறை, தாள் பற்றாக்குறை ஆகிய பல காரணங்கள் இருந்த போதிலும் எல்லாப் பகுதிகளும் அச்சிடப் பெற்றன. பெரியபுராண நிறைவு உரைப்பகுதி 6.5.1954 அன்று வெளியிடப்பட்டது. இந்நிறைவு வெளியீட்டுப் பணி ஏறக்குறைய 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

உரை செய்ய உறுதுணை புரிந்தோர்

பொருளாலும் உழைப்பாலும் சுப்பிரமணிய முதலியா ருக்குப் பலர் உதவி செய்துள்ளனர். அவர்களையெல்லாம் அவ்வப்போது தம் உரைப் பகுதிகளில் குறிப்பிடுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

இந்நூல் வெளிவர சென்னைப் பல்கலைக் கழகத்தினர், சைவத் திருமடங்கள், சண்முகஞ் செட்டியார் முதலான பலர் பொருளுதவி செய்துள்ளனர்.

முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள், சிதம்பரம் ந. சிவப் பிரகாச தேசிகர், பறங்கிப்பேட்டை பெரியசாமிப் பிள்ளை, கயப்பாக்கம் சோமசுந்தரஞ்செட்டியார், சண்முக சுந்தரஞ் செட்டியார் ஆகியோர் இதற்கு உழைப்பால் சுப்பிரமணிய முதலியாருக்கு உதவி செய்துள்ளனர்.

இவரின் உரைகளை அச்சுவழி தந்த சிறப்பு சாது அச்சுக் கூடத்திற்கு சேரும்; வெளியிட்ட பெருமை கோவைத் தமிழ்ச் சங்கத்திற்கு உரியதாகும்.

இவ்வாறு பல வகையாலும் முயன்று, நுணுகி, ஆராய்ந்து உரைகண்டு சிறப்புற்றார் சுப்பிரமணிய முதலியார். இவரின் உரை ஆழமும் அகலமும் உடையதாக அமைந்ததாகும்.

இவ்வாறு,

1. வசனமெழுதுதல்,
2. குறிப்புரை சூசனம் எழுதுதல்,
3. பொழிப்புரை எழுதுதல்,
4. முழுதுமான, விரிவான, ஆழமான உரை எழுதுதல்

என்ற நிலைகளில் பெரியபுராண உரை எழுதுதல் வளர்ச்சி அடைந்தது எனக் காட்டலாம்.

இப்பகுதிவழி பெறும் கருத்துகள்

1. இக்கட்டுரைப் பகுதியில் சுப்பிரமணிய முதலியாரின் வாழ்க்கை நிலை - பிறப்பு, கல்வி, ஞானம், தமிழ்ப்பணி, இல்லற வாழ்வு, பொதுவாழ்வு, துறவு வாழ்வு, இறுதிக் காலம் ஆகிய பகுப்புகளின் வழியாக விளக்கப் பெற்றுள்ளது.

2. சுப்பிரமணிய முதலியாரின் உரைப்பணி என்ற அடிப் படையில் இக்கட்டுரையின் இரண்டாவது பகுதியில் பெரிய புராண உரைத்தோற்றம், கிடைக்கப்பெற்ற ஆதாரங்களைக் கொண்டு முதல் நிலையில் தரப்பட்டுள்ளது. இரண்டாவது பகுதியாகச் சுப்பிரமணிய முதலியாரின் உரைத்தோற்றமும், உரைத்தோற்றத்திற்கான சூழலும், பிறர் தந்த ஊக்கங்களும், வெளியீடும் சுப்பிரமணிய முதலியாரின் அகச்சான்று கொண்டே விவரிக்கப்பட்டுள்ளன.

குறிப்புகள்

1. மது.ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, டிசம்பர் 1987, ப. 813.
2. சி.கே. சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ). தி.தொ.பு.மு.ப. கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்பத்தூர், 1937, ப. 9.
3. சி.கே. சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ). தி.தொ.பு.மு.ப. கோவைத் தமிழ்ச் சங்கம், கோயம்பத்தூர், 1937, முன்னுரை, ப. 11.

4. தி.தொ.பு.ஏ.ப. பிற்சேர்க்கை, பக். 16-17, (சோமசுந்தரதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளிய தலைமை உரையில் இருந்து எடுக்கப்பட்டது).
5. மது.ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், ப. 814.
6. க.த. திருநாவுக்கரசு, திருக்குறளுக்கு உரை வேண்டுமா? இதழ், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1971, ப. 197.
7. ச. வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச்சுடர் மணிகள், பாரிநிலையம், சென்னை, 1968, ப. 197.
8. தமிழண்ணல் (பு.பெ), உரைவிளக்கு, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை, 1985, ப. 6.
9. மேற்படி.
10. இரா. மோகன் & நெல்லை சொக்கலிங்கம், உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், ஆகஸ்ட். 1985, ப. 14.
11. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், ஏப்ரல், 1968, ப. 408.
12. விளம்பர அறிக்கை, மலேசிய கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலையம், கோலாலம்பூர், ப. 1.
13. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், ப. 408.
14. அ.ச. ஞானசம்பந்தன், (ப.ஆ), தி.தொ.பு. சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை, முன்னுரை (தொகுக்கப்பட்டது).
15. சி.கே. சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ) தி.தொ.பு.மு.ப. முன்னுரை (தொகுக்கப்பட்டது)

OOO

2

சுப்பிரமணிய முதலியாரின் உரை இயல்புகளுள் பொதுநெறிகள்

பெரியபுராணத்திற்குக் குறிப்புரை, விரிவுரை, அரும்பத உரை எனப் பல உரைகள் செய்யப்பட்டன. அவற்றுள் சுப்பிரமணிய முதலியாரின் உரைமட்டுமே முழுமையான உரையாக அமைந்துள்ளது. அவரின் உரை விரிவு, விளங்கிய பொருள், விகற்பம், தொன்முறை, தொகுப்பு, ஆய்வு ஆகிய உரைப் பண்புகளைக் கொண்டதாகும். இதனையே சிறப்புப் பாயிரம்,

> விரிவுரை தம்முள் விளங்கிய பொருளொடு
> பின்னோர் வேண்டும் விகற்பமனைத்தும்
> தொன்முறை வழாது தொகுத்தும் விரித்தும்
> ஆய்ந்துற நோக்கி அழகுற அமைத்து
> எய்ந்துள பொருளெலா மெளிதிற்றெளிய
> தருகென வகுத்தனன்[1]

என்று உரையின் தன்மையைக் குறிப்பிடும்.

மேலும் இவரின் உரை நன்னூல் காட்டும் பதினான்கு உரைப் பண்புகளைக் கொண்டதாகவும், மூலநூல் கருத்திற்குச் சிறிதேனும் முரண்படாததாகவும், நேரடி அணுகுமுறை கொண்டதாகவும் பிற உரையாளர்களின் கருத்தைச் சுட்டிச் செல்வதாகவும் அமைகின்றது எனலாம்.

ஆகவே இக்கட்டுரை நன்னூல் காட்டும் பதினான்கு உரைப் பண்புகள் சுப்பிரமணிய முதலியாரின் உரையில் அமைந்துள்ள பாங்கினைச் சுட்டிச் செல்கிறது. அதனோடு அவர் மேற்கொண்ட பொது நெறிகளையும் அடுத்த பகுதியாக கொண்டுள்ளது.

இவ்விரு பகுதிகளையும் உற்று நோக்குகின்ற போது, சுப்பிரமணிய முதலியாரின் உரை இயல்புகளுள் பொது நெறி தெளிவாகப் புலப்படும்.

முதலில் நன்னூலின் உரைப் பண்புகளோடு சுப்பிரமணிய முதலியாரின் உரையைப் பொருத்திக் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

நன்னூல் காட்டும் உரைப்பண்புகள்

தொல்காப்பியம் தொடங்கி நன்னூல், இறையனார் அகப் பொருள் உரை, நம்பியகப்பொருள், வீரசோழியம் ஆகிய அனைத்து நூல்களிலும் உரைபற்றிய விரிவான விளக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. ஆயினும் உரை பற்றிய உறுப்புகளை நன்னூல் மட்டுமே தெளிவாக விரிந்துரைக்கிறது.

> உரையின் உறுப்புக்கள் அனைத்தும் நன்னூலார் கூறும்
> பதினான்கு உறுப்புகளுள் அடங்கும்.[2]

என்ற கருத்தும் மேற்சொன்ன கருத்திற்கு வலிமை சேர்ப்பதாகும். எனவே நன்னூல் காட்டும் உரையின் பொதுப் பண்புகளைக் கொண்டு சுப்பிரமணிய முதலியாரின் உரையினை திறனாய்வது ஏற்புடையதாகின்றது.

> பாடங்கருத்தே சொல்வகை சொற்பொருள்
> தொகுத்துரை யுதாரணம் வினாவிடை விசேடம்
> விரிவ திகாரம் துணிவு பயனொடு
> ஆசிரியவசன மென் றீரே ழுரையே[3]

என்பது நன்னூல் நூற்பாவர்கும். இதன் வழி உரைக்கு,

1. பாடங் காட்டல்
2. கருத்துரை
3. சொல்வகை
4. சொற்பொருள்
5. தொகுத்துரை
6. உதாரணம்
7. வினா
8. விடை
9. விசேடம்
10. விரிவு
11. அதிகார வரவு காட்டல்
12. துணிவு
13. பயன்
14. ஆசிரிய வசனம்

என்ற பதினான்கு பண்புகள் தேவை. அதன்படி பதினான்கு பண்புகளையும் தனித்தனியே சுப்பிரமணிய முதலியார் உரையோடு பொருத்திக் காண்பது சிறப்புடைத்தாம்.

பாடங்காட்டல்

பாடங்காட்டல் என்பது மூலபாடம் எடுத்துரைத்தலாகும். மூலபாடத்தில் பல நிலைகளில் பேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன. சுவடியிலிருந்து இலக்கியம் அச்சுவழி மாற்றம் பெறுகின்ற போது பெரும்பாலான பாடபேதங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இவை எழுதுவோரால் ஏற்படும் பிழைகள், வாய்மொழித் தாக்கத்தால் ஏற்படும் பிழைகள் ஆகியனவாக அமைகின்றன. அத்தகைய பாடபேதங்களைக் களைந்து உண்மையான மூலபாடத்தைக் காட்டும் பொறுப்பு உரையாசிரியரைச் சார்கின்றது.

சுப்பிரமணிய முதலியாரும் தமது உரையில் உண்மையான பாடத்தைக் காட்டப் பாடபேதங்களை எடுத்துரைக்கின்றார். இவர்தம் உரையில் பாடபேதங்கள் பாடல் உரையின் கடைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. பாடபேதங்களும் சொற் பேதங்களாகவே அமைந்துள்ளன. மற்ற உரைகளைப் போல பாடபேதங்கள் பொருட் பொருத்தம் கூறுவதாகவோ, காரணம் காட்டுவதாகவோ அமையவில்லை. கீழுள்ள எடுத்துக்காட்டுகள் வழி இதனை நிறுவலாம்.

அ. "பெருமைசேர்" என்பதற்கு "பெருமைசூழ்" என்பதும் பாடம் (42)

ஆ. "துணர்மலர்" என்பதற்கு "துணைமலர்" என்பதும் பாடம் (158)

இ. "நிகழவொரு" என்பதற்கு "நிகழ்வதொரு" என்பதும் பாடம் (3399)

ஈ. "ஈண்ட" என்பதற்கு "ஈண்டு" என்பதும் பாடம் (3819)

உ. "தம்மை முகநோக்கி" என்பதற்கு "தம்மை நோக்கியந்த" என்பதும் பாடம் (4236)

எனவே சொற்பாட பேதங்காட்டும் நிலையிலேயே சுப்பிரமணிய முதலியார் பாடபேதங்களை கண்டுள்ளார். என உணர முடிகின்றது.

கருத்துரைத்தல்

கருத்துரைத்தல் என்பதற்கு "தாற்பரியத்தைச் சுருக்கமாக எழுதுங் கருத்துரையும்" எனப்பொருள் கொள்கின்றது

காண்டிகையுரை.[4] பாடலின் உட்கருத்தைச் சொல்வது கருத்துரைத்தல் எனக் கொள்ளலாம். சில இடங்களில் சுப்பிரமணிய முதலியார் பாடல்களின் கருத்துக்களைத் தருதல் என்ற நிலையில் கருத்துரைத்தல் உரைப் பண்பைக் கையாண்டுள்ளார்.

அ. "நம்பிகளது தியானமே சிவலோகத்தைத் தரும் சிவ புண்ணியமாம்"[5]

ஆ. "நிலாவை மலர வைத்தலிலே அது பிறர் எவராலும் செய்தற்கு அருமையினால் வரம்பிலா ஆற்றலுடைமையும் கருணையே பற்றிச் செய்தமையினால் பேரருளுடைமையும் சுத்தமாக்கியமையினால் தூய உடம்பினனாதலும் இவ்வாறு ஏனையவும் ஆக இறைவனது எண்குணங்களும் குறித்தவாறு."[6]

இ. "ஆளுடைய நம்பிகள் அவதரித்தல் பயனாகச் சிவபக்தி உலகில் அன்பின் துணையாலே ஓங்கி இருவினைகளைக் களைந்து ஞானம் பெருக்கிச் சிவானந்தத்தைப் பெருக்கிற்று என்பது கருத்தாகக் கொள்வதுமாம்."[7]

ஈ. "தளர்நடைப் பருவஞ்சேர்ந்த அவர் இளமைப்பருவம் அடைந்தமை ஒரு பாட்டாலும், அதனின்றும் உரிய விளையாட்டும், பாட்டும் முதலிய பயிற்சி பெற்று வளர்ந்த வளர்ச்சி அடுத்த பாட்டாலும் அவ்வளர்ச்சி நிறைந்து பெண்மை தெருண்ட முற்றியநிலை அதற்கடுத்த பாட்டாலுங் கூறினார். முற்கூறியது பிள்ளைமைப் பருவம். அடுத்தது பேதைமைப் பருவம், அடுத்தது அரிவைப் பருவம், தொடர்ந்து செல்லும் வளர்ச்சியை ஒரு தொடர்பாய்த் தொடர்ந்து முடியும் பாட்டுகளாற் குறித்த அழகை நோக்குக."[8]

இவ்வாறு கருத்துரைத்தல் என்ற உரைப்பண்பினைச் சுப்பிரமணிய முதலியார் கையாண்டுள்ளார். இவரின் உரையில் கருத்துரைத்தல் என்பது பாடல் உட்கருத்தோடு, பாடல் தொடர்பினையும், பாடல் அழகினையும் சுட்டுவதாக அமைந்துள்ளது.

சொல்வகை

சொற்களைப் பிரித்து உரைசொல்லும் முறை சொல்வகை எனப்படும். "சொற்களுக்கு இலக்கணம் முதலியன உரைத்தலென்பாரும் உளர்"[9] என மற்றொரு உரையும் நன்னூல் காண்டிகையுள் காணலாகிறது. எனவே சொல்வகை என்பதை,

1. சொற்களைப் பிரித்து உரைசொல்லல்
2. சொற்களின் இலக்கணவகை கூறிப் பிரித்தல்

என்ற இரண்டாகப் பகுத்துக் கொண்டு உதாரணங்களைக் காணலாம்.

சொற்களைப் பிரித்து உரைசொல்லல்

புணர்ச்சி விதிப்படி சொற்களைப் பிரித்து உரைகாண்பது என்பது இவ்வகையாகும். சுப்பிரமணிய முதலியார் உரையில் புணர்ச்சிவிதி வழி சொற்பிரித்து உரைசொல்லும் முறை காணப் படவில்லை. ஆனால் நீண்ட சொற்களைப் பிரித்துப் பிரித்துப் பொருள் காணும் முறையைக் காணமுடிகின்றது.

அ. "காலிரும் பகடு போக்கும்" என்பதற்கு, "கால்+இரும்+பகடு+போக்கும்" (74) என்று பிரித்துக் கொண்டு பொருள் காணுகின்றார்.

ஆ. "அங்கனர்" என்பதற்கும் (147) "அம்+கன்னர்" என்று பிரித்துக் கொண்டு பொருள் கூறுகின்றார்.

இ. "மற்ற மறையவன்" என்பதற்கும் (208) "மற்று+அ+மறை யவன்" என்றே பிரித்துப் பொருள் காணுகின்றார்.

ஈ. "எண்ணில் நிதி" என்பதற்கு "அளவில்லாத நிதியம்" எனப் பொருள் கொண்டு அதற்கடுத்து இரட்டுற மொழிதலால் "எண்+நில்" என்று பிரித்து, "தமது எண்ணத்தில் கருத்தில் நின்ற என்றலும்" எனப் பிரிக்காமலும், பிரித்தும் பொருள் காணும் நிலையையும் காணமுடிகின்றது.

உ. "மேரு சிலை வளைத்த" என்பதற்கும் மேருவைச் சிலை (வில்லாக) யாக வளைத்த; என்றும் மேருவாகிய சிலை (மலை) யினை வளைத்த என்றும் இரு வகையில் பொருள் காணுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

எனவே சொற்களைப் பிரித்து உரைகாணும் நிலையில் 1. சொற் களை எளிதாகப் பிரித்துப் பொருள் கூறல். 2. இரட்டுற மொழி தலாகப் பொருள் கூறல் என்ற இரண்டு முறைகள் பின்பற்றப் பெற்றுள்ளன.

சொற்களின் இலக்கணவகை கூறிப்பிரித்தல்

சொல்வகை என்பதற்குச் சொற்களின் இலக்கணவகை கொண்டு உரைசொல்லலும் உண்டு. அவ்வழிப்பட்ட நிலை யிலும் சுப்பிரமணிய முதலியார் உரை கண்டுள்ளார்.

சொற்களைப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நால்வகைப் படுத்திக் காணுகின்றது. தொல்காப்பியம். அந்நான்கில் சுப்பிரமணிய முதலியாரின் உரையில் பெயர்ச்சொல் அமைவிற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளதை உணரமுடிகின்றது. மற்றையச் சொற்களுக்கு ஓரளவிற்கு மட்டுமே இடம் தரப்பட்டுள்ளன.

பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் என்பது பெயரைச் சுட்டி, வேற்றுமை ஏற்று, காலங்காட்டாது வருவதாகும். இவ்விலக்கணப்படி அமைந்த பெயர்ச் சொற்களைத் தொகுத்துப் "பெயர் விளக்கம்" என்ற தொகுப்பாக முன்னிணைப்பில் தந்துள்ளார் சுப்பிரமணிய முதலியார். ஏனென்றால் பெரியபுராணத்தில் அடியார் பெயர்கள், அவர்தம் ஊர்ப்பெயர்கள், அவர்தம் நாட்டின் பெயர்கள் எனப்பல பெயர்கள் இடம்பெறுகின்றன. அவற்றைத் தெளிவாக உணர்ந்தால்தான் மூலநூலைத் தெளிவாகக் கற்கமுடியும் என்று கருதிய உரையாசிரியர் அவற்றை முன்னிணைப்பாகத் தருகின்றார்.

"பெயர்விளக்கம்" என்ற முன்னிணைப்பில் சில வரைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. அவை,

1. அகரநிரல்படுத்திப் பெயர்களைக் கூறல்
2. ஒருவர் குறித்த பல பெயர்களையும் ஒரே இடத்தில் சுட்டுதல்
3. பெயர்கள் பயின்ற பாடலில் எண்ணையும் சுட்டல்
4. பெயரைப் பற்றிய சிறுகுறிப்பு தருதல்

என்பனவாகும். இஃது உரையாசிரியரின் சொல் பிரித்துணர்த்தும் திறத்திற்குச் சான்றாக அமைகின்றது.

"சூரியன்-ஞாயிறு (26) செங்கதிரவன் (10) வெங்கதிரோன் (98) கதிரவன் (159) இரவி (228) ஏற்பரித்தேரோன் (303) பகல் (307) கதிரோன் (326)-ஒன்பது கோள்களில் இராசகிரகம் எனப்படுவர். உலகிற்கு ஒளியும், சூடும் தந்து தழைக்கச் செய்து காப்பவர். சிவபெருமானது வலது கண்ணானார். இவரினின்றும் வருவது சோழமரபு,"[10] என்ற "பெயர் விளக்கத்தில்" இடம்பெரும் பகுதியைப் பெயர்ச்சொல்லுக்கு முக்கியத்துவம் தரும் உரையாசிரியர் பண்பினுக்கு எடுத்துக்காட்டாக உரைக்கலாம்.

மேலும், "பெயர் விளக்கம்" என்ற பகுதியைப் பெரிய புராண "பெயர் அகராதி" என்றே கொள்ளலாம்.

பெயர்ச்சொல்லோடு அதன் துணைவகைகளையும் சுப்பிர மணிய முதலியார் உணர்த்தியுள்ளார். அவ்வகையில் கீழே, தொழிற்பெயர், ஆகுபெயர், சுட்டிய திறத்திற்கு எடுத்துக் காட்டுகள் தரப்பெற்றுள்ளன.

தொழிற்பெயர்

தொழிற்பெயர் என்பது ஏதேனும் ஒரு தொழிலை விளக்கி நிற்கும் பெயராகும்.

பெரியபுராண மூலத்தில் தொழில் பெயர் இடம்பெறு கின்றபோது அதனைச் சிறப்பாகத் தனியாக எடுத்துக் காட்டிச் சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடுகின்றார்.

1. "அலை-முதனிலைத் தொழிற்பெயர்"[11]
2. "அரி-நெற்கற்றை-முதனிலைத் தொழிற்பெயர்"[12]

இவற்றைத் தொழிற்பெயரைச் சுட்டி உரைக்கும் பண்பிற்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

ஆகுபெயர்

ஒன்று மற்றொன்றுக்கு ஆகி வருதல் ஆகு பெயராகும்.

ஆகுபெயரையும், ஆகுபெயரின் சிலவகைகளையும் தமது உரையின் இடையே குறிப்பிட்டுக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

1. "கடிமணம்" - இங்கு மணக் கூட்டத்தைக் குறித்தது "ஆகுபெயர்"[13]
2. "நரை" - "நரைமயிர் ஆகுபெயர்"[14]
3. "தீர்த்தம்" - "தூய்மை என்பது அதனுடைய நீருக்கு ஆகி மேலும் அந்நீர் நிற்கும் குளத்துக்காகி வந்தது இருமடி ஆகுபெயர்."[15]

இவ்வாறாக ஆகுபெயரை, அதன் வகைகளைச் சுட்டும் பண்பிற்குச் சான்றுகள் காட்டலாம்.

வினைச்சொல்

வினைச்சொற்கள் காலங்காட்டும் இயல்புடையன. வேற்றுமை ஏற்காதன. இத்தன்மை உடைய வினைச்சொற்களை

யும், அதன் வகைகளையும் சுப்பிரமணிய முதலியார் சுட்டிச் செல்லத் தவறவில்லை. வினைமுற்று, செய்வினை, செயப்பாட்டு வினை, எச்சம் ஆகியனவற்றை உரையில் சுட்டும் இயல்பிற்குக் கீழே சான்றுகள் தரப்பட்டுள்ளன.

வினைமுற்று

"சேரனே - எய்தினார். வினைமுற்று - முன்வந்தது செயல் முற்றின விரைவு குறித்தது"[16] என்று வினை முற்றின் இயல்பைக் காட்டியுள்ளார்.

செயப்பாட்டு வினை, செய்வினை

"நீர் பொழியப்பட்டு என்னும் செயப்பாட்டு வினை பொழிந்தது எனச் செய்வினையாக நின்றது"[17] என்று செயப் பாட்டு-செய்வினைத் திரிபைச் சுப்பிரமணிய முதலியார் காட்டி உள்ளமை இங்கு காணத்தக்கதாகும்.

எச்சம்

முடிவு பெறாதவை எச்சம் எனப்படும். அவ்வகையில் வினைமுடிவு பெறா எச்சங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

1. "செய்ய-காரணப் பொருளில் வந்த வினையெச்சம்"[18]
2. "என்றானது-என்றது வினைமுற்று எச்சப் பொருளில் வந்தது."[19]
3. "கூட-காரணப் பொருளில் வந்த வினையெச்சம்"[20]

என்றவாறு சுப்பிரமணிய முதலியார் வினைச்சொல்லின் வகை அமைப்புகளைக் காட்டியுள்ளார்.

இடைச்சொல்

இடைச்சொல் என்பது தனித்தியங்கும் இயல்பின்றிப் பெயர்ச்சொல்லோடும், வினைச்சொல்லோடும் சார்ந்து வருவ தாகும். இவை வேற்றுமை உருபு, அசைச்சொல் சாரியை எனப் பலவகைப்படும். அவற்றுக்கென சில சான்றுகளைக் காட்டலாம்.

1. "ஆல்-அசை"[21] என்பது அசைநிலைக்கும்,
2. "இன்-சாரியை"[22] என்பது சாரியைப் பயன்பாட்டிற்கும் உரிய எடுத்துக் காட்டுகளாகும்.

இவ்வாறு சொல்வகை என்ற உரைப்பண்பிற்கு ஏற்ப, 1. சொல் பிரித்துப் பொருள் காணும் நிலையையும், 2. பெயர், வினை

இடைச்சொற்களைக் காட்டி உரைசொல்லும் பாங்கினையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் காணமுடிகிறது.

சொல் பொருள் உரைத்தல்

சொல்லுக்குப் பொருள் கூறுவது உரையாசிரியர்களுக்குத் தேவையான இன்றியமையாத ஒரு கூறாகும். பொருள் விளங்காத சில பல அரிய சொற்களுக்கு பொருள் உரைக்கும் நிலை உரையாசிரியருக்குத் தேவையான ஒன்றாகும். அவ்வழியில் சுப்பிரமணிய முதலியாரும் அரிய சொற்களுக்கு ஆழமான பொருள்களைத் தந்துள்ளார்.

அவ்வாறு பொருள் காட்டும்போதும் சில வரையறைகளைச் சுப்பிரமணிய முதலியார் கையாண்டுள்ளார்.

1. முதலில் சொல்லுக்கு நேரடிப் பொருள் உரைத்தல்.
2. பிறகு அச்சொல்லை விளக்குதல்.

என்ற இரண்டு அமைப்புகளைச் சொல் பொருள் உரைக்கும் நிலையில் காணமுடிகின்றது.

அ. மறைமுந்நூல் (152)

மறைவிதிவழி வேத இதய மந்திரமாகிய காயத்திரி மந்திர உபதேசத்தோடு தாங்கும் முந்நூல். காயத்திரி என்பதற்கு அடைந்தோரது வினைமுறையை அறுத்துச் சென்மமிலாது செய்வது என்று பொருள்.

ஆ. திருக்களிற்றுப்படி (251)

யானைத் துதிக்கை வடிவுடையனவாகிய திரணைகள் இரண்டு புறமும் அமைந்துள்ள ஐந்துபடிகள். இவ்வைந்தையும் கடந்து சென்றால் அருட்பெருங் கூத்தனைக் காணலாம். களிற்றுக்கை சூழ்ந்தமையால் இப்பெயர் பெற்றது. களிற்றுக்கை பிரணவத்தையும், ஐந்து படிகள் திருவைந்தெழுத்தையும் குறிக்கும்.

இ. சலம் பெருகும் (3325)

சலம்-கங்கையாறு; பெருகுதலாவது பெருகிப் புகுந்த, சிறு பனி போலாகச் செறிந்து பின் உலகிற்கேற்பப் பெருகி வீழ்தல்.

ஈ. மயங்குமாலை (3456)

“சூரியன் அத்தமனமானபின் ஒளிமயங்கி இருள்புகுதும் அந்திவேளை, கண் மயங்கும் நேரம், காட்டுமொலி குறைதலாற்

கண்பார்வை மயங்கும் கண்ணின் மயக்கத்தை அது உளதாக்கும் நேரத்தின் மேலேற்றிக் கூறியது.

இவ்வாறன்றி மயங்குதல் கலத்தல் என்று கொண்டு (இரவும் பகலும்) மயங்கின மாலைக் காலம் என்பாரும் உண்டு.

உ. வாசநீர் (3898)

இறைவர்க்கும், பெரியோர்க்கும் பாத்தியத்துக்காக விதிப்படி உள்ள நீர், மலர்களும் வாசப் பண்டங்களும் பெய்து அமைத்தல் வேண்டும் என்பது விதி; அவ்வாறு அமைக்கப்பட்ட வாசநீர்.

ஊ. இன்ப மைந்தன் (4236)

இல்லறத்துக்கு நன்கலமாய் இன்பந் தரத்தக்க மகன். மகன் இறந்து பல காலமாகியும் இங்கு இன்ப மைந்தன் என்றது அவன் மீண்டு உயிர் பெற்று எழுந்து இன்பந்தரவுள்ள நிலையில் திருஅருளின் முற்குறிப்பு.

இவ்வாறு சொல்லுக்கு நேரடிப் பொருளையும், விளக்கப் பொருளையும் தந்து விளக்கமளிக்கின்றார் சுப்பிரமணிய முதலியார். மேலும் பல சொற்களுக்குத் தரும் பொருள் விளக்கங்கள் பட்டியலிடப்பட்டுப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

தொகுத்துரை

தொகுத்துரை என்பது சொல்லைத் தனித்தனியாகக் காட்டிப் பொருளெழுதாமல் தொகுப்பாக எழுதும் பொழிப்புரை ஆகும். சுப்பிரமணிய முதலியாரும் இவ்வாறு பொழிப்புரை கூறும் பண்பினைக் கையாண்டுள்ளார்.

எல்லாப் பாடல்களும் பெரும்பாலும் சொல் பொருள் விளக்கங்களைக் கொண்டுள்ளன. ஆனால் வெளிப்படையாகப் பொருள் விளங்கும் பாடல்களுக்கு உரையாசிரியர் சொல் பொருள் விளக்கம் தரவில்லை. அதற்கு மாற்றாகப் பொழிப்புரை எழுதுகின்றார். பொழிப்புரை எழுதும் போது அதனைத் தெளிவாக, "வெளிப்படை" எனத் தலைப்பிட்டு எழுதுகின்றார். எனவே, வெளிப்படையாகப் பொருள் விளங்கும் பாடல்களுக்குத் தொகுப்புரையினைச் சுப்பிரமணிய முதலியார் எழுதியுள்ளார் என அறியலாம்.

அ. வெளிப்படை (3338)

திருமாலும், பிரமதேவனும் தொடர்ந்து அறிதற்கரியவராய் நீண்டு நின்ற வெற்றியுடைய இளைய இடபத்தைக் கொடிமேல்

உயர்த்திய இறைவர் முன்னாளில் அன்று திருவெண்ணெய் நல்லூரிலே வேதியர் தலைவராக வெளிவந்து நின்ற சபையார் முன்பு வழக்குப் பேசி, நேரே முன்னைத் தொடர்புபடத் தடுத்து ஆட்கொள்ளப் பெற்றவராகிய நம்பிகள் தாமே இன்று இப்பதியினில் எழுந்தருளும் பெரும்பேறு பெற்றோம் என்று உட்கொண்டு மதில் சூழ்ந்த காஞ்சிபுர நகரில் வாழ்வார்கள்.

ஆ. வெளிப்படை (157)

(அவ்வாறு ஏற்றுக் கொண்ட மணமகள் வீட்டு) மைந்தர்கள் மணநாளோலை பெற்று உறுதியான மகிழ்ச்சியினாலே அத் திருமணச் செய்தியை மேலும் மேலும் எல்லார்க்கும் எடுத்துச் சொல்லி மணத்திற்குரியனவாய் முன்னர்ச் செய்யப் பெற வேண்டிய எல்லாச் சுபகாரியங்களையும் விளக்கமுற விரும்பிச் செய்வார்களாயினர்; எல்லாவற்றாலும் குறை சொல்லக் கூடாத வகையாலே பூமாலைகளாலே அலங்கரிக்கப் பெற்ற பந்தர் அமைத்து அதிற் கூடி முளைத்தரிக்கும் சடங்கினைச் செய் தார்கள்.

இ. வெளிப்படை (160)

காலைக் கடன்களை முடித்தபின் சோதிடர்கள் குறித்த நல்ல வேளை வருவதற்கு முன்னாகவே, விதிப்படிச் செய்யும் மணக்கோலம் கொள்வதற்காகப் பூணூல் அசைந்து விளங்கும் மார்பினையும் நுணுகிய கேள்வியும் உடைய மேலோராகிய நம்பியாரூரர் மணிமாலையும், மலர் மாலையும் விளங்கத் திருமஞ்சன சாலையிற் புகுந்தார்.

என்றவாறு சுப்பிரமணிய முதலியார் எளிதில் பொருள் விளங்கும் பாடல்களுக்குச் சொற்பொருள் விளக்கம் தராமல் வெளிப்படை என்ற அமைப்பில் தொகுப்புரை (அ) பொழிப் புரை தந்துள்ளமையை அறியமுடிகின்றது.

உதாரணங்காட்டல்

இது நன்னூல் காட்டும் ஆறாவது உரைப்பண்பாகும். தன் கருத்தை வலியுறுத்த எண்ணிய சுப்பிரமணிய முதலியார் பல இலக்கண இலக்கிய நூல்களில் இருந்தும், அனுபவச் செயல்களி லிருந்தும் எடுத்துக்காட்டுகளை எடுத்துரைப்பார். இதுவே உதாரணங்காட்டல் என்ற பண்பாகும்.

மேற்கண்ட இலக்கண வரம்புவழி உதாரணங்காட்டலை இரண்டு பகுதியாகப் பகுத்துக் காணலாம்.

1. நூல்வழி உதாரணங்காட்டல்.
2. அனுபவச் செயல்வழி உதாரணங்காட்டல்.

என இருபிரிவாகப் பகுத்து உதாரணங்காட்டலைச் சுப்பிரமணிய முதலியார் உரையில் காணமுடிகிறது.

நூல்வழி உதாரணங்காட்டல்

உரையாசிரியர் எடுத்துக் கொண்ட கருத்தை வலியுறுத்தப் பிற நூல்களிலிருந்து உதாரணங்களை எடுத்துக்காட்டல் இவ் வகையாகும்.

சுப்பிரமணிய முதலியார், சங்க இலக்கியங்கள், திருக்குறள், திருமுறைகள், சித்தர் பாடல்கள், சாத்திர நூல்கள் ஆகியவற்றி லிருந்து உதாரணங்களை எடுத்துக் கையாண்டுள்ளார். "கெட்டேன் என விரைந்து எழுந்து - கெட்டேன் என்ற சொல் வாக்கினின்று எழுதலும் உடல்கிடந்து நிலையினின்று எழுதலும் ஒருங்கே விரைவில் உடல் நிகழ்ந்தன என்க. 'தொழுதெழுவாள்' (குறள்) என்புழிப்போல"[23]

என்று திருக்குறளை உதாரணங் காட்டியுள்ளமையை எடுத்துக்காட்டலாம். இன்னும் விரிவாக இதனைப்பற்றி, சுப்பிரமணிய முதலியாரின் பல்துறைப் புலமை என்ற கட்டுரை யில் தரப்பெற்றுள்ளது.

அனுபவச் செயல்வழி உதாரணங்காட்டல்

இதற்கென பல எடுத்துக்காட்டுகளை உரையில் காண முடிகின்றது. வழக்கறிஞராக உரையாசிரியர் பணி செய்தமை யினால், நேரில் கண்ட அனுபவங்களைக் கொண்டு உரைக்கு உதாரணங்காட்டுகிறார். அதனோடு செய்தித்தாள் வழி அறிந்தன வற்றையும் உதாரணங்காட்டுகிறார். எனவே இப்பகுதியை இரண்டாகப் பகுத்துக் கொள்ளலாம்.

1. வழக்கறிஞர் பணியால் கிடைத்த அனுபவங்கள்,
2. செய்தித்தாள் வழி கிடைத்த அனுபவங்கள்,

என்ற இரண்டு பிரிவுகளாக இப்பகுதியைப் பிரித்துக் காணலாம்.

வழக்கறிஞர் பணியால் கிடைத்த அனுபவங்கள்

சுப்பிரமணிய முதலியார் வழக்கறிஞராக இருந்தவர். அதனால் வழக்குரைக்கவரும் பல மனிதர்களை நேரில் காணும் வாய்ப்புப் பெற்றவர். பொய்ச்சூள் உரைக்க வந்தாரையும், அவர் பெற்ற அனுபவத்தையும் நெஞ்சுள் கொண்டு அதனைச் சுந்தரர் பொய்ச்சூள் உரைத்த இடத்துக்கு உதாரணமாகக் காட்டு கின்றார். இவ்வாறு அனுபவ உரை கூறுங்காலத்து அதனை அடிக்குறிப்பாகவே தருகின்றார். பெரியபுராண உரைக்கு இது இடையீடாக இருக்கக்கூடாது எனக்கருதி அவ்வாறு அவர் கொடுத்திருக்கலாம்.

சுப்பிரமணிய முதலியார் வழக்கறிஞர் தொழில் அனுபவத் தில் கண்ட உதாரணங்களைச் சுட்டும் நிலைக்கும் ஒன்றிரண்டு சான்றுகள் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

“இது பற்றி எனது அனுபவத்தில் கண்ட பலவற்றுள் சில உதாரணங்கள் இங்கு சொல்லத் துணிகின்றேன்.

ஒன்று

ஒரு பெருஞ்செல்வர்; கிரிமினல் கோர்ட்டில் சாட்சிப் பெட்டி ஏறி பொய்ச்சூள் உரைத்தார். அது முடிந்து கீழிறங்கும் போதே கண்மறைந்துவிடப் பிறர் உதவி கொண்டு கையாலும் காலாலும் தடவி வழியறிந்து சென்றார். கண் மறைந்தது மறைந்ததுதான். அவர் இறக்கும் வரை அவ்வாறே தான்.

இனி மற்றொன்று

“சிவில் கோர்ட்டில் ஒரு பெருஞ்செல்வர். சாட்சிப் பெட்டி யேறி பொய்ச்சூள் உரைத்தவர். அதுவாறாக நோய்க்கிடந்து ஒரு மாதத்தில் இறந்து பட்டனர். இப்படி அனேகமுண்டு”[24] எனக் குறிப்பிடுகின்றார்.

சங்கிலியாரிடம் சபதம் செய்து சுந்தரர் மீறினார். அப்போது அவர் கண்ணிழந்தார். சபதம் மீறியவுடனே கண் போய்விடுமா? என்றறெழும் சந்தேகத்தைப் போக்க உரையாசிரியர் மேற் கண்ட நிகழ்ச்சிகளை உதாரணமாகக் காட்டுகின்றார். எனவே அனுபவச் செயல்கொண்டு தக்க இடத்தில் உதாரணங் காட்டு வதில் சுப்பிரமணிய முதலியார் வல்லவராகத் திகழ்ந்துள்ளார் என அறியலாம்.

செய்தித்தாள் வழி கிடைத்த அனுபவங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியிலும், இருப தாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் செய்தித் தாள்களின் வீச்சு அதிகமாக இருந்தது. சுப்பிரமணிய முதலியார் இக்கால கட்டத்தில் வாழ்ந்தவர் என்பதால் செய்தித்தாள் வழிகண்ட நிகழ்வுகளையும் தம் உரையில் எடுத்தாளுகின்றார்.

சுந்தரர் முதலையுண்ட பாலகனைச் சிறிதும் சேதமின்றி வெளிவரச் செய்தார். இந்நிகழ்வைப் படிக்கின்றவர்களுக்கு இது சந்தேகத்தை ஏற்படுத்தலாம் என்பதனால் அச்சந்தேகத்தைப் போக்கச் சுப்பிரமணிய முதலியார் செய்தித்தாள் வழிகண்ட அனுபவச் செய்தி ஒன்றைச் சுட்டி காட்டுகின்றார்.

"சில ஆண்டுகளின் முன் ஒரு சிறுவன் ஆற்று மடுவில் முதலை யினால் விழுங்கப்பட்டு அதன் வயிற்றுக்குள் போயினான். ஆனால் உயிர் நீங்கவில்லை. அங்கு அவ்வயிறு பெரியதொரு வளைவாகிய குகைபோலப் புலப்பட அவன் அதன் உட் புறத்தைத் தன் கை நகங்களாலும் தன்னிடமிருந்ததொரு சிறு கத்தியாலும் பிறாண்ட அதற்கு வேதனையுண்டாயினமையின் முதலை அவனை மீளக் கொணர்ந்து (கக்கி) உமிழ்ந்துவிட்டது. உணர்வற்ற நிலையில் கிடந்த அவனைச் சிலர் கண்டு எடுத்து உபசரிக்க அவன் உயிர்பிழைத்தான். அவன் சொல்லிய வரலாறு இது. அவன் உடலில் முதலையின் பற்களால் முதலை விழுங்கிய போதும், பற்றும் போதும் உளவாகிய கீறல்புண்கள் மட்டுமே கண்டன.

அவை நாளடைவில் ஆறிவிட்டன என்பது இச்செய்தி பத்திரிகைகளிலும் வெளிவந்தது."

இவ்வாறாகச் செய்தித்தாளில் வந்த செய்தியையும் சுப்பிரமணிய முதலியார் உதாரணங் காட்டியிருப்பது அவரின் உலகியல் அறிவுத் தொடர்பிற்குச் சான்றுகூறும்.

இரண்டு உதாரணங் காட்டலுக்கும் உள்ள வேறுபாடு

உதாரணங்காட்டலில் 1. நூல்வழி உதாரணங்காட்டல் 2. அனுபவச் செயல்வழி உதாரணங்காட்டல் என்ற இரண்டு காட்டப் பெற்றன. எனினும் இவை இரண்டுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நூல்வழி உதாரணங்காட்டல் உரையோடு ஒட்டியே சொல்லப்படுகின்றது. ஒரு சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகிறபோது அதனை ஒட்டிய இவ்வுதாரணங் காட்டலும் அமைந்து விடுகின்றது.

ஆனால் அனுபவச் செயல்வழி உதாரணங்காட்டல் அவ்வாறு உரை ஒட்டி அமையவில்லை. சொல்பொருள் விளக்கம் காட்டிய பிறகு '*' என்ற குறி இடப்படுகின்றது. பிறகு அதற்கு விளக்கம் அடிக்குறிப்பில் '*' என்ற குறிகாட்டித் தரப்படுகின்றது.

இவ்வாறு இரு உதாரணங்காட்டலையும் வேறுபடுத்தித் தருகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

வினா, விடை நடை

உரை நயங்களிலேயே வினாவிடை நடை சிறப்பிற்குரிய இடத்தைப் பெறுவதாகும். பண்டைய உரையாசிரியர்கள் கடைப்பிடித்த நெறிகளுள் இதுவுமொன்று. கற்பவர்க்குத் தெளிவு தரும் நோக்குடன் உரையாசிரியர்கள் இடையிடையே வினாக்களைத் தொடுத்து, தக்க விடைகளையும் தருவது இந் நடையாகும். இந்நடையில் அதிக ஈடுபாடு கொண்டவராகச் சுப்பிரமணிய முதலியார் திகழ்ந்துள்ளார். அதனால் பல இடங் களில் வினாவிடை நடையைக் காணமுடிகின்றது.

அ. நிகழ்மங்கல—எழுதலும்

"இருமனைகளும் ஒன்றுபோலச் செல்வமுடன் விளங்க அவற்றுள் அவ்வொரு காலத்தில் நிகழ்ச்சிகள் மாறுபட்டன என்க; இவ்வாறு தோற்றமும் நிகழ்ச்சியும் மாறுபாடு படக் கண்டநிலை நம்பிகள் அவற்றைத் திருவுளங்கொள்ளக் காரண மாயிற்று. ஆயின் சிவானந்தப் பெருவாழ்வில் திளைத்தவாறே சிவயோக வாழ்வுடன் உலகில் பரமே பார்த்திருக்கும் எந்தம் பெருமக்கள் இவ்வாறு வரும் உலக நிகழ்ச்சிகளில் மனம் செலுத்துவாரோ? எனின் அற்றன்று பின்விளைவு கருதித் திருவருள் இவர்களது திருவுள்ளத்துள் நின்று இவ்வாறு செலுத்தியருளும் என்பதாம்."[26] என்று முதலையுண்ட பாலகனின் வீட்டில் சுந்தரரின் நோக்கம் குறித்துச் சுப்பிரமணிய முதலியார் உரைசெய்கின்றபோது, வினாவிடை நடையைக் கையாண்டுள்ளார்.

இதைப்போலவே சுந்தரர் வெள்ளானையில் மேலெழுந்த போது அவரின் நோக்கம் சேரமானார் குறித்தமைந்தது கண்டு

அங்கும் வினாவிடை நடையைப் பயன்படுத்தி உரை காணுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

"வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டடியேன் (பதிகம்) என்று பாடிய நம்பிகள் இத்துணைவரை மட்டில் கொடு சென்றமை என்னை? என்னின் ஆகாது அவரது தொடர்பு பாச சம்பந்தமானதொன்றன்று; இறைவர் கூட்டுவிக்க நிகழ்ந்தது; பதி சம்பந்தப்பட்ட அன்பு காரணமாக நிகழ்ந்தது ஆகலான் என்க. தமது தேவியர்கள் இருவரையேனும். பிறர் எவரையேனும் மனதிற்கொடு செல்லாமையும் காண்க."[27]

இவ்வாறு வினாவிடை அமைப்பு நடையைப் பல இடங்களில் காண முடிகின்றது. சில இடங்களில் கேள்விகள் மட்டுமே இடம்பெறுகின்றன.

"துன்புறு வாழ்க்கை - 'தென்புவி மீது அம்மெல்லியலாருடன் காதலின்பம் கலந்து பின் அனைவாய் (வரிசை - 37) என்று நாம் ஏவிய வாழ்க்கை உன்னைத் துன்பத்தினின்று விடுவிப்பது; ஆனால் இப்போது தடுத்த மணவாழ்க்கை அதற்கு வேறாய்த் துன்பத்தில் மேன்மேலும் இருத்தும் வாழ்க்கை. இன்பம் போலக் காட்டி வேறாய்த் துன்பத்தில் மேன்மேலும் இருத்தும் வாழ்க்கை என்றபடி. எனவே மக்கள் உலக வாழ்வின் துறைகளிலே ஈடுபடும் போது இது இன்புறு வாழ்வா? அன்றித் துன்புறு வாழ்வா? என்று இறைவனை வேண்டக்கடவர்."[27]

என்றவாறு பதிலை - (படிக்கும் மக்களிடமே) உய்த்து உணர வைக்கும் நிலையையும் இவருடைய உரையில் காண முடிகின்றது. இவ்வாறு வினா - விடை நயத்தினையும் சுப்பிரமணிய முதலியார் கையாண்டுள்ளார்.

விசேடங்கூறல்

பாடலின் பொருளன்றி ஆண்டைக்கு வேண்டுவன தந்துரைத்தல் விசேடங்கூறல் என்னும் உரைப் பண்பாகும். சுப்பிரமணிய முதலியார் உரையில் இதற்குத் தனித்த இடம் உண்டு.

சுந்தரர் தலயாத்திரை செய்கின்றபோது பாடிய பதிகங்களின் முதலடியை மட்டும் சேக்கிழார் பெரிய புராணத்துள் கூறியுள்ளார். படிப்பவர்கள் அப்பதிகத்தின் உட்பொருளை அறியவேண்டும் எனக் கருதிச் சுப்பிரமணிய முதலியார் அப்பதிகத்தின் சிறப்பான பாடல்கள் சிலவற்றை உரையில்

தருகின்றார். அவற்றுக்குப் பதிகச் சொற்பொருள்விளக்கமும் தருகின்றார். பிறகு அப்பதிகத் தலவரலாற்றினை ஆய்ந்து கூறி யுள்ளார். பின் அத்தலத்து இறைவர், இறைவி, தலவிருட்சம், தீர்த்தம் ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுகின்றார். இறுதி யில் அத்தல இருப்பிடம் அங்கு செல்லும் வழி ஆகியவற்றையும் குறிப்பிட்டுச் சிறப்புரை தருகின்றார்.

> 'பித்தா பிறைசூடி' யெனப் பெரிதாந் திருப்பதிகம்
> இத்தாரணி முதலாவுல கெல்லாமுய வெடுத்தார். (220)

என "பித்தா பிறைசூடி" என்னும் திருப்பதிகம் பாடிய நிலையைச் சேக்கிழார் கூற, சுப்பிரமணிய முதலியார் அதற்குச் சிறப்புரை தருகின்றார். அவர் கொடுத்துள்ள செய்திகளை இங்கு சுருக்க மாகக் காணலாம். மேற்கண்ட பாடலின் சொற் பொருளுரை முடிவுபெற்ற பிறகு விசேட உரை கீழுள்ளவை கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது.

1. பதிகத்தில் உள்ள 'பித்தா பிறைசூடி....' என்று தொடங்கும் முதற் பாடலும் காரூர்புனல்.. என்று தொடங்கும் இறுதிப் பாடலும் இந்தளப்பண், திருவெண்ணெய் நல்லூர் என்று பண், பதி குறிக்கப்பட்டு முதலில் தரப்பெற்றுள்ளன.
2. பிறகு "பதிகத்தின் குறிப்பு" இடம்பெறுகிறது. இஃது பாடல் பாடப்பெற்ற சூழலையும் என்ன பயன் கருதிப் பாடப் பட்டது என்பதையும் காட்டுகின்றது.
3. பின்னர் பத்துப்பாடல்களுக்கும் சொல் பொருளாக "பதிகப் பாட்டுக் குறிப்புகள்" தரப்பட்டுள்ளன.
4. அடுத்து இடம் பெறுவது தலவிசேடம் என்னும் பகுதி யாகும். இதில் தலவரலாறு, தலம் உள்ள இடம், சுவாமி தடுத்தாட் கொண்ட தேவர். கிருபாபுரிசர்; தேவியார் வேற் கண் மங்கையம்மை, ஆறு பெண்ணை என்ற விபரங்கள், தலம் செல்வழி ஆகியன குறிக்கப்பட்டுள்ளன."[28]

இவ்வாறாகச் சிறப்பு உரையாக-விசேட உரை அமைகின்றது. இதனால் கற்பவரின் உள்ளம் உரைமேன்மை கருதி தலத்தரிசிப் புக்குப் போக ஏங்குகின்றது எனலாம். தலபுராணக் கதைகள் கற்பவரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சிறப்பின. இதனால் சுப்பிரமணிய முதலியார் உரையில் விசேட உரைப் பண்பு தலையாய ஒன்றாக விளங்குகிறது.

விரிவு காட்டல்

வேற்றுமை முதலாயின தொக்கு நின்றபோது விரித்துக் காட்டுதல் 'விரிவு காட்டல்' என்னும் உரைப் பண்பாகும். இவ்வுரையிலும் சில இடங்களில் விரிவு காட்டல் பண்பு இடம் பெற்றுள்ளது.

1. "விசும்புஎழ - விசும்பின்கண் எழ என்று ஏழனுருபு விரிக்க"[29]
2. "நன்று சிந்தையோடு மெய்மகிழ்ந்து - மகிழும் தன்மை சிந்தைக்கே யாதலின் ஒரு உருபை அதனுடன் சார்த்தி ஓதி மெய் (உடல்)யினை அதனைச் சாரப்பின் வைத்தார்."[30]

ஆகிய பகுதிகளை "விரிவுகாட்டல்" பகுதிக்கு உதாரணங் காட்டலாம். சுப்பிரமணிய முதலியார் விரிவு காட்டும் திறம் உடையவர் என்பதை மேற்கண்டவற்றின் மூலம் அறியமுடிகின்றது.

அதிகார வரவு காட்டல்

அதிகார வரவு காட்டல் என்பது அதிகாரத்தோடு பொருத்திக் காட்டலாகும். இப்பண்பு சுந்தரர் வரலாற்றை ஒரு சேரக் காணுகின்ற நிலையில் இன்றியமையாத் தேவையாகின்றது. அதனால் இப்பண்பினைச் சுப்பிரமணிய முதலியார் எடுத்தாளுகின்றார்.

சுந்தரரின் வரலாறு 1. திருமலைச்சிறப்பு 2. தடுத்தாட் கொண்ட புராணம், 3. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 4. கழறிற்றறிவார் நாயனார் புராணம் 5. வெள்ளானைச் சருக்கம் ஆகிய பகுதிகளில் உரைக்கப்படுகிறது.

இவை தொடர்வாக அமையாததாலும் சுந்தரர் வரலாற்றினைத் தம்மோடு ஓரளவிற்குக் கொண்டு செல்வதாலும் சுப்பிரமணிய முதலியார் காட்டும் அதிகார வரவு காட்டலால்தான் சுந்தரர் வரலாற்றுத் தொடர்பினை அறியமுடிகிறது.

1. திருமலைச்சிறப்பு

"திருமலையின் சிறப்பு கூறுவதுடன், சுந்தர மூர்த்திகள் கயிலாயத்திலிருந்து நில உலகில் அவதரிக்க நேர்ந்த சரிதமும் இதிற் கூறப்பெற்றது. சுந்தரமூர்த்திகள் நில உலகிற்குப் புறப்பட்டதும், மீண்டும் சேர்ந்ததும் இம்மலையேயாதலாலும், இப்புராணத்திற்கு மூலநூலாகிய திருத்தொண்டத் தொகை

கிடைப்பதற்கு மூலகாரணமாகிய நிகழ்ச்சி நிகழ்ந்த இடம் இதுவாதலாலும் இம்மலைச் சிறப்பைக் கொண்டு புராணம் தொடங்குகின்றார்."[31]

2. தடுத்தாட் கொண்ட புராணம்

"இப்பகுதியிற் கூறப்பெறும் பொருள் இப்பெயரினால் விளங்கும் இதன் வரலாற்றுத் தொடக்கத்தைத் திருமலைச் சிறப்பு 28வது திருப்பாட்டில்,

> செய்ய சேவடிநீ ங்குஞ் சிறுமையேன்
> மையன் மானுட மாய் மயங்குவழி
> ஐயனே தடுத் தாண்டருள் செய்யென

என்பதிற் காண்க. ஆணையின்வழி உலகத்தில் அவதரித்த ஆலால சுந்தரர் உலகவழியில் செல்லாது அருள்வழியிலே சென்று நமக்கு வழிகாட்டியாகி விளங்கும் நிலைமைக்கு இறைவன் அவரைத் தடுத்தாட் கொண்டதே காரணமாகும். ஆதலின் ஆசிரியரும் முதற்பாட்டிலேயே குறித்தமை காண்க."[32]

இவ்வாறே மற்ற புராணங்களுக்கும் "அதிகார வரவு" காட்டப் பெற்றுள்ளது. எனவே சுப்பிரமணிய முதலியார் கூறும் அதிகார வரவு படிப்பவர்க்கு ஏற்படும் மயக்கத்தைத் தீர்த்துத் தெளிவு தர உதவுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

துணிவுக்கூறல்

பிறர் தம் கருத்துக்களைக் காரண காரியத்துடன் மறுத்துத் தம் கொள்கையினைத் தெளிவாக வலிவாக நிறுத்தல் "துணிவு" எனப்படும். பல இடங்களில் துணிவு கொண்ட கொள்கையை உரைக்கும்படி சுப்பிரமணிய முதலியார் உரை செய்துள்ளார்.

எடுத்துக்காட்டாகப் பெரியபுராணம் பெருங்காப்பியமே என நிறுவும் பகுதியைச் சுட்டலாம்.

> "இது ஒரு பெருங்காப்பியம்; அங்ஙனமின்றி பல சரிதங்கள் சேர்ந்த ஒரு கோவை எனச்சிலர் எண்ணுவர். அது சரியன்று. சுந்தரமூர்த்திகளைத் தலைவராகவும், பரவையார், சங்கிலியார் என்ற இருவரையும் தலைவியராகவும் கொண்டு அவர்கள் கயிலையிலிருந்து ஒருகாரணம் பற்றிப் பூவுலகத்தில் அவதரித்து, உலகத்தார்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் காட்டி, உணர்த்தி, உய்வித்து மீளவும், திருக்கயிலை சேர்ந்தார்கள் என்பது

காப்பியத்தில் உட்பொருள். இதில் தலைவன், தலைவியர்; கூட்டம், பிரிவு முதலிய அகப் பொருளும்; போர் முதலிய புறப் பொருளும்; சூரியன் உதயம் - அத்தமனம் ஆகிய பொழுதின் சிறப்பும்; பெரும்பொழுது சிறுபொழுது முதலிய பகுப்புகளும் இன்னும் பெருங்காப்பிய உறுப்புகள் முற்றும் சிறப்பாய் அறியக்கிடக்கும்."[33]

என்பதை இங்குக் காட்டலாம். பெரியபுராணம் பெருங்காப்பியம் ஆகுமா? என்ற ஐயத்திற்குச் சுப்பிரமணிய முதலியார் மேற் கண்ட நிலையில் துணிவுடன் ஒரு முடிவு தந்துள்ளார். இம்முடிவு பெரியபுராணம் - பெருங்காப்பியமா என்ற சர்ச்சைக்கு முடிவு கண்டது; முற்றுப்புள்ளி வைத்தது.

பயன்

இவ்வாறு கூறியதனால் இது பயன் என எழுதுவது 'பயன்' ஆகும். இப்பயன் என்னும் உரைமுறைமை கருதி சுப்பிரமணிய முதலியார் கற்பனை என்று ஒரு பகுதியை அறிமுகப்படுத்து கின்றார். மக்களை நல்வழிப்படுத்தக் கற்பனை என்ற பகுதி உதவும் எனச் சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடுகின்றார்.

"கற்பனை என்ற தலைப்பின் கீழ் அவ்வப் புராணங்களி னின்றும் நாம் அறிந்து கொள்ளக் கூடிய உண்மைகளாக என் சிறிய அறிவுட்பட்ட குறிப்புகளைக் குறித்துள்ளேன். அவை அவ்வப் புராணங்களில் ஆராய்ச்சியைத் தூண்டி மக்களை நல்வழிப்படுத்துமென்று நம்புகின்றேன்."[34] என்று அவர் குறிப் பிடுவதைக் கொண்டு இவையே 'பயன்' என்ற உரைப்பண்பிற்கு ஏற்றது எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக,

"அடியார் சிறப்பும், வணக்கமும் மனிதப் பிறவிக்குப் பேறு தருவன என்றது இப்பகுதியில் மட்டுமன்றி, இப்புராண முழுமையிலும் போந்த சிறந்த தனிக் கற்பனையாம். அரனிலும் அடுத்த துணையாவர் அடியவர்களேயாம்"[35]

"சிவனறிய உரைத்த சபதம் பிழைக்கின் யாவரேயாயினும் அதற்குரிய படி தண்டம் பெறுவர் என்பதனை உலகுக்குக் காட்டி உய்விப்பதற்கு நிகழ்ந்தது நம்பிகளது திருவொற்றியூர் நிகழ்ச்சியாம்."[36]

"இறைவர்பாற் செய்யும் பேரன்பின் முன்னே நீர்ப்பெரு வெள்ளமும் பிளந்து வழிகாட்டும். அன்பின் வலிமை அளத்தற்கரியது."[37]

"சிவனடியார்களை வானோரும் வணங்கி ஏவல் கேட்பார்கள்."[38]

ஆகிய பகுதிகளை எடுத்துக் காட்டலாம். எனவே சுந்தரர் வாழ்வியல் புராணங்களைக் கண்டு படிக்கப் பலவிதப் பயன்கள் கிடைக்கும் என உணரப்பெறுகிறது.

1.	திருமலைச்சிறப்பு	-	2
2.	தடுத்தாட்கொண்ட புராணம்	-	12
3.	ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்	-	40
4.	கழற்றறிவார் நாயனார் புராணம்	-	36
5.	வெள்ளானைச் சருக்கம்	-	11
	மொத்தம்		101

என்று நூற்றொரு கற்பனைகள் - ஐந்து சருக்கங்கள் வழி கிடைக்கப் பெறுகின்றன. இவற்றைப் பயன்கள் என்ற உரைப் பண்பாகக் கொள்ளல் வேண்டும்.

ஆசிரியவசனம்

நூலாசிரியரின் தொடர்களை ஆங்காங்கே எடுத்தாளுவது ஆசிரியவசனம் காட்டல் என்ற உரைப்பண்பாகும். இதனைப் பெரியபுராண உரையில் பெரியபுராணத்தை மேற்கோள் காட்டல் என எளிதாக்கிக் கூறலாம். இதுவே இறுதி உரைப் பண்பாகும். இப்பண்பினை இவர் அதிகமாக எடுத்தாளுகின்றார். அப்படி அவர் கையாளுகின்ற போது அத்தொடர் (அ) பாடல் இடம்பெறும் எண்ணையும் குறித்துக் காட்டுகிறார்.

குலத்துள் தங்கள் அரும்பெருமரபு

"கன்னியை மணம் பேசுதலிலே குலமும் மரபும் முதலிற் பேசற்பாலன என்பது முன்னோர் வழக்கமும் அறநூல் விதியும் முறைமையுமாம். பின்வரும் பாட்டும் காண்க..."

மற்றை மறையோன் திருமனைவி
வாய்த்த மரபில்வந்துதித்தாள் (சண்டீசர் – புரா. 11)

அரும்பெறன் மறவர் தாயத்தான்ற
தொல்குடியில் வந்தான் (கண் – புரா. 9)

புகழனார்த் தமக்குரிமைப் பொருவில் குலக்குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் (திருநா. புரா. 17)

குணம் பேசிக் குலம் பேசி... மேற்படி. 24

முதலிய பலவும் காண்க. இவ்வாறு பல பகுதிகளை ஆசிரிய வசனம் காட்டலுக்குச் சான்று காட்டலாம்

இவ்வாறு நன்னூலார் காட்டிய 1. பாடங்கேட்டல் 2. கருத்துரை 3. சொல்வகை 4. சொற்பொருள் 5. தொகுத்துரை 6. உதாரணம் 7. வினா 8. விடை 9. விசேடம் 10. விரிவு 11. அதிகார வரவு காட்டல் 12. துணிவு 13. பயன் 14. ஆசிரிய வசனம் என்ற பதினான்கு உரைப்பண்புகளையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் தெளிவாகக் காணமுடிகின்றது. இதனால் இவருடைய உரை முழுமையான உரை ஆகின்றது.

சுப்பிரமணிய முதலியார் அமைத்துக்கொண்ட உரை பொது நெறிகள்

நன்னூல் முறைமைப்படி உரை மரபுகளை அமைத்துக் கொண்ட சி.கே. சுப்பிரமணிய முதலியார், தம் உரையில் தமக்கான சில பொது நெறிகளையும் வகுத்துக் கொண்டுள்ளார். அவற்றை அவரின் உரைப்பொது நெறிகளாகக் கொள்ள வேண்டும். அவை சான்றுகளோடு எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

கட்டமைப்பு

சுப்பிரமணிய முதலியார் உரை செய்கின்ற போது சருக்கம், புராணம் ஆகியவற்றின் கட்டமைப்புக் கண்டு அவற்றிற்கேற்ப உரை செய்கின்றார்.

சருக்கம்

ஒரு சருக்கத்திற்கு உரை கூறப்புகுமுன்பு சருக்கம் பற்றிய அறிமுகத்தை முதலில் தருகின்றார். இவ்வறிமுகம்,

1. சருக்கப் பெயர்க்காரணம்
2. சருக்க நிகழ்வுச் சுருக்கம்
3. சருக்க அளவு

ஆகிய மூன்று அமைப்புகள் கொண்டதாக அமைகின்றது.

திருமலைச் சருக்கம்

"முதற்காண்டத்திலேயே - திருமலையில் நிகழ்ந்ததாய் இப் புராண அடியார் திறங்கள் உலகத்திலே தெரிந்த வரலாற்றை உரைக்கும் பகுதி; சருக்கம்-உட்பிரிவு. சுந்தரமூர்த்திகள் திருவாரூரிலே பாடியருளிய திருத்தொண்டர் தொகையே இப் புராணத்துக்கு மூலமாம். அவர் திருக்கயிலை மலையிலிருந்து இவ்வுலகிலே அவதரிக்க நேர்ந்தலும், திருவாரூரிலே திருத் தொண்டர் தொகை ஆகிய வரலாறு இச்சருக்கத்திலே பேசப் பெறும் ,என்ற பகுதியைப் புராணப்பகுதிக்கு அறிமுகமாகத் தருகின்றார்."[39] சுப்பிரமணிய முதலியார். மேற்கண்ட பகுதி யிலிருந்து சருக்கம் 1. பெயர்க்காரணம், 2. நிகழ்வுச் சருக்கம், 3. அளவு ஆகிய கட்டமைப்புகளோடு உரை செய்யப்பட்டுள்ளது எனக் காட்டலாம்.

புராணம்

புராணம் என்பது சருக்கம் என்ற உட்பிரிவில் ஒரு சிறு பிரிவு ஆகும். இங்கும்

1. புராணப்பெயர்க்காரணம்
2. புராண நிகழ்வுச் சருக்கம்
3. சருக்க அளவு

ஆகிய மூன்று கட்டமைப்பில் உரை உருவாக்கப் பெற்றுள்ளது.

எடுத்துக் காட்டுப் பகுதி

"தடுத்தாட் கொண்ட புராணம் - இறைவன் நம்பியா ரூரரைத் தடுத்து ஆளாகக் கொண்ட செய்தியை உரைக்கும் பகுதி. திருமலையிலே இரு சேடியரைக் கண்டது காரணமாக ஆணையின்வழி இங்கு அவதரித்தனர் ஆலாலசுந்தரர். இது தூலகாரணம். தென்றிசை வாழவும், திருத்தொண்டத்தொகை தரவும் அவ்வாறு அந்த இருமாதர் மேல் மனம் போக்கினார் என்பது அவர் அவதரிக்க நேர்ந்ததன் சூக்கும காரணம். இந்தக் காரணங்களின் வேறாக, அதாவது செய்யப்போன கருமங்களின் வேறாய், இதர ஆகாமிய வினைகள் தேட நின்றபோது தடுக்க என்று சுந்தரர் வேண்ட இறைவர் அவ்வாறே அருளி, கண்ட புத்தூர்ச் சடங்கவியார் மகள் இவ்விரு சேடியரிலும் வேறானவர் ஆதலின் அந்த வரத்தின்படியே இறைவன் வந்து அந்த மணத்தைத் தடுத்து சுந்தரரைத் தமது ஆளாகக் கொண்டார்.

(28ஆம் பாட்டு) இவ்வரலாறு இப்பகுதியிற் கூறும் சிறந்த பொருள். இப்பகுதியிலே பரவையார் திருமணமும், திருத் தொண்டத் தொகை அருளிச் செய்தலும் கூறப் பெறுவன. இவை சுந்தரர்து அவதாரக் காரணங்களாயினும் இவை நிகழ்வதற்கு வழிசெய்து முன்னர் நிகழ்ந்ததாலும், இது மக்கள் கற்க வேண்டிய சிறந்த கற்பனையாதலாலும் இதற்குப் பரவையார் திருமணச் சிறப்பு என்றாவது, திருத்தொண்டத் தொகையருளிய சிறப்பு என்றாவது பெயரிடாமல் இப்பெயரிட்டனர்."[40] என்ற இப் பகுதியில் பெயர்க்காரணம் ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. புராணத்துடன் எல்லையும் நிகழ்வுச் சுருக்கமும் தரப்பெற் றுள்ளன. இவை மூன்றையும் அடிப்படையாக வைத்து புராண அறிமுகத்தைச் செய்துள்ளார் சுப்பிரமணிய முதலியார்.

பாடலுக்கு உரைகூறும் கட்டமைப்பின் படிநிலைகள்

பாடலுக்கு உரைகாணும் போதும் சுப்பிரமணிய முதலியார் சில நெறிகளைக் கையாண்டுள்ளார்.

முதலில் மூலநூல் கூறும் பாடல் அமைக்கப்படுகிறது. பிறகு அப்பாடலின் பொருள், 1. இதன்பொருள் 2. விளக்கவுரை என்ற இரு அமைப்புகள் வழி சொல்லப்படுகின்றது.

இதன் பொருள்

பொருள் முடிவிற்கு ஏற்பப் பாகுபடுத்திச் சிறுசிறு தொடர் களாக உரைகூறுவது இப்பகுதியாகும். (இ.ள்) என்ற சுருக்கக் குறியீடு வழி இது உரையில் குறிப்பிடப்படுகின்றது. வெளிப் படையாக நின்ற பாடல்களுக்கு இவ்வமைப்பு அமையாது, பொழிப்புரை கூறும் நிலை அமைக்கப்பட்டுள்ளது என்பது முன்னர்க் கூறப்பட்டதாகும்.

"(இ.ள்) நம்பி நம்பியாரூரர் என்று... கதறி - ஆண்டோம் என்று இறைவர் உம்பரின் எழுவித்த ஒலியைக் கேட்டுத் தாய்ப் பசுவின் கனைப்பைக் கேட்ட கன்றுபோலக் கதறி; கரசர ணாகதி... ஆக - கைகால் முதலிய திருமேனியெங்கும் புளகம் கொள்ளத் தலைமேற் கை கூப்பிக்கொண்டு மன்றுளீர் என்றார். ஆளல்லேன் என்று மறுத்த என்னை வலிய ஆட்கொண்டது மன்றுளே கூத்தாடும் தேவரது அருட்செய்கையோ? என்றார்."[41] இவ்வாறாகப் பொருள்முடிவிற்கு ஏற்பப் பாகுபடுத்திப் பாட லுக்குப் பொருள் கூறுவது இப்பகுதியாகும்.

விளக்கவுரை

(வி.ரை.) என்ற சுருக்கக் குறியீட்டால் விளக்கவுரை குறிப் பிடப் படுகின்றது. இஃது ஒரு சொல்லை (அ) ஒரு தொடரை எடுத்துக் கொண்டு அதனை முழுதுமாக ஆராய்ந்து விளக்கிடும் உரையாக அமைந்துள்ளது. இதனுள்ளே விசேடம், துணிவு, ஆசிரிய வசனங்காட்டல், உதாரணங்காட்டல் ஆகியன சுட்டப் படுகின்றன.

"296 (வி.ரை) ஒருமருங்கு - ஒரு - வேறு ஒரு. நம்பி புகுந்த மருங்கு அல்லாமல் வேறொரு மருங்கு என்க. வேறு வருவித்துரைக்கப்பட்டது. பின்னர்க் கோயிலில் இருவருக்கும் காட்சி நிகழவில்லை ஆதலின்.

மெல்லியலார் தமைவேண்டி

முன்னரே போற்றித் தொழுது சென்றாராதலின் பின்னர் வந்து மெல்லியலார் தமை வேண்டிப் பணிந்தார் என்றார். முன்னர் செய்தது நிட்காமிய வழிபாடு என்றும் பின்னர் நிகழ்ந் தது காமியத்தின் பாற்பட்டது என்றும் கூறுப...

புரவலனார்

"புரத்தலிலே வல்லவர். தம்மை எம்மையிலும் காப்பவர்
இதனினும் காத்தளிப்பார் என்ற குறிப்பு"

என்ற பகுதிகளை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இரண்டு பாடல்கள் ஒரே முடிவைப்பெற்று ஒன்றாக வருகின்றபோது 1. இதன்பொருள் என்பது இரண்டு பாடல் களுக்கும் சேர்த்து முதலாவதாகவும், 2. விளக்கவுரை என்பதும் இரண்டு பாடல்களுக்கும் சேர்த்து இரண்டாவதாகவும் அமைகின்றது. திருமலைச் சருக்கத்தில் இடம்பெறும் 150, 151 ஆகிய பாடல்களின் உரையை இதற்குக் காட்டலாம்.

மேலும் இவை இரண்டைத் தாண்டி, மூன்று நான்கு என விரிகின்ற போதும் இம்முறையே உரையின் கட்டமைப்பிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பாடல் எண்களின் கட்டமைப்பு

காப்பியம் ஆரம்பம் முதல் இறுதிவரை பாடல்களுக்குத் தொடர்ச்சியாக எண்கள் அரேபிய எண் முறைப்படித் தரப்பட்

டுள்ளன. இவை 1லிருந்து 4286 வரை இடப்பெற்றுள்ளன. முதல் பாடல் "உலகெலாம்" என ஆரம்பித்து இறுதிப் பாடல் "உலகெலாம்" என முடிகின்றது.

புராண அமைப்பில் புராணத் தொடக்கம் முதல் இறுதி வரை தமிழ் எண்கள் பாடலின் இறுதி வரியில் தரப்பட்டுள்ளன. புராணத் தொடக்கம் முதல் இறுதிவரை பாடல் உரையின் இறுதியில் அரேபிய எண்களும் தரப்பட்டுள்ளன. சான்றாக,

1. தடுத்தாட்கொண்ட புராணத்தில் - புராண முதல் பாடலின் இறுதிவரியில் "க" என்ற தமிழ் எண் தரப்பட்டுள்ளது. இப்பாடலுக்கு 'உ0ங' என்ற தமிழெண் தரப்பட்டுள்ளது.
2. மேற்கண்ட புராண முதற்பாடலின் உரைஇறுதியில்1 என்ற அரேபிய எண் தரப்பட்டுள்ளது. இறுதியில் "203" என்ற எண் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு மூவகையில் எண்கள் உரையில் தரப்பட்டுள்ளன.

புராணத் தொகுப்புரை

ஒவ்வொரு புராணமும் ஒருகதையைக் கொண்டுள்ளது. அக்கதையின் கூறுகளைக் காப்பியத்தின் பாடல்கள் கொண் டுள்ளன. அவற்றை மேலோட்டமாகக் கற்போர் முழுமைப் படுத்தி உணர முடிவதில்லை. அதனால், சுப்பிரமணிய முதலியார் ஒவ்வொரு கதையையும் புராண முடிவில் தொகுத்துரைக்கின் றார். இத்தொகுப்புரையை மட்டும் படித்தாலே புராணத்தில் கூறப் படும் கதையையும், அதன் நுணுக்கத்தையும் அறிந்து கொள்ள முடியும். இங்கு கதை ஆற்றொழுக்கு நடையில் கதைத் தொடர்பு, கரு சிதையாமல் தரப்பட்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

சுருக்கம்

"திருக்கயிலையிலிருந்து ஆலாலசுந்தரர் தென்றிசையிற் போந்து அவதரிக்கும் பேறுபெற்றது திருமுனைப்பாடி நாடு. இவர் அவதரித்த ஊர் திருநாவலூர். அப்பகுதியிலே ஆதிசைவ மரபிலே சடையனார் என்ற பெரியவருக்கும் அவரது கற்புடை மனைவியராகிய இசைஞானிப் பிராட்டியாருக்கும் திருமகனாய்த் தீதகன்று உலகம் உய்யும் பொருட்டு இவர் அவதாரமாயினார்."

என்று தடுத்தாட் கொண்ட புராண உரைச்சுருக்கம் ஆற்றொழுக்குக்காகத் தரப்பட்டுள்ளது.

அருந்தொடர் நயம்

மூல நூலாசிரியரின் உள்ளக் கருத்தை ஆழ அகழ்ந்து உரைநயம் கூறுவது உரைநெறிகளுள் ஒன்றாகும். அவ்வழியில் சில தொடர்களை எடுத்துக்கொண்டு அவ்வத் தொடர்களுக்கு நயம் கூறுகின்றார், சுப்பிரமணிய முதலியார். தனித்தனி சொற்களுக்குப் பொருள் கூறப்பட்ட நிலை முன்னர் சொல் வகையில் காட்டப்பெற்றது. இப்போது சொல்லுக்குச் சொல் அல்லாமல் தொடருக்குப் பொருள் காணும் நிலை காட்டப்பெறுகின்றது.

அ. இரவிமேல் கடலிற்செல அனையும்பொழுது (228)

"பொழுது இறங்கும் மாலைக்காலம். மாலை முதலிய கால வருணனை கூறுதல் காவிய இலக்கணங்களில் ஒன்று. வரிசை 159 பாட்டில் இரவி எழுதல் கூறுதலும் இவ்வாறே பிறவும் காண்க."

ஆ. வாழ்ந்த மலர்க்கண் ஒன்றல் (355)

"திருவொற்றியூரில் இழந்த கண்களிரண்டினுள் முலைச் சுவட்டுக் கோலமுடைய திருவேகம்பரை காணக் கண்ணடியேன் பெற்றவாறே என்றபடி இறைவரது திருக்கோலம் காணும் வாழ்வு பெறும் பொருட்டே அவ்வொரு கண் பெற்றமையால் அதனை வாழ்ந்த மலர்க்கண் என்றார்" எனக் காரண காரியத் தொடர்பு காட்டித் தொடருக்கு நயம் கூறலும் இவர் உரையுள் உண்டு.

பெருமாள் தமிழின் பெருமாளை (4249)

"இருவரும் தோழமையால் ஒப்பாந்தன்மை பெற இருவரையும் பெருமாள் என்ற ஒருதன்மை குறிக்கும் பெயராற் கூறினார்; பெருமாள் அரசர். சேர அரசர்களைப் பெருமாள் என்று வழங்குதல் மரபு; தமிழின் பெருமாள் தமிழின் தலைவர்" என்று ஒன்றுபடுத்தியும் வேறுபடுத்தியும் உரைகாணும் போக்கும் இவரிடம் காணப்படுகிறது.

இவ்வாறு அருந்தொடர்களுக்கு நயங்காட்டும் போக்கு சுப்பிரமணிய முதலியார் உரையில் அமைந்துள்ளது.

பிறர்உரை ஒப்புநோக்கல்

சுப்பிரமணிய முதலியாரின் உரை செய்வதற்கு முன்பே பெரிய புராணத்திற்குப் பல உரைகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தோன்றிய பல உரைகளையும் ஒப்புநோக்கிச் சுப்பிரமணிய முதலியார் உரை காணுகின்றார்.

"உரைக்குறிப்புகளில் எனக்குக் கிடைத்துள்ள அச்சிட்ட உரைப்பகுதிகளிற் கண்ட பொருள்களைச் சில அரிய இடங்களிற் பேர் குறித்தும், சில இடங்களில் பேர் குறியாமலும் பயன் படுத்திக் கொண்டேன்"[42] என்று உரையாசிரியரின் கூற்று மேற்கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

இவ்வாறு பிறர் உரைகளைச் சுட்டும்போது சுப்பிரமணிய முதலியார் அவற்றுக்கு முரண்பட்டுக் கருத்துரை எழுதுவதில்லை. ஒப்புநோக்கி உரையெழுதுகின்றார். எடுத்துக்காட்டிற்காகக் கீழுள்ள பகுதிகள் தரப்பெறுகின்றன.

அ. "மங்கலமாம் (3447) ஆக்கச்சொல் உவமை குறித்தெனக் கொண்டு மங்கல நாண்போல என்றுரைப்பார் இராமலிங்கத் தம்பிரான்."

ஆ. "கொம்மைமுலை" (3468) மெய்ம்மை வார்த்தை, செம்மை நெறி பண்புத்தொகை; விட்டார் வினையாலணையும் பெயர், அறியா - தரியா ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்."

(நசிவப்பிரகாச தேசிகர் குறிப்பு)

இ. "நங்கைபரவையார்" (3467) இரு பெயரொட்டு எழுவாய்; இது மேல்வரும் 'இடைப்பட்டார்' (3469) என்பது கொண்டு முடியும் தளர்வாகிய அவ்வம்மையாருக்கு வினையாலணை யும் பெயர்; நான்கனுருபேற்று வந்தது.

(ந. சிவப்பிரகாச தேசிகர் குறிப்பு)

மேற்கண்டவை சுப்பிரமணிய முதலியாரின் உரையின் இடை யிலேயே பிறர் உரையாக ஒப்புநோக்கப்பட்டுள்ளன. சில இடங் களில் பிறர்தம் உரைகள் அடிக்குறிப்பில் இடம்பெறுவதும் உண்டு.

அ. "சிவமந்திரம் (627) இது பற்றிச் சிவாகமம் வல்ல அனுபவமுடைய தேசிகர்பால் அறிந்துணர்க" என்ற பகுதி சுப்பிரமணிய முதலியார் உரையில் காணப்படுகிறது. இதனோடு தொடர்புடைய சிவப்பிரகாச குருக்களையாவின் உரைக்குறிப்பு அடிக்குறிப்பில் தரப்பெற்றுள்ளது.

* "இதுபரியை விரைந்த செலவினதாக்கும் பஞ்சாக்கரம் அஷ்டகர்ம பஞ்சாக்கர மாறுதல் பேதங்களுள் ஒன்றாகிய உச்சாடனகர்மாவின் பிரிவைச் சேர்ந்த மிருக உச்சாடன பஞ்சாக்கரத்துட்பட்ட அசுவமனோகர பஞ்சாக்கரமென்பது ந. சிவப்பிரகாச குருக்களையா அவர்கள் குறிப்பு" என்பது மேற்கண்டதற்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும் சில இடங்களில் பல உரைகளை எடுத்துரைக் கின்றார் சுப்பிரமணிய முதலியார். அவ்வாறு பலரது உரைகள் காட்டினாலும் அவற்றிலிருந்து உரையாசிரியர் ஆய்ந்து ஒரு முடிவு சொல்லவில்லை. கற்பாரையே ஆய்ந்து முடிவுகாணும் நிலைக்கு உளப்படுத்துகின்றார்.

"உருத்திர கணிகைமாராம் பதியிலார் சூலம் (278) உருத்திர கணிகையர் பரமசிவனுக்குத் தாங்கள் செய்யவேண்டிய ஊழியஞ் செய்து கொண்டு மணமின்றி ஒருவரையே கணவராக உடை யவர்கள். இக்காலத்தில் அந்த நடை தவறிற்று" என்பது திரு. மகாலிங்கையர் உரை.

"தனக்கொரு நாயகனில்லாத உருத்திரனைப்போல் இவ்வுலகில் தமக்கு நாயகனைக் கொள்ளாமல் உருத்திர நாயகியை நாயகமாகக் கொண்டிருக்கும் உருத்திர கணிகையர்களுடைய குலம்" என்பர் திரு. ஆலால சுந்தரம்பிள்ளை அவர்கள்

"உருத்திரகணிகையர் - வேசியர்க்கு வேறாய் மனமின்றி உயர்ந்த சாதியர்கள் ஒருவனைக் கணவனாகக் கொண்டு பூசாகாலத்தில் சுத்த நிருத்தஞ் செய்யும் மகளீர்கள்" என்பது ஸ்ரீஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரையில் கண்டது.

"பதியிலார் குலம் என்பதற்குத் தங்கட்கு ஒரு நாயகனையும் எய்தாதவர்களாகிய உருத்திர கணிகையர் குலம்" என்று பொருள் கூறி, "இதனாற் பல புருடரைச் சேர்த்து விபசரிக்கும் வேசியரையே உருத்திர கணிகையாக மயங்கியது அஸங்கத மாயிற்று. விபசாரம் செய்வோர் வேசியரே அன்றித் தாசியரன்று. அவ்வேசியரைத் தாசியாகக் கோடல் தவறு, கால கதியால் பிரகிருதத்தில் வேசியரே தாசியராக நியமிக்கப்பட்டனர். தாசியரும் வேசித்தொழில் புரிகின்றனர். இவ்வநிஷ்டாசாரம் பிரமாணமாகாது..." என்று கோலும் காட்டினார் திரு. ஆ. சுப்ப ராய நாயக்கர் அவர்கள்.

"இவ்வுரைகளை மேலே காட்டிய முதனூற் பிரமாணங் களுடன் ஒப்பு நோக்கி உண்மை தெளிக."[43] என்பது சுப்பிரமணிய முதலியார் கருத்து.

இவ்வாறு பல உரைகளைக்காட்டிக் கற்போரையும் ஆய்வு செய்யத் தூண்டும் சுப்பிரமணிய முதலியார் உரை சிறப்பிற் குரியதாகும்.

இவர் சில இடங்களில் பிறரின் உரைகளையும் மறைமுகமாக மறுத்துரைத்துள்ளார். அதற்குச் சான்றாகக் கீழுள்ள பகுதியைக் காட்டலாம்.

சாமபேத (தண்ட) நிலைமை நீதியினால்

"முன்னர் கூறிய சாமோபாயம் பற்றிய உரைகளை அவ்வுபாயம் விரும்பியபடி பயின்றமையாலே விடுத்து, அடுத்து உபாயமாகிய பேதம் என்னும் தன்மையினை உட்கொண்ட நீதி பற்றி; இவ்வுபாயம் பற்றிச் சொல்லும் முறைகளைப் பிள்ளைத் தமிழ் நூல்களுள் அம்புலிப் பருவப் பகுதியிற் பரக்கக் காணலாம்" என்பது மேற்கண்ட பகுதிக்கு உரையாசிரியர் செய்த உரையாகும்.

ஆனால் இராமநாதஞ் செட்டியார் இவ்வுரையில் வேறு படுகின்றார். அதனை மறுக்கவும் இல்லாமல் ஏற்கவும் இல்லாமல் உரையாசிரியர் நாகரிகத்துடன் அவ்வுரையைச் சுட்டுகின்றார்.

"பேதநிலைமை - நீதியினால் - ஊடலுக்குரிய ஒழுக்கத் தினால் - என்பர் இராமநாதஞ் செட்டியார்"

என்று காட்டிப் பிற உரையாசிரியர்களின் கருத்துக்கு மறைமுக மறுப்பினைத் தெரிவித்தலையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் காணமுடிகின்றது.

இவ்வாறு இராமலிங்கத் தம்பிரான், ந.சிவப்பிரகாச தேசிகர், மகாலிங்கையர், ஆலால சுந்தரம் பிள்ளை, ஆறுமுகத் தம்பிரான், சுப்பராய நாயக்கர், இராமநாதஞ் செட்டியார் போன்ற பலரின் உரைகளைச் சுப்பிரமணிய முதலியார் எடுத்துக் கையாண் டுள்ளார் என்பது தெரியவருகிறது.

பிறநெறிகள்

உரையில் இன்னும் பலநெறிகள் கையாளப்பட்டுள்ளன. சேக்கிழாரின் கவிநலங்காட்டல், பழமொழிகள் பயன்படுத்தல் ஆகியனவும் இதனுள் அடங்கும்.

சேக்கிழாரின் கவிநலங்காட்டல்

பாதி மதிவாழ் முடியாரைப் பயில் பூசனையின் பணிபுரியும்
பாதியிரவி லிங்கணைந்த தென்னோ? னென்றுபயமெய்தி
பாதியுமையாடிரு வுருவிற் பரமராவதிறியாரே
பாதிமதி வாணுதலாரும் பதைத்துவந்து கடைதிறந்தார் (3493)

என்ற பாடலுக்கு உரையில் சுப்பிரமணிய முதலியார் கவிநயங் காட்டுகின்றார்.

"இந்நிலையில் இறைவரது தூது பாதிப்பயனுடன் நின்று மீண்டும் வருதலுடன் முழுப்பயனும் தந்து நிறைவானது என்று குறிப்புத்தர இப்பாட்டில் பாதி என்று நான்கடியிலும் எதுகை வைத்துச் சொற்பொருட் பின்வரும் நிலையில் அருளிய கவி நலமும் கண்டுகொள்க."[44]

என்று சேக்கிழார் கவிநலங்காட்டும் பாங்கு பல இடங்களில் காணப்பெறுகிறது.

பழமொழிகள் பயன்படுத்தல்

அன்றாடம் வழங்கப்பெறும் பல பழமொழிகளைச் சுப்பிரமணிய முதலியார் உரையில் எடுத்துக் கையாண்டுள்ளனார்.

சுந்தரரின் பசியைக் குறிக்கின்றபோது "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்"[46] என்ற பழமொழியினைக் கையாளுகின்றார்.

இவ்வாறு சுப்பிரமணிய முதலியார் உரையில் 1. கட்டமைப்பு 2. அருந்தொடர் நயம் 3. பிறர் உரை ஒப்புநோக்கல் 4. பிற பொது நெறிகளான அ. சேக்கிழார் கவிநலங்காட்டல் ஆ. பழமொழிகள் பயன்படுத்தல் ஆகிய பொது நெறிகளைக் காணமுடிகிறது.

இப்பகுதிவழி பெறும் கருத்துகள்

1. சுப்பிரமணிய முதலியாரின் உரை இலக்கண நூல்களால் காட்டப் பெறும் 'உரையின் பொது இலக்கணங்களைக்' கொண்டுள்ள உரையாக அமைந்துள்ளது. அவற்றுள்ளும் 'சொல்வகை' உரை இலக்கணத்தில் காட்டப்பெறும், சொல்லின் வகைகளில் இடம்பெறும் பெயர்ச்சொல் தொகுப்புரை "பெரியபுராணப் பெயர் அகராதி" எனக் கொள்ளத் தக்கதாகும்.
2. மேலும் உதாரணங் காட்டலில் அனுபவச் செயல்வழி உதாரணங் காட்டல் சிறந்த முறையில் கையாளப்பட்டுள்ளது.
3. விசேடம் என்ற அமைப்பில் அமைந்த சுப்பிரமணிய முதலியாரின் உரைப்போக்கு கற்பவரின் உள்ளத்தைத் ஆலயதரிசிப்பிற்கு அழைத்துச் செல்வதாகவும், கற்பவருக்குச் சுவை தருவதாகவும் அமைந்துள்ளது.
4. சுப்பிரமணிய முதலியார் தமது உரையில் தமக்கான பொது நெறிகளாக, 1. கட்டமைப்பு 2. அருந்தொடர் நயம் 3. பிறர் உரை ஒப்புநோக்கல் 4.பிறபொது நெறிகளான அ.சேக்கிழார் கவிநலங்காட்டல் ஆ. பழமொழிகள் பயன்படுத்தல் ஆகியவற்றை கொண்டு உரை கண்டுள்ளார்.

குறிப்புகள்

1. தி.தொ.பு.மு.ப. சிறப்புப்பாயிரம், ப. 8.
2. ச.வே. சுப்பிரமணியன், அடியார்க்கு நல்லார் உரைத்திறன், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1976, ப. 217.
3. நன்னூல் சூ. 21.
4. நன்னூல் காண்டிகைஉரை, வை.மு.சடகோப ராமாநுஜா சாரி யார், சே.கிருட்டிணமாசாரியார் (உ.ஆ) ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய புத்தகசாலை, சென்னை, ப. 20.
5. தி.தொ.பு.மு. ப. 2. ப. 257.
6. தி.தொ.பு. ப. 302.
7. தி.தொ.பு. ஏ.ப.உ. ப. 587.
8. தி.தொ.பு.மு.ப.உ. ப. 337.
9. நன்னூல் காண்டிகைஉரை, ப. 20.
10. தி.தொ.பு.மு.ப.உ. ப. 105.
11. தி.தொ.பு.மு.ப.உ.ப. 237.
12. தி.தொ.பு.மு.ப.உ. ப. 187
13. மேற்படி, ப. 204.
14. மேற்படி, ப. 211.
15. தி.தொ.பு.மு.ப.உ. ப. 34.
16. மேற்படி, ப. 251.
17. மேற்படி, ப. 279.
18. தி.தொ.பு.மு.ப.உ. ப. 251.
19. மேற்படி, ப. 217.
20. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 98.
21. தி.தொ.பு.மு.ப.உ. ப. 205.
22. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 287.
23. மேற்படி, ப. 437.
24. மேற்படி, ப. 306.
25. தி.தொ.பு.ஏப.உ. பக். 597-98.
26. மேற்படி, ப. 590.

27. மேற்படி, ப. 625.

27. அ.தி.தொ.பு.மு.ப.உ. ப. 242.

28. மேற்படி, பக். 253-54, ஆகிய இருபக்கச் செய்திகளின் சுருக்கம்

29. தி.தொ.பு.ஏ.ப.உ. ப. 617.

30. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 426.

31. தி.தொ.பு.மு.ப.உ. ப. 17.

32. மேற்படி, ப. 185.

33. மேற்படி, பாயிரம், ப. 2.

34. மேற்படி முன்னுரை, ப. 15.

35. மேற்படி, ப. 427.

36. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 459.

37. தி.தொ.பு.ஏ.ப.உ. ப. 177.

38. மேற்படி, ப. 450.

39. தி.தொ.பு.மு.ப.உ. ப. 16.

40. மேற்படி, ப. 184.

41. மேற்படி, ப. 243.

42. மேற்படி, முன்னுரை, ப. 15.

43. மேற்படி, ப. 335.

44. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 383.

45. மேற்படி, ப. 197.

OOO

3

சுப்பிரமணிய முதலியாரின் உரை இயல்புகளுள் சிறப்புநெறிகள்

"சிவகவிமணியாரது திருத்தொண்டர் புராணஉரை, தற்காலத்திற்கு வேண்டியவாறு புராணத்திலுள்ள செம்பொருள் களையும், திருப்பாடல்கள் தோறும் செறிந்து கிடக்கும் தெய்வ நயங்களையும் எளிமையான நடையில் விளக்கிப் படிப்பவர் களைத் தவநெறியில் செலுத்தும் பேராற்றல் உடையதாக உள்ளது. இந்தவுரைப்பகுதிகள் ஆழமும் அகலமும் நிறந்து திருநெறிய தமிழ் நலங்களைத் தன்பால் பெற்றுத் திருவருளைத் துணைகொண்டு முடிந்துள்ளது"[1] என்று சோமசுந்தர தேசிக பராமாச்சாரிய சுவாமிகளின் கூற்று சுப்பிரமணிய முதலியாரது உரையில் இடம்பெற்றுள்ள சிறப்புநெறிகளைத் தெளிவாகச் சுட்டுகின்றது.

மேற்கண்ட பண்புகளோடு சுப்பிரமணிய முதலியார் தமது உரையைத் திறனாய்வு நோக்கோடும், பாத்திரப்பண்பு உரைக்கும் அடிப்படையிலும், சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் போக்கோடும் உரைகண்டுள்ளார். இத்தகைய சிறப்பியல்புகளைச் சுப்பிர மணிய முதலியாரின் உரை இயல்புகளுள் சிறப்பு நெறிகளாகக் கொண்டு இக்கட்டுரை, மூன்று இயல்புகளையும் தனித்தனியே மூன்று பகுதிகளாக விளக்கி நிற்கின்றது.

திறனாய்வு நோக்கு

"உரையாசிரியர்கள் பல்வகையிலும் சிறந்த ஆராய்ச்சி அறிஞர்களாகவும் (Researchers) ஆராய்ச்சி வழிகாட்டிகளாகவும் காட்சியளித்தனர்"[2] என்ற கருத்து உரையாசிரியர்களை ஆராய்ச்சி யாளர்களாகக் காட்டும். இக்கருத்தின் அடிப்படையில் சுப்பிர மணிய முதலியாரும் சிறந்த ஆராய்ச்சியாளராகத் திகழ்ந்துள் ளார் என்பது அவர் உரை மூலம் தெளிவாகின்றது. அவருடைய

உரையில் ஆராய்ச்சி செய்யும் திறனாய்வுக் கூறுகள் உள்ளன. அதற்கான சான்றுகளை அவர் உரையில் பல இடங்களில் காண முடிகின்றது. ஆய்வு எல்லைக்குள் காணும் சில எடுத்துக் காட்டுகள் இங்கு விளக்கப் பெறுகின்றன.

"திறனாய்வு" என்ற சொல்லிற்குப் பலவாறு விளக்கம் தரப்படுகின்றது. அவற்றுள் "ஓர் இலக்கியப் படைப்பின்கண் பொதிந்துள்ள இலக்கியச் சிறப்புகளை எல்லாம் கலை நுணுக்கத்தின் உதவியால் வெளிப்படுத்துவதே சிறந்த திறனாய் வாகும்"[3] என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும்.

திறனாய்வினை மூன்று வகைப்படுத்துவர் மேனாட்டார். அவை,

1. "விதிமுறைத் திறனாய்வு (Legislative Critisism)
2. கொள்கை வழித் திறனாய்வு (Therotical Critisism)
3. விளக்கமுறைத் திறனாய்வு (Descriptive Critisism)"[3அ]

என்று காட்டுவர்.

விதிமுறைத் திறனாய்வு என்பது படைப்பாளனை நோக்கி இவ்வாறு செய்க, இவ்வாறு செய்யற்க என விதித்துச் செல்வ தாகும்.

கொள்கை வழித்திறனாய்வு என்பது இலக்கியத் தன்மைக் கூறுகள், படைப்பு முறை என்பன பற்றிய கொள்கைகளை வகுத்துக் கொண்டு திறனாய்வதாகும்.

விளக்கமுறைத் திறனாய்வு என்பது படைப்பின் சிறப்புக் களை எல்லாம் கொள்கிறவனுக்கு ஏற்ப விவரமாக உரைப்பது ஆகும்.

"இம்மூன்று வகைகளில் தமிழ் உரையாசிரியர்களின் திறனாய்வுமுறை விளக்கமுறைத் திறனாய்வு முறையாகும் என்பது சிலரின் கொள்கை."[3ஆ]

விளக்கமுறைத் தினாய்வோடு தமிழ் உரையாசிரியர் "பாராட்டு முறைத் திறனாய்வினையும்" (Appereciative Critisism) கொண்டிருந்ததாக அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடுகின்றார்.

"நூலின் நலங்களையும், சிறப்புக்களையும் மட்டும் கூறி ஏனைய பகுதிகளை வாளாவிட்டு விடுவதே இம்முறையின் நோக்கமாகும். தமிழ் இலக்கியங்கட்கு உரை தந்த பெரியார்கள்

அனைவரும் இம்முறையையே பெரிதும் கையாண்டனர்"[4] என்ற அ.ச. ஞானசம்பந்தத்தின் கருத்தின்படி பாராட்டுமுறைத் திறனாய்வும் உரையாசிரியர்களின் திறனாய்வாகக் கொள்ளப்படுகின்றது.

இத்தகைய அடிப்படையில் விளக்கமுறைத் திறனாய்வு, பாராட்டு முறைத் திறனாய்வு ஆகிய இரண்டு திறனாய்வு முறைகளும் பெரியபுராண உரையில் இடம்பெறுவதைக் காட்டும் பகுதியாக இம்முதல்பகுதி அமைகிறது.

விளக்கமுறைத் திறனாய்வு

காப்பியங்களில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஏதேனும் ஒரு காரணம் பற்றியதாக அமைந்திருக்கும். அக்காரணத்தை மூலநூல் செய்யும் ஆசிரியன் சுட்டிச் செல்வான். அந்நிகழ்ச்சியினை விளக்க வரும் உரையாசிரியர்கள் பல காரணங்களைத் தந்து விளக்குவர். இத்தகைய பண்பினைச் சுப்பிரமணிய முதலியார் உரையின் பல இடங்களில் காணமுடிகிறது. இதற்குச் சான்றாகப் பின்வரும் பகுதிகளைக் காட்டலாம்.

முதற்சான்றாக சங்கிலியார், தம் கனவில் இறைவன் தோன்றிச் சொல்லிய செய்தியினை உடனே எழுந்து, பாங்கியரைத் தட்டி எழுப்பி உரைக்கின்ற நிகழ்ச்சியினைக் குறிப்பிடலாம். அவ்வாறு சங்கிலியார் உடனே உரைத்தற்கு மூன்று காரணங்களைச் சுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

"எழுப்பி, கனா நிகழ்ச்சிகள் நனவில் உள்ளபடி நினைவு கூர்தலும் அவ்வாறு நினைக்கவரினும் எளிதின் மறத்தலும் இயல்பாதலின் சேடியார் தாமாகத் துயிலுணர்ந்து விழிக்கும் வரை நில்லாது உடன் அனைத்து எழுப்பியறிவித்தனர் என்க.

அன்றியும் அப்போது வைகறை அணுகும் வேலையாகத் திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும்பொழுது ஆக நின்றமை மேற்பாட்டில் காண்க.

அவ்விரவே சபதம் நிறைவேற உள்ளமையால் நம்பிகள் வருமுன்னே சேடியர் இவ்வரலாறுகளை உணர்ந்திருத்தல் வேண்டுவதும் அவசியமாயிற்று என்க."[5]

இவ்வாறு உடனே எழும்பி பாங்கியரிடம் கனவைச் சொன்னதற்கு,

1. கனவு எளிதில் மறந்து விடுமாதலாலும்,
2. வைகறைப்பொழுது வந்தமையாலும்,
3. வரலாறு உணர்த்த வேண்டியும்.

என மூன்று காரணங்களைச் சுப்பிரமணிய முதலியார் காட்டி விளக்கமளிக்கின்றார்.

இவ்வாறு ஒரு நிகழ்ச்சிக்கு மூன்று காரணங்களைக் காட்டும் திறனாய்வு நிலைக்கு மற்றொரு இடத்தையும் சான்றாகக் காட்டலாம்.

சுந்தரர் சங்கிலியாரைக் கண்ட இடத்து இவளைச் சிவ பெருமான்பால் வேண்டிப் பெறுவேன் எனக் கூறுகின்றார். இந்நிகழ்ச்சிக்கு ஏதுவான மூன்று காரணங்கள் பின்வரும் உரைப்பகுதியில் சுட்டப்படுகின்றன.

"நம்பிகளைச் சுற்றம் முதலிய உலகச் சூழல்கள் எல்லாவற்றி னின்றும் பிரித்துச் சிவபெருமான் தனக்கேயாட் செய்யும்படி கொண்டு விட்டமையால் அவருக்கு நேரும் அவையாவும் சிவனருள் வழியே நேர்வன; அவற்றைச் சிவனே காட்டு வித்தலும் கூட்டுவித்தலும் வேண்டியது முறையாம். 'மற்றுப் பற்றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்' என்றும், 'திருவு மெய்ப்பொருளும் செல்வமுமெனக்குள் சீருடை கழல்களென்றெண்ணி' (தேவா) என்றும் வருவன நம்பிகளது சிவவாழ்க்கையின் நிலை; ஆதலின் சிவனிடம் பெறுவேன் என்று சொன்னார் என்பதாம்.

உலகில் எல்லாவுயிர்க்கும் வரும் அனுபோகங்களையும், வினைப்பயன்களையும் கூட்டுவிப்பவன் சிவனேயாம். ஆனால் அவை அவ்வுண்மையினை உணராது, யாவும் தம்முயற்சியால் உண்மையுணர்ந்த நிலையினராதலின் சிவனே தருபவன்; அவனே தலைவன் என்று ஒழுகிவந்தனர் என்பதும் உணரத்தக்கது. மேல் 'உனக்குத் தருகின்றோம்" (3389) என்பதும் கருதுக.

இனி நம்பிகள் தம்பிரான் தோழராதலின் ஈண்டு நிகழ்ந்த காட்சி முதலியவற்றின் பின், பாங்கற் கூட்டம் என்ற அகப் பொருட்டுறைகளின் முறையே தமது ஆருயிர்த் தோழராகிய சிவன்பால் பெறுவேன் என்று போனார் என்ற குறிப்புப்பட நிற்றலும் காண்க' என்று உரை விளக்குகின்றது. இதன் மூலம் காட்டப்பெறும் மூன்று காரணங்களைப் பின்வருமாறு அமைக்கலாம்.

1. நம்பிகள் சிவனிடமே ஆட்பட்டமையால் சிவனே காட்டு வித்தலும் கூட்டுவித்தலும் வேண்டும்.
2. அனுபோகங்களையும் வினைப்பயன்களையும் கூட்டுவிப்பவன் சிவனே. அவனே எல்லாவற்றையும் தரவேண்டும்.
3. பாங்கற்கூட்டம் என்பதனால் பாங்கரான சிவனால் இக்கூட்டம் நிகழ்த்தப்பெற வேண்டும்.

ஆகிய மூன்று காரணங்கள் ஒரு நிகழ்ச்சியை விளக்க வந்துள்ளன.

இவ்வாறு ஒன்றை விளக்க மூன்றைக் காட்டி விளக்கி உரைக்கும் முறை சுப்பிரமணிய முதலியாரின் விளக்கமுறைத் திறனாய்வு நெறிக்குச் சான்றாக அமைகின்றது.

நுணுக்கச் செய்திகளை வெளியிடல்

சுப்பிரமணிய முதலியாரின் விளக்கமுறைத் திறனாய்வின் மற்றொரு பகுதியாக விளங்குவது நுணுக்கச் செய்திகளை உரை வழி வெளியிடுவதாகும். இதனையும் அவரின் சிறப்பு நெறியாகக் கொள்ளலாம்.

சுப்பிரமணிய முதலியார் பெரியபுராண மூலத்தில் காட்டப் பெறாத சில செய்திகளை, ஆனால் திருமுறைப் பதிகவழி கிடைத்த செய்திகளை உரையில் காட்டுகின்றார். இதனால் கற்பவருக்கு விளக்கம் கிடைக்கின்றது.

திருவாரூரில் சுந்தரர் பரிசனங்களோடு நடந்து செல்லுகின் றார். இச்செய்தி மட்டுமே பெரியபுராண மூலத்தில் உள்ளது. இப்பரிசனங்களோடு கூனன், குருடன் ஆகிய இருவரும் சென் றனர் என்ற செய்தியைச் சுப்பிரமணிய முதலியார் திருமுறைப் பதிகவழி உரையில் வெளிப்படுத்துகின்றார்.

“முன்னர் நம்பிகளுடன் வந்தாரும், அன்று திருவாரூரில் அப்போது சேர்ந்தாரும் இவர்களுள் ஒரு கூனனும் ஒரு குருடனும் சார்ந்தமையும், அவ்வாறு சார்ந்து மாலை - தாம்பூலங்களையும் ஏந்திச் செல்லப்பெற்ற பேற்றினால் முறையே நம்பிகள் திருவரு ளால் கூன் நீங்கப் பெற்றதும், கண் விழிக்கப் பெற்றதும், நலம் பெற்றமையும் வரலாறுகளாம். இவை ‘திருவாரூரன் பொன் முடிமேல் ஏற்றுத் தொடையலும் மின்னடைக் காயுமிடு தருமக் கோற்றொத்து கூனனும் கூன் போய்க் குருடனும் கண்பெற்றமை, சாற்றித் திரியும் பழமொழியாமித் தரனியிலே’ (திருவந்தாதி 48) என்றும் இதனை “உடையார் தூது தருந்திருநாட் கூனனுங்,

குருடுந் தீர்ந்தேனல் கொள்வார் குலவுமலர்ப்பாதம் யானும் பரவித் தீர்க்கின்றேனேழு பிறப்பின் முடங்கு கூன்" (3938 - கூற்றுவர் புராணம் - 9) என்றும் உரைத்து அருளியவற்றால் அறியப்படும்."[7]

குருடன் வந்து குறை நீங்கப் பெற்ற நிகழ்ச்சியை, திருவந்தாதி வழியாகவும் பெரியபுராண மூலம் வழியாகவும் சான்று காட்டி அதனைத் தக்க இடமான இவ்விடத்தில் சுட்டிக் காட்டியிருப்பது சுப்பிரமணிய முதலியாரின் உரைச் சிறப்பாகும்.

இவ்வாறு விளக்கமுறைத் திறனாய்வு என்ற அடிப்படையில் நுணுக்கமான செய்திகளை இடமறிந்து சான்றோடு விளக்கும் பாங்கு இவர் உரையின் சிறப்புநெறி எனத் தெளியலாம்.

பாராட்டு முறைத் திறனாய்வு

மூலநூலை / மூல ஆசிரியனைப் பாராட்டி உரைசெய்யும் போக்கு பண்டைய உரையாசிரியர்களின் மரபாகும். சுப்பிரமணிய முதலியாரும் சேக்கிழார் தந்த மூலநூலின் பெருமையைப் பாராட்டுபவராகவே விளங்குகின்றார். காப்பியத்தில் ஏற்படும் சில முரண்பட்ட நிகழ்வுகளைச் சேக்கிழார் வழிநின்று அவற்றையும் பெருமை மிக்கனவாகக் கருதி உரைசெய்கின்றார்.

சுந்தரர் முதலில் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை மணப்பதாக மனங்கொண்டார். இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றதால் அவரைச் சுந்தரரால் மணக்கமுடியாமல் போனது. பிறகு சுந்தரர் பரவையார், சங்கிலியார் என்ற இருவரை மணந்து கொண்டார். இவ்வாறு சுந்தரருக்கு மணவாழ்வு கிடைக்கப்பெற்றது.

ஆனால் பெரிய புராணத்தில் இல்லறவாழ்வு / மணவாழ்வு சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்கு நடைபெற்றதாகக் குறிப்பு இல்லை. மணவாழ்வு நடைபெறாததால் சடங்கவி சிவாச்சாரியார் மகள் சுந்தரரையே நினைந்து வாழ்ந்து சிவலோக வழி பெற்றார் என்று பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

நவீனர் சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்கு இழைக்கப்பட்டது கொடுமை எனக் கூறவுங் கூடும் எனக் கருதிய சுப்பிரமணிய முதலியார், அக்கூற்று எழ வாய்ப்புத் தரவில்லை. சேக்கிழார் காட்டிய வழியே சிறந்த வழி. அதுவே சடங்கவி சிவாச்சாரியார் மகளுக்குப் பொருந்தும் எனப் பாராட்டி உரை செய்கிறார். அவ்வுரைப்பகுதி பின்வருமாறு:

"இப்பாட்டால் ஆசிரியர் இவ்வம்மையாரது பிற்சரிதங் கூறி முடித்துக் கொண்டதுமன்றி ஏனையோரைப் போல, இவ் வம்மையார் தம் நாயகனை உடம்பு நாயகனாகக் கொள்ளாது தியானப் பொருளாகிய உயிர்நாதனாகக் கொண்டு ஒழுகினமை யால் அவரையும் பிரியாது பெறற்கரிய சிவலோக வழியும் பெற்றார் என்று இவரது வாழ்க்கையினுயர்வைக் காட்டினார். இல்வாழ்வு பெற உபகரித்து நின்றமையால் அம்மையாரை விட்டு நீங்கினார் என்ற சொல் நம்பி ஆரூரரிடத்துச் சாராமையுங் காட்டியவாறு. திலகவதியம்மையார் சரிதமும் இங்கு வைத்து உணரற்பாலதாம். இவ்வுண்மைகளை உணராது, ஒரு கணவன் இறப்பவும் அல்லது இருக்கவும், ஒன்றன்பின் ஒன்றாகப் பல மணங்களை நிகழ்த்தலாம் என்று கூறும் நவீன உணர்ச்சிக்காரர் கள் இச்சரிதங்களை உய்ந்து ஒழுகுவார்களாக."[8]

இவ்வாறு காப்பியத்தில் இடம்பெறும் தற்காலத்து உலகியலுக்குப் புறம்பான நிகழ்ச்சியைக் காட்டி, இறுதியில் மூலநூல் ஆசிரியரின் கருத்தே ஏற்புடையது எனக்காட்டும் உரை இயல்பு சுப்பிரமணிய முதலியாரின் பாராட்டுமுறைத் திறனாய்வினுக்குச் சான்று பயப்பதாகும்.

இப்பாராட்டு முறைத் திறனாய்விற்கு இன்னொரு எடுத்துக் காட்டையும் காட்டலாம்.

சுந்தரர், பரவையார்பால் ஈசரைத் தூது விட்டதால் கோபங்கொண்டார் ஏயர்கோன் கலிக்காமனார். அவரையும், சுந்தரரையும் இணைக்கக் கலிக்காமருக்குச் சூலைநோயைத் தந்தான் இறைவன். சுந்தரரின் செயல் தாழ்வுடையதாயிருக்கச் சுந்தரருக்கு நோய் தந்து துன்பப்படுத்தாமல், கலிக்காமருக்குத் தந்தது பிழைபட்ட செயலாகக் கற்பவருக்குத் தோன்றலாம். இதனை அறிந்து சுப்பிரமணிய முதலியார் உரை செய்கின்றார்.

"பிழையுடன்பட்ட நம்பிகள்பால் அதனை மாற்றும் நிலை புரியாது கலிக்காமனார்பால் இறைவர் சூலைதந்து வருத்திய நிலை என்னையோ! எனின் 'ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமு மாதிரி மாண்புங், கேட்பான், புகிலளவில்லை கிளக்க வேண்டா (தேவா)' என்பது திருவருள் ஆணை. ஆதலின் அது பற்றி நாம் ஆராய்தற்குரியரல்லோம்."[9]

இவ்வாறு மேற்கண்ட செயலை ஆராய்தல் தேவையில்லை எனச் சுப்பிரமணிய முதலியார் உரை செய்திருப்பது, 'பாராட்டு முறைத் திறனாய்விற்குச்' சான்றாக விளங்குகின்றது.

இவற்றை ஆயுமிடத்து, "முரண்பாடுகள் தோன்றுமிடத்து அதனைச் சுப்பிரமணிய முதலியார் சுட்டிக் காட்டுகின்றார்; என்றாலும் மூலநூலுக்குக் குறைவராதபடி காக்கும் பாராட்டு முறையோடு அம்முரண்பாடுகளை உரையில் அணுகியுள்ளார்" என்று முடியலாம்.

பாத்திரப்பண்பு விளக்கம்

காப்பியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் பண்பு களையும், சிறப்பியல்புகளையும், தாழ்வுகளையும், வலிமை களையும் நூலாசிரியர்கள் தமது காப்பியங்களில் சுட்டிச் செல் வது இயல்பான ஒன்றாகும். அக்காப்பியங்களுக்கு உரை செய்யப் புகுந்த உரையாசிரியர்கள் நூலாசிரியர்கள் கூறும் பண்புகளோடு, முழுதும் கற்றுணர்ந்ததால் தாம் அறிந்த பண்புகளையும் இணைத்து உரை செய்கின்றார்கள். இதனால் காப்பியப் பாத்திரங்கள் மேன்மேலும் பெருமையடைகின்றன.

பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழாரும் தமது பாத் திரங்களின் பண்புகளை ஆங்காங்கே சுட்டிச் செல்லுகின்றார். சேக்கிழார் காட்டும் பண்புகளைச் சுட்டியும், அதனோடு தாம் அறிந்த, உணர்ந்த பல பண்புகளையும் காட்டியும் உரை செய் கின்றார் சுப்பிரமணிய முதலியார். இதனால் காப்பியப் பாத் திரங்கள் சிறப்படைகின்றன; கற்பவர்கள் விளக்கத்தையும், சுவையையும், இனிமையையும் பெறுகிறார்கள். இவ்வாறு பாத்திர இயல்புகளைக் காட்டும் பண்பைச் சுப்பிரமணிய முதலி யாரின் உரை இயல்புகளுள் சிறப்பு நெறியின்பாற் பட்டதாகக் கொள்ளலாம்.

நூல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் சுந்தரர், பரவையார், சங்கிலியார் ஆகிய பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இம் மூன்று பாத்திரங்களையும் காப்பியத் தலைமைப் பாத்திரங் களாகச் சுப்பிரமணிய முதலியார் கருதுகின்றார். இதனால் இப்பாத்திரங்கள் இடம்பெறும் பகுதிகளில் தனிக்கவனம் செலுத்தி உரைசெய்கின்றார். இத்தனிக்கவன உரை, சுந்தரர், பரவையார், சங்கிலியார் ஆகிய பாத்திரங்களைத் தலைமைப் பாத்திரங்களாக ஐயமின்றிக் காட்டுகின்றது.

சுந்தரர் பாத்திரப் படைப்பு

இறைவனின் அருளாணைப்படி மண்ணில் பிறந்து வளர்ந்து, இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றுத் தோழராகத்

திகழ்ந்து, பரவையார், சங்கிலியாரை மணந்து, இறைவன் அருள்பெறப் பதிகளைப் பதிகம்பாடி வணங்கி, வெள்ளானை வழியாக இறுதியில் சிவலோகம் சென்றடைந்தார் என்பது சுந்தரரின் வரலாற்றுச் சுருக்கமாகும்.

சுந்தரரின் வரலாறு வழியே அவரின் இறைத்திறம் அறியலாகின்றது என்றாலும், சுந்தரரின் பண்பு நுணுக்கங்களைச் சுப்பிரமணிய முதலியார் உரையின் இடையிடையே காட்டிச் செல்வது சுந்தரரின் சான்றாண்மையை உலகறியச் செய்வதாக அமைந்துள்ளது.

முதன்மைச் செயல்

சுந்தரர் இறைவரை வணங்குதலையே, முதன்மைச் செயலாகக் கொண்டவர். எது பெறினும் அதனை இல்லத்திற்கு உடனே எடுத்துச் செல்லாது, இறைவரைக் கோயிலில் வணங்கிய பின்னரே கொண்டு செல்வார். அப்பண்பினை,

"குண்டையூர் சென்று திருக்கோயிலில் பதிகம்பாடி அருள் பெற்றுத் திருஆரூரில் மீண்ட நம்பியாரூரர், நேரே தமது திருமாளிகையில் எழுந்தருளாது, பூங்கோயிலினுட் புகுந்து வணங்கிய பின்னரே திருமாளிகையுட் செல்கின்றார். இம்மரபு குறிக்கத்தக்கது. அவனருளாலல்லது ஒன்றையும் செய்யாத சீவன் முத்தரது தன்மைகளே இவ்வாறு விளைவன. திருமுதுகுன்றத்தில் பெற்ற பொன்னையும் (3292) திருப்புகலூரிற் பெற்ற பொன் னையும் (3208) நம்பிகள் ஆட்களின் மூலம் திருமாளிகையுட் போக்கித்தாம் பூங்கோயிலினுள் செல்லும் நிலையும் இவ்வாறே வரும் பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன"[10] என்று காட்டுவது சுந்தரரின் பக்திச் சிறப்பினைக் காட்டுவதாக அமைகின்றது.

பரவையார் தங்கொழுநர்

கோட்புலியார் தனது இருமகள்களான 'வனப்பகை, சிங்கடி' ஆகியோரை அடிமையாகக் கொள்ளும்படி கேட்டபோது பரவையார் கொழுநரான சுந்தரர் மறுத்துரைக்கின்றார். இந்நிகழ்வு பெரிய புராணத்தில் சுந்தரர் தன் விதிக்கேற்றபடி இருமணத்தினை ஏற்றுக் கொண்டது தவிர வேறு மணங்காண, விரும்பா நிலையைக் கட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இதனை உயர்ந்த பண்பாகச் சுந்தருக்கு அமைத்து உரை செய் கின்றார் சுப்பிரமணிய முதலியார்.

"முன்னமே பரவையார் தங்கொழுநனாராதலின் கோட்புலியார் உட்கொண்டபடி மணத்தால் இவர்களை ஏற்கும் நிலையில்லை எனக் காரணக் குறிப்புபடக் கூறிய கவி நலமும் காண்க: பின்னர்ச் சங்கிலியார் வரலாறு வேறு: அது பண்டை விதியில் விளைவு என்க."[11]

என்பதை 'பரவையார் தங்கொழுநர்' என்ற தொடருக்கு உரையாகக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார். இவ்வாறு தொடருள் பதிந்துள்ள விளக்கங்களையும், சிறப்புகளையும் வெளிக்காட்டிச் சுந்தரர் பாத்திரப் படைப்பிற்கு ஏற்றம் தருகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

சுந்தரரின் மனத்தூய்மை

சுந்தரர் சொற்றமிழால் இறைவனைப் பதிகள் தோறும் சென்று பாடும் இயல்பினர். அவரைச் சங்கிலியார் தம்பாற் பிரியாது இருக்கச் சபதம் கேட்டபோது சுந்தரர் மனஇயல்பை, பண்பாட்டு அடிப்படையில் சுப்பிரமணிய முதலியார் நோக்கி உரை செய்கின்றார்.

"அர்ச்சனைப் பாட்டேயாகு மாதலான் மண்மேல் நம்மைச் சொற்றமிழால் பாடுகென்றான்" (216) என்ற சிவனாணையின்படி அங்கங்கும் சென்றுபாடி வருவதே கடமையாகவுடையேன்; சங்கிலியாரைப் பிரியாமைக்குச் சபதஞ்செய்தல் திருவெற்றியூரினைப் பிரியலாகாது என்றதாகும். அதனால் ஏனைப் பதிகளுக்குச் சென்று கும்பிடுதலுக்குத் தடையாம் என்று உட்கொண்டனர். சங்கிலியாரையும் உடனழைத்துப் பிற பதியும் கும்பிடலாமே எனின்? அற்றன்று. அவ்வாறு செய்தல் உலக வாழ்க்கையிற் கட்டுண்டுழலும் எம்போன்ற கடையேமாகிய ஏனைமக்களுக்கே இயல்வதொரு செயலாம். முன்னரும் இனியும் பரவையாரையும் நம்பிகள் உடன்கொண்டு செல்லாமையும் கண்டு கொள்க. நம்பிகள் இவ்விருவர் பால் நேர்ந்த விளைவு கழியும் வகையளவினால் உலகவாழ்வினிற் சென்றனரேயன்றி மற்றை அவரது வாழ்வெல்லாம் சிவவாழ்வேயாகி உலகுக்கு உறுதி பயத்தற்கே நிகழ்ந்தன என்பதும் உய்த்துணர்ந்து கொள்க."[12]

என்று சுந்தரரின் தூய்மையான மனத்தினைக் காட்டும் சுப்பிரமணிய முதலியார் உரை சிறப்பிற்குரியதாகும்.

தோழருக்குத் தோழர்

இறைவரின் தோழரான சுந்தரர், சேரமான் பெருமான் நாயனாரைத் தோழராக ஏற்றுக் கொண்டார். இப்பண்பினைத் தெய்வீக வழியாக,

"இறைவர் தாமே தோழமையருளத் தம்பிரான் தோழ ராகிய நம்பிகள், தம்மைச் சேரமான் தோழராக அமைத்துக் கொண்டருளியமையாலும், சேரனாரது தோழமை தெய்வந்தர வந்தமையாலும் ஈரிடத்திலும் ஒக்கனே நம்பிகளது ஆர்வம் சென்றது என்பதும் கருதப்படும்"[13] என்று உரையில் சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாகச் சுந்தரரின் பாத்திரப் பண்புகளின் சிறப்புக் களை இடையிடையே பெய்துவைக்கின்றார் சுப்பிரமணிய முதலியார்.

பரவையார் பாத்திரப்படைப்பு

அடுத்த தலைமைப் பாத்திரம் பரவையார்; கமலினியார் என்று விண்ணில் அழைக்கப்பெற்ற இவர் இறைவன் அருளானை வழி மண்ணில் பரவையாராகப் பிறந்தார். சுந்தர்ரை மணந்து இல்வாழ்வில் சிறந்து பிறகு சிவலோகம் சென்றார் என்பது இவரின் வரலாறு ஆகும்.

பரவையாரின் உருவநலன்

பரவையாரின் அழகைப் பெரிய புராணம் பலபடப் பேசும். அவ்விடங்களில் சுப்பிரமணிய முதலியார் பரவையாரின் அழகை இன்னும் விரித்துக் காட்டுகிறார்.

"இங்கே கண்ட இப்பொருளையும் படைத்தற் கடவுளாகிய பிரமன் தானே படைத்திருத்தல் வேண்டும்? அவ்வாறு படைக்கு முன் இது எங்குமில்லாததொரு அரியபொருளாய்க் கொம்பும் கொடியும் வாழ்வும் அருளுமாகிய அற்புதப் பொருளாய், அதுவும் வில் முதலியன பூத்த விரைக் கொடியாய் நிற்றலின் இதற்கு முதலில் ஓர் ஓவியம் எழுதிக் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வோவியம் புறத்தே படத்தில் வரைவதற்கு முன்னர் அதன் உருவத்தை உள்ளத்தில் நன்றாய் எழுதிக் கொண்டன்றோ பின்னர்ப் புறத்தில் படத்தில் கையால் வரையக் கூடும். இவ் வுருவோ அவ்வாறு உள்ளத்திலும் எழுத இயலாததொன்றாம். எனவே புறத்தே காரணத்தால் எழுதக்கூடாமை தானே பெறப் படும். ஆதலின் மனம் முதலிய அந்தக் கரணங்களால் மிகமுயன்று

வருத்தப்பட்டு உண்டாக்கியதொரு மணியாகிய விளக்கமோ? முழுதும் பேரழகின் உருவமாய் மனத்தால் நினைத்து நினைத்து விதித்ததோ என்றபடி"[14]

என உருவநலனின் ஒப்பற்ற அழகைச் சுப்பிரமணிய முதலியார் காட்டுகின்றார்.

வெகுளி

சுந்தரர் சங்கிலியாரை மணந்த செயல்கண்டு வருத்தமுற்ற பரவையார் கோபம் கொள்ளுகின்றார். இந்நிலையை,

"தம்மையும் அறியாது பெண்ணியல்பால் வந்த சினம்... தாமே துணிந்து நினைந்து மேற்கொண்டதன்று என்பதாம். கற்புடை மடவார் கணவர்பாற் சினத்தலாகாது என்பது நீதி யாகலின் வெகுளுதல் பொருந்தாது என்பதாம். தம்மையும் கோபத்தையும் வேறு பிரித்தற்கரிய கோபம் என்று கூறுவர்."[15]

கோபம் என்ற சொல்லின் பொருளை உணர்த்துவதாக வும், பரவையாரின், இயல்பை அறிவிப்பதாகவும் மேற்கண்ட வரிகள் உரையாசிரியரால் அமைக்கப் பெற்றுள்ளன.

நாண்

கோபம் ஈசனால் களையப்பட்ட போது பரவையார் சுந்தரரைக் கண்டு அணைய விரும்புகின்றார். அப்போது அவ ருக்கு ஏற்பட்ட நாண இயல்பையும், அதனோடு தோன்றிய அச்சத்தையும்,

"மூண்ட புலவியினால் தாம் செய்தவற்றையும், சொல்லிய வற்றையும் எண்ணியதனால் நாணும், தமது நாயகராகிய தலைவர் பாலினும் இறைவர் பாலினும் செய்த அபசாரங்களை எண்ணிய தனால் அச்சமும் கொண்டனர் எனச் சிறப்புக் குறிப்பும் போந்தன"[16] எனக் காட்டுகின்றார்.

இவ்வாறு பரவையாரின் அழகு, வெகுளி, நாணம் ஆகிய பண்புகளைச் சுப்பிரமணிய முதலியார் சிறப்புடன் திறனாய்ந்து மூலநூலுக்கு மாறுபடாமல் வெளியிடுகின்றார்.

சங்கிலியார் பாத்திரப் படைப்பு

பெரியபுராணத் தலைமைப் பாத்திரங்களுள் சங்கிலியாரும் ஒருவர். இவருக்கு விண்ணில் இருந்தபோது அநிந்திதையார்

என்ற பெயர் நிலவியது. பிறகு இவர் மண்ணில் பிறந்து சுந்தரரை மணந்து இல்வாழ்வில் சிறப்புற்று சிவத்தொடர்பில் நிறைந்தார். இவரின் சிறப்புப் பண்புகளும் சுப்பிரமணிய முதலியாரால் காட்டப் பெறுகின்றன.

கன்னிமாடம்

சங்கிலியார் சிவபெருமானையே நினைந்து வாழும் இயல்பினர். அவருடைய அருள்திறம் கண்டு கன்னிமாடம் ஒன்றைப் பெற்றோர் அமைத்துத் தந்தனர். அவ்வாறு அமைத்துத் தந்த பிறகு பெற்றோர் மகளை வணங்கி நின்ற பகுதியைக் காட்டுமிடத்தில் கீழ்க்கண்டவாறு உரை செய்கின்றார், சுப்பிர மணிய முதலியார்.

"ஈண்டுப் பெற்ற தாதையார் ஐங்குரவருள் ஒருவராதலின் தமது மகளாரை அடிவணங்குதல் தகுதியாமோ? எனின், தகுதியே என்க: ஈண்டு அம்மையார் "இறைவர் அருள் செய்தார் ஒருவர்க்குரியேன்; இனிச் சென்று சிவனாரருளிச் செல்வன் என்று துணிந்து, பிறந்த இல்லின் தொடர்புகளை நீத்து வந்தா ராதலின் தாதை மகளார் என்ற முறை அற்றுவிட்டது; மேல் சிவனருள் பெற்ற அடியார்க்குரியவராகவும், உலக வாழ்வு விட்டுச் சிவன் பணியே செய்யும் தவம் பூண்டவராயும் நின்றமையால் பணியத்தக்கவராயினர் என்பதாம்."[17]

என்று கன்னிமாடத்து நின்ற தவநிலையையும், அது கண்ட பெற்றோர் நிலையையும் தனியாக உரையில் காட்டிப் படிப்பவர்க்குச் சங்கிலியாரின் பாத்திர நலனைச் சுப்பிரமணிய முதலியார் உளங்கொள வைக்கிறார்.

தமக்கே உரியர்

கன்னிமாடத்திருந்த சங்கிலியார் விதிவழியாகவும், இறை வழியாகவும் சுந்தரரை மணக்க ஏற்கின்றார். அவ்வாறு ஏற்கின்ற போது இறைவரிடம் 'திருவாரூரிலேயே அவர் நிலைபெற்று இருக்க அருள்வீர்' என வேண்டுகின்றார். இதனுள் பொதிந்த மறைபொருளைச் சுப்பிரமணிய முதலியார் தெளிந்து,

"தமது நாயகர் தம்மைப் பிரியாது தமக்கே உரியராய் உடனே இருக்க விரும்புதல் பெண்மையின் இயல்பு குணம்; ஆயின் அதனைப் பிறர்பால் அறிவித்தலும், அதற்குத் துணை செய்யக் குறிப்பாற் கூறுதலின்றி வெளிப்படையாய்க் கூறுதலும் நாணத்தால் பெண்கள் செய்யார்."[18]

என்று காட்டுகின்றார். இதைப்போல மறைவாக, குறிப்பாகக் காட்டுதல் சங்கிலியாரின் இயல்பாகும் என்பது சுப்பிரமணிய முதலியாரின் உரையால் உணரப்பெறுகிறது.

இறைப்பணிக்கு அடங்கும் உள்ளம்

சுந்தரர்பால் அன்பு கொண்டாராயினும், சங்கிலியார் இறைவனின் சொல்லுக்கு முதலிடம் தந்தவர். எனினும் இறைவர் திருமுன்பு சபதத்தினை முடித்தல் என்பது வலிந்த செய்கை. அது கண்டு சங்கிலியார் வருந்தினார். இவ்விடத்தில் சங்கிலியாரின் நிலையை,

"அவர்தாம் திருவாரூரின்கண் மிகவும் மகிழ்ந்துறைவது என்றது மட்டில் சங்கிலியார் கூறினாரன்றி அதற்குப் பரிகாரம் ஒன்றும் கூறினாரலர். 'பிரியாமைக்கு ஒரு சபதம் செய்வான்' என்றதும் 'நமக்கெதிர் செய்வதற்கு இசையாதே மகிழ்க்கீழே கொள்க' என்றதும் இறைவர் தாமே பணித்தவை.... இறைவர் பணித்திராவிடின், சங்கிலியாரது அன்பு கனிந்த திருவுள்ளம் இதில் தாழாது என்பதாம். ஆயின், இறைவர் இவ்வாறு கொடிய செயலினை நம்பிகள் செய்யவும், அதனைச் சங்கிலியார் காணவும் பணித்தது அவருடைய பரமாகிய இறைவர்பாலருளின்மையோ? எனின், அற்றன்று; இருவர் பாலும் வைத்த பேரருளின் திறத்தாலே இவ்வாறு பணித்தருளினார் என்க"[19]

என்றவாறு நடந்தவை அனைத்தையும் இறைபணியாகக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார். இவ்வாறு சுந்தரரை இறைவர் திறத்தோடு ஒட்டியவராகவும், பரவையாரை மனிதப் பெண்ணின் பண்புகள் உடையவராகவும் சங்கிலியாரைக் காதலரின் அன்பிற்கும், இறைவரின் சொல்லுக்கும் கட்டுப்பட்டவராகவும் காட்டுகின்றார். இது சுப்பிரமணிய முதலியாரின் பாத்திரப் படைப்புத்திறன் காட்டும் சிறப்பு உரை நெறியாகும்.

சிக்கல்களும் தீர்வுகளும்

மூலநூல் செய்யப்பட்டுப் பல காலங் கழித்தே அது அச்சு வழி வந்தது. காலங்களின் பிறழ்வாலும், எழுதுவோரின் செயல்களாலும் பல பாடல்கள் இடையிடையே இடைச் செருகலாகக் கலந்து விடுகின்றன; கலந்தவை மூலநூலின் பாடலாகவே கொள்ளப் பெற்று விடுகின்றன.

இச்சிக்கலைச் சுப்பிரமணிய முதலியார் ஆராய்ந்து இடைச் செருகலான பாடல்களைக் காரணங்காட்டி விலக்கி விடுகின்

றார். இத்தகைய இடைச்செருகலை நீக்கிக் காட்டுவது அவரின் தேர்ந்த அறிவைக் காட்டுவதாக உள்ளது.

இடைச்செருகல் பாடல்களை நீக்கல்

பெரியபுராண பாடல் வரிசையில் ‘காட்டுநல்....’ எனத் தொடங்கும் பாடல் 3276வது பாடலாக இடம்பெறுகிறது. இதனைச் சுப்பிரமணிய முதலியார் இடைச்செருகல் என ஐயுறுகின்றார்.

“காட்டுநல்... போற்றி என்ற (பாடல்வரி) கருத்தும், வழிபாடு முற்றிய நிலையும் அங்கு முன் பாட்டிற் ‘பதிகமொழிந்து வாழ்ந்தார்’ என்றதலாற் பெற்றமையானும், ‘ஈட்டிய... போந்து’ என்ற (பாடல்வரி) பின் இரண்டடிகளில் பொருள் மேல் வரும் எஞ்சாத.... ஏத்தி (அடுத்த பாடலடி) என்ற இரண்டடிகளாற் பெறுவதனாலும், இப்பாட்டின்றியே பொருள் தொடர்ந்து செல்வதனாலும் இவ்வொரு பாட்டுக்கென யாப்புமாறுதல் அமைதியின்மையாலும், பிறவற்றாலும் இப்பாட்டு ஐயப் பாடுள்ளவற்றுள் ஒன்றாகுமோ என்று கருத இடமுண்டு”[20] எனக் காட்டுகின்றார்.

பலபதிப்புகளை ஒப்புநோக்கிப் பாடல்வரிசை காணு கின்றபோது, பாடல் அமைப்பில் சிக்கல்களுக்கு இடமேற்படு கின்றது. காஞ்சிபுரம் சபாபதி முதலியார் காட்டும் ஒரு பாடலைச் சுப்பிரமணிய முதலியார் விலக்கி விடுவதனைக் காணலாம்.

“இவ்விடத்தில் புராணம் 34வது பாட்டாக,

ஆண்ட நம்பியுடன் வந்த என்ப ரோடும்புறத்த ணைந்து
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமாளிகை வீதியிற்போந்து
பூண்ட காதன் மிகுதியினாற் புனைமங் கலதூதி யமொலிப்ப
ஈண்ட புகற் கோட்புலியார்மா ளிகை யெய்தி யுள்ளணைந்தார்

என்றதொரு பாட்டு காஞ்சிபுரம் சபாபதி முதலியார் முதற் பதிப்பிற் (1859) காணப்படுகின்றது. மற்ற பதிப்புகளிலும் அவர்களது இரண்டாம் பதிப்பிலும் (1870) இது காணப்பட வில்லை. இச்செய்யுள் இடைச் செருகலாயிருக்குமோ என்ற ஐயப்பாடுகளை எனது ‘சேக்கிழார்’ என்ற நூலில் 211-212 பக்கங்களிற் சொல்லியிருக்கின்றேன்.”[21]

என்று கூறி அடிக்குறிப்பில் இதனைத் தந்து இப்பாடலை விலக்குகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

இவ்வாறு ஆய்வு செய்து இடைச் செருகலைத் தீர்க்கும் உரைச் சிறப்பு சுப்பிரமணிய முதலியாரின் தனிச்சிறப்பாகும்.

பதிகத்தில் ஏற்பட்ட சிக்கல்

"இப்பதிகக் குறிப்பு ஒன்றும் ஈண்டு ஆசிரியர் காட்டியருள வில்லை. இப்பதிகத்திற் காணப்படும் 'அடியேற்கெளிவந்த தூதனை', 'கெய்த துரிசுகள் பொறுக்கும்' என்பவை இனிமேல் வரும் நிகழ்ச்சிகளைக் குறிப்பன; ஆதலின் இப்போது உள்ள செம்பொன்மேனிரு என்ற (தக்கேசிப்பன்) இப்பதிகம் பின்னர் வேறொரு சமயம் பாடியருளப்பட்டதென்பது கருதப்படும். ஆயினும் அவ்வாறுள்ள வரலாறு ஆசிரியர் கூறியருளாமை யாலும், திருநள்ளாற்றுக்கு நம்பிகள் பதிகம் இஃதொன்றே கிடைத்துள்ளமையாலும் இப்பதிகம் ஈண்டுத் தந்து குறிப்பு களும் தரப்படுவன."[22]

எனக் காட்டுகின்றார். இவ்வாறு பதிகத்தில் ஏற்பட்ட சிக்கல் களைத் தீர்த்து திறனாயும் பாங்கு சுப்பிரமணிய முதலியாரின் சிறப்பு நெறியாகும்.

மறைந்த இடங்களை வெளிப்படுத்தும் பாங்கு

சுந்தரர் காலத்தில் பெருமை பெற்ற இடங்கள் காலத்தின் கோலத்தாலும், ஆட்சி மாற்றத்தாலும், வேறு பல காரணங் களாலும் மறைந்து அழிந்து போகும் நிலையைப் பெற்றன. அவற்றைப் பெயரளவில் குறிப்பிடுகின்றார் சேக்கிழார். அவ்விடங் களை இவ்விடங்களே என ஆய்வு முறையில் வெளியிடுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

திருப்புக்கொளியூரில் - அந்தணர் வீதி இருந்ததாக வரும் குறிப்பினை மெய்ப்பிக்க,

"அப்பதி சேய்ஞலூர் முதலியவை போன முற்றும் மறையனர் பதியன்றாதல் கருதி இவ்வாறுரைக்கப்பட்டது. இவ்வீதி, இப்போது தெற்கில் வஞ்சிப்பாளையம் என்ற இருப்புப் பாதை நிலையத்தினின்றும், அவிநாசிக்கு வரும் வழியில் அமைந் திருந்தது. புக்கொளியூர் என்னும் நகரம் திருக்கோயிலுக்குத் தென்புறம் பாசனக்குளத்தின் தெற்கில் அமைந்த நிலப்பரப்பில் இருந்ததென்பதும், பின்னர்க் காலாந்தரத்தில் அழித்து பட்ட தென்பதும், நாட்டு நடப்புச் சரித ஆதரவுகளாலும், அரசாங்க நிலக்கணக்குப் பதிவு முதலியவற்றாலும் அறியப்படுகின்றன.

நகரமிருந்து அழிந்துபட்ட அடையாளங்கள் இப்போது இந்நிலப்பரப்பிற் காணலாம். "புக்கொளியூர் மடம்" என்ற பழைய ஒரு அறநிலையமும், பெயர் வழக்கும் இதற்குச் சான்று பகர்கின்றது."

எனக் காட்டுகின்றார். இவ்வாறு புதைந்துபோன அடையாளங்களையும் வெளிப்படுத்தும் அரிய பணியினைச் செய்துள்ளார் சுப்பிரமணிய முதலியார்.

இப்பகுதிவழி பெறும் கருத்துகள்

1. சுப்பிரமணிய முதலியாரின் உரையில் காணப்படும் சிறப்பு நெறிகளில் தலையாயதாக அமைவது அவரின் திறனாய்வு நெறிகளாகும். "ஒன்றை விளக்க அதன் சார்பாய் மூன்று விளக்கங்களைப் பொருத்தமுற அமைக்கும் விளக்கமுறைத் திறனாய்வும், முரண்பாடுகள் தோன்றும்போது அவற்றை மூலநூலுக்குக் குறைவராதபடி காக்கும் பாராட்டுமுறைத் திறனாய்வும் சுப்பிரமணிய முதலியாரின் சிறப்புநெறிகளாக அமைகின்றன.

2. அடுத்த சிறப்பு நெறியாக அமைவது காப்பியத்தில் இடம் பெறும் பாத்திரங்களின் பண்புநெறிகளை விளக்குவதாகும். சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணத் தலைமைப் பாத்திரங்களான சுந்தரர், பரவையார், சங்கிலியார் ஆகியோரின் பண்புகளை விளக்கிப் பெருமை கூட்டும் வண்ணம் படைத்துள்ளதால், பாத்திரப்பண்பு காட்டும் உரையின் இயல்பு, இவரின் சிறப்பு நெறியாக அமைகின்றது.

3. அடுத்த சிறப்பு நெறியாக அமைவது சிக்கல்களை ஆய்ந்து முடிவுகாணும் நெறியாகும். இடைச்செருகல் பாடல்களைத் தக்க காரணங்கள் கொண்டு விலக்குவதாலும், பதிகத்தின் இடமாறுபாடு குறித்துத் தக்கவாறு முடிவு காணுவதாலும், காலப்போக்கில் புதைந்துபோன பகுதிகளைச் சான்றுகள் படி வெளிக்கொணர்வதாலும், சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் போக்கு சுப்பிரமணிய முதலியாரின் உரையில் தனித்த சிறப்பு நெறியாக அமைகின்றது.

குறிப்புகள்

1. தி.தொ.பு.ஏ.ப.உ. பக். 18-19.
2. தமிழண்ணல், உரைவிளக்கு, ப. 7.
3. Halen gardnor, The business of critisism, oxford Paper backs, 1970, p. 10.

3.அ அ.இ. சுந்தரமுர்த்தி, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன். ப. 159.

3.ஆ மேற்படி, ப. 161.

4. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் பிரைவேட் லிமிடெட், சென்னை 1960, ப. 50.

5. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 280.

6. மேற்படி, பக். 259-60.

7. மேற்படி, ப. 411.

8. தி.தொ.பு.மு.ப.உ. ப. 256.

9. தி.தொ.பு.ஆ.ப.உ. ப. 421.

10. மேற்படி, ப. 20.

11. மேற்படி, ப. 31.

12. மேற்படி, ப. 274.

13. தி.தொ.பு.ஏ.ப.உ. ப. 587.

14. தி.தொ.பு.மு.ப.உ. ப. 349.

15. தி.தொ.பு.அ.ப.உ. ப. 363.

16. மேற்படி, ப. 413.

17. மேற்படி, ப. 249.

18. மேற்படி, ப. 270.

19. மேற்படி, ப. 288.

20. மேற்படி, ப. 134.

21. மேற்படி, ப. 27.

22. மேற்படி, ப. 149.

○○○

4

சுப்பிரமணிய முதலியாரின் பல்துறைப் புலமை

மனித வாழ்வின் பல்வேறு நிலைகளைக் காட்டுவன இலக்கியங்கள்; இதனால் அவற்றுக்கு உரை செய்யப்புகுவோர் பல்துறைகளிலும் புலமை பெற்றிருக்க வேண்டியது அவசிய மாகின்றது. "இது இன்ன காலத்துத் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்து இச்சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்னகாலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத்தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது வென்ற நடையறிவும், நாட்டின் வரலாற்றறிவும் இன்னும் பிறவும் இருந்தால்தான், உரையெழுதும்போது நினைவிற்கு வந்தால் தான் பொருளை முரணின்றிக் காண முடியும்"[1] என்ற வ.சுப. மாணிக்கனாரின் கருத்தை உற்று நோக்குகின்றபோது உரையாசிரியர்களுக்கு, சமுதாய அறிவு, கால அறிவு, வரலாற்றறிவு போன்ற பல்துறை அறிவு அவசியமா கின்றது என்பது தெளிவாகின்றது.

சுப்பிரமணிய முதலியார் உரையினை ஆய்வு செய்கின்ற போது அவரின் உரை,

1. இலக்கியப் புலமை,
2. சாத்திர நூல் புலமை,
3. இலக்கணப் புலமை,
4. உரையில் உரைகாட்டும் புலமை,
5. இசைப்புலமை,
6. வழக்கியல் அறிவு,
7. சூழலறிவு,
8. பிறமதங்களைப் பற்றிய அறிவு,

9. ஆங்கிலமொழி அறிவு,
10. அறிவியல் அறிவு,
11. பழக்க வழக்கங்களின் அனுபவம்

போன்ற பலதுறைச் செய்திகளையும் கொண்டு விளங்குவதாக அமைந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.

இக்கட்டுரை சுப்பிரமணிய முதலியாரின் மேற்கண்ட பல்துறைப் புலமையை வெளியிடுவதாக அமைகின்றது.

இலக்கியப் புலமை

ஓர் இலக்கிய உரை ஆசிரியருக்கும் தாம் உரை எழுதப் போகும் நூலில் மட்டும் நன்கு பயிற்சி இருந்தால் போதாது. அதற்கு முன்னர் எழுந்த பல இலக்கியங்கள் பற்றிய அறிவும், அவற்றை நுகர்ந்த பயில்வும் உரைகாண அவசியமாகின்றது.

சுப்பிரமணிய முதலியார்,

1. சங்க இலக்கியங்கள்,
2. பதினெண் கீழ்க்கணக்கு,
3. காப்பியங்கள்,
4. பழம்பாட்டு,
5. திருமுறைகள்,
6. சிற்றிலக்கியங்கள்,
7. புராணங்கள்,
8. தனிப்பாடல்கள்

ஆகியவற்றில் ஆழ்ந்த அறிவும், நுண்ணிய பயிற்சியும் உடையவராக விளங்கியுள்ளார் என்பது அவருடைய உரையினை பயிலும் போது தெரியவருகின்றது.

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள் ஆகும். அவற்றுளடங்கிய குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை ஆகிய சங்க இலக்கிய நூல்களில் பயிற்சியுடையவராதலால் சுப்பிரமணிய முதலியார் அவற்றின் பகுதிகளைத் தம் உரையில் எடுத்தாண்டுள்ளார்.

சங்க இலக்கிய மேற்கோள்களைச் சுப்பிரமணிய முதலியார், சொற்பொருள் விளக்கம் செய்வதற்காகவும், பொருளாராய்ச்சி செய்வதற்காகவும், சொல்லுக்குச் சான்று காட்டுவதற்காகவும் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

புறநானூறு

இந்நூல் புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டதாகும். இவ்விலக்கியப் பகுதிகளையே சுப்பிரமணிய முதலியார் சங்க இலக்கிய மேற்கோள்களில் அதிகமாகக் கையாண்டுள்ளார்.

"சுந்தரர் பசியின் காரணமாக இறைவன் தந்த பொதி சோற்றை வாங்குமிடத்து,

> கேளல் கேளிர் வேளாண் சிறுபத
> மதுகையின்றி வயிற்றுத் தீத்தனிய
> தாமிரந்துண்ணும் அளவை
> யீன்ம ரோவிவ் வுலகத்தானே (புறம் – 74)

எனச் சிறையிற் கிடந்து, தண்ணீர் தாவென்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து, கணைக்காலிரும் பொறையின் பாட்டின் உள்ளுறை ஈண்டுக் கருதத்தக்கது"[2] என்ற செய்தியினை எடுத்தாளுகின்றார்.

கணவர் இறந்தவிடத்துத் தாமும் உயிர்விட நினைக்கும் கற்பு மகளிர் நிலை கூறுமிடத்து,

> எமக்கெம் பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
> வள்ளி தழவிழ்ந்த தாமரை
> நள்ளிரும் பொய்கையுந் தீயுமோரற்றே[3] (புறம் : 246)

என்ற பகுதியை எடுத்தாளுகின்றார்.

தொண்டை வளநாடு பற்றிக் கூறுமிடத்து,

> எவ்வழி நல்லவ ராடவர், அவ்வழி நல்லை
> வாழிய நிலனே (புறம் – 187)

என்ற தொடரைக் கையாளுகின்றார்.

திருமுருகாற்றுப்படை

அடுத்துச் சங்க இலக்கிய மேற்கோள் வரிசையில் அதிகம் இடம்பெறுவது திருமுருகாற்றுப்படை ஆகும். வீடுபேறு

பெற்றான் ஒருவன், வீடுபெற விழையும் ஒருவனை முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

பரவையார் வடிவழகை, 'தெய்வவளரிள முகையோ' எனச் சேக்கிழார் காட்டும்போது அதற்குச் சான்றாக,

கோங்கின் குவிமுகிழிளமுலை[4] – திருமுரு. (34–5)

என்ற பகுதியைக் காட்டுகின்றார்.

மேலும் இப்பாடல் முழுதும் முருகனின் வடிவழகைக் குறித்த பிரதி பிம்பம் எனக் காட்டி, "மணங்கமற் தெய்வத்திள நலம் காட்டி"[5] என்ற திருமுருகாற்றுப்படைப் பகுதியையும் சான்றாக எடுத்தாளுகின்றார்.

அரமங்கையர் என்ற சொல்லுக்குப் பொருள்காட்ட, 'வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட'[6] (திருமுரு -) என்ற பகுதியை எடுத்துரைக்கின்றார்.

ஆகவே திருமுருகாற்றுப்படை மேற்கோளைச் சுப்பிரமணிய முதலியார் சான்றுக்காகவும், சொற்பொருள் விளக்குவதற்காகவும் பயன்படுத்தியுள்ளார் என்பது புலப்படுகின்றது.

பிற சங்க இலக்கியங்கள்

மேலும் சில இடங்களில் மற்ற சங்க இலக்கியச் சான்று களைக் கையாண்டுள்ளார்.

அ) "முருகனர் குழலாய்" என்ற தொடருக்கு விளக்கம் காட்ட,

அரிவைக் கூந்தலினறியவு முளவோ நீ
யறியும் பூவே (குறுந் – 1)[7]

என்ற குறுந்தொகைப் பகுதியை எடுத்தாண்டுள்ளார்.

ஆ. மேலும் பெரியபுராண 280ம் பாடலில் வரும் 'இளமுகை' என்ற சொல்லுக்குச் சான்றாக,

கோங்கு முகைத்தன்ன குவிமுலை[8] (அகம் – 240–11)

"துகிர்மேனி" (பட்டினப்பாலை) ஆகிய பகுதிகளைக் கையாளு கின்றார்.

இவ்வாறு சங்க இலக்கியப்புலமை உடையவராகச் சுப்பிர மணிய முதலியார் விளங்குகின்றார்.

காப்பியங்கள்

காப்பியப் பகுதிகளும் சுப்பிரமணிய முதலியார் உரை விளக்கத்திற்குப் பெரிதும் பயன்பட்டுள்ளன. மணிமேகலையும், சீவகசிந்தாமணியும் உரையில் சான்றுக்காகவும், பொருள் விளக்கத்திற்காகவும் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

மணிமேகலை

இந்நூல் மணிமேகலையின் துறவையும் அறத்தையும், அன்பையும் கூறுங் காப்பியம்; பலவகைச் சமயக்கருத்துக்கள் கொண்ட காப்பியம் எனப் பலவாறாக இதன் பெருமை பேசப்படும்.

உரையுள் அழகு, அறன் கூறுமிடத்துச் சுப்பிரமணிய முதலியார் மணிமேகலையின் பகுதிகளைக் கையாண்டுள்ளார்.

"இளமுகை" என்பதற்கு மணிமேகலையிலிருந்து, 'பவளப் பாலையின் இளங்கொடி'[8அ] என்ற சான்றைக் காட்டுகின்றார்.

பத்தினிப் பெண்டிர் நிலைகூறும் இடத்து,

காதலர்இறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயாராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து[9] (மணி)

என்ற பகுதியை மேற்கோள் காட்டுகின்றார்.

சீவக சிந்தாமணி

சீவகனின் வாழ்வினையும், மணங்களையும் கூறும் காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும்.

மாறிலாத மணித்திருவாபரண வருக்கம் பல (3190)

என்ற ஆபரணவகை காட்டுமிடத்து,

மாறன்மையில்.... இளையாரையு மெறியான் (சீவக – 2261)

என்ற பகுதியை ஒப்புநோக்கத் தருகின்றார்.

இவ்வாறு காப்பியங்களைக் கற்ற அறிவும் சுப்பிரமணிய முதலியாருக்கு உரை செய்யப் பயன்பட்டுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்கள்

பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியங்களில் திருக்குறளே மிக முக்கியமான இடத்தை இவர் உரையுள் பெற்றுள்ளது. இது அறம், பொருள், காமம் என்ற மூன்றையும் குறிக்கும் அறநூல் ஆகும். சொல் பொருள் விளக்கம் தரவும், பொருள் விளக்கம் தரவும் திருக்குறள் இவரது உரையுள் கையாளப் பெற்றிருக்கின்றது.

"கொழுநற்றொழு தெழுவாள்" என்ற குறள், 3169, 3558 ஆகிய இருபாடல்களில் உரையில் சான்றுக்காகக் கையாளப் பட்டுள்ளது.

அ. "பொங்கும் அருவிகண் பொழிதொண்டர்" - என்ற பகுதிக்கு,

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்[10]

என்ற குறளையும்,

ஆ. "அடியவர் சார்வதனுக்கு அணைகின்றார்" - என்ற பகுதிக்கு,

சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தர சாந்தரு நோய்[11]

என்ற பகுதியையும்,

இ. "செம்பொருளால்" என்ற சொல்லுக்கு விளக்கமாக,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு[12]

என்ற குறளையும்,

ஈ. "ஒருநோக்கு நோய்நோக்கு" என்ற குறள்,

"நயனியர்" - கண்ணோக்கால் காமநோய் தருவார் என்ற பகுதிக்கு எடுத்துத் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு பல இடங்களில் திருக்குறள் எடுத்தாளப் பெற்றுள்ளது.

பழம்பாட்டு

ஆசிரியர் பெயர், தொகுப்புப்பெயர், நூல் பெயர் அறியப் பட முடியாமல் பல தனிப்பாடல்கள் பழம்பாடல்கள் என்ற முறையில் இக்காலத்தில் அறியப்பெறுகின்றன. அவ்வாறு தமக்குத் தெரிந்த வாய்மொழி இலக்கியங்களாகப் பயின்று

வரும் பழம் பாடல்களையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் கையாண்டுள்ளார். இப்பணி சிறப்பிற்குரிய பணியாகும். ஏனெனில் உரைசெய்வதோடு மட்டுமல்லாமல் பழம்பாடல் களை உலகிற்குக் காட்டும் முயற்சியாகவும் இஃது அமைவதே அச்சிறப்புக்குக் காரணமாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒருசான்று காணப்பெறுகிறது.

"அள்ளுதற் கமைந்த பொற்பு" என்ற தொடருக்கு,

> அள்ளிக் கொள்வன்ன குறுமுகிழவாயினுங்
> கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையால்[14] (பழம்பாட்டு)

என்ற பழம்பாடல் தொடர் கையாளப்பட்டுள்ளமையைக் காட்டலாம்.

திருமுறைகள்

சைவக் காப்பியமான பெரியபுராணம், அகச்சான்றுகளாக நாயன்மார்களின் திருமுறைகளைக் கொண்டு செய்யப்பட்டது என்பது தெளிவான ஒன்றாகும். பன்னிரண்டாவது திருமுறை யான பெரியபுராணத்திற்கு உரைகண்ட சுப்பிரமணிய முதலியார் தமது உரையில் மற்ற பதினொரு திருமுறைகளையும் எடுத்தாண்டுள்ளார்.

சம்பந்தர் தேவாரம்

முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்களாகும். ஞானசம்பந்தர் தேவாரங்களைப் 'தேவா.பிள்ளை' என்றும், 'பிள்ளை' என்றும், 'பிள்ளை-தேவா' என்றும், 'ஞானசம்பந்தர்' என்றும், 'ஆளுடையப் பிள்ளை' என்றும் குறிப்பிடுகின்றார்.

"வாமனனாய் மண் இரந்த" என்ற பெரியபுராணப் பாடல் வரிக்கு,

> மறுமா ணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
> செறுமா வலியாற் சென்றுல கெல்லா மளவிட்ட
> குறுமா ணுருவன் றற்குறியாகக் கொட்டும்
> கறுமா கண்டன்[15]

குறிஞ்சி-திருக்கண்ணனார் கோயில் - என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தை எடுத்துக்காட்டியுள்ளார்.

"இன்கோலம்" என்பதற்கு எது இன் கோலம் (331) என்பதை விளக்க,

காணவினியதுநீறு – கவினைத் தருவது நீறு
பூசவினியதுநீறு பேசவினியதுநீறு

என்ற பகுதியை இலக்கணமாக்கிக் காட்டுகின்றார்.

இவ்வாறு பல பகுதிகளைச் சுப்பிரமணிய முதலியார் கையாண்டுள்ளார்.

நாவுக்கரசர் தேவாரம்

அடுத்த மூன்று திருமுறைகள் திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்களின் தொகுப்பாகும். திருநாவுக்கரசரின் திருத் தாண்டகப் பகுதிகள் உரை மேற்கோள்களில் அதிகம் இடம் பெறுகின்றன. "மாவலி" பற்றிய குறிப்பு வருகின்றபோது "திருமறைக் காட்டிலே" ஒரு எலி திருக்கோயிலில் விளக்கிலிருந்த நெய்யை உண்ணப் புக்கபோது மூக்குச் சுட்டிட அதனால் தானறியாமலே திரியைத் தூண்டி விட்டது. அந்தப் புண்ணிய வசத்தால் சக்கரவர்த்தியின் ஆணையும் திறனும் பெற்று மாவலி யாய்ப் பிறந்தது என்ற சரிதம் புராணங்களிற் கூறப்படும்.

நிறைமறைக் காடுதன் னீன்டெரி தீபந் தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடன் மண்ணும் விண்ணும் நீண்ட வானுலகு மெல்லாங்
குறைவறக் கொடுப்பர் போலுங் குறுக்கை வீரட்டனாரே[16]

என்ற அப்பர் சுவாமிகள் தேவாரத்தைச் சான்றாகக் காட்டு கின்றார்.

"ஆரூர் அமர்ந்த" இறைவனைக் குறித்த பாடல் வருகின்ற போது,

அமரர்நா டானாதே யாரூராண்ட வயிராளனமே

மாதோர் பாகந் திருவினான் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே[17]

என்ற இரு திருத்தாண்டகப் பகுதியை மேற்கோள் காட்டு கிறார் சுப்பிரமணிய முதலியார்.

திருநாவுக்கரசர் தேவாரங்கள் இடம்பெறும்போது அவற்றைச் சுப்பிரமணிய முதலியார் அப்பர் என்றும், அப்பர்

சுவாமிகள் என்றும், நாவுக்கரசர் என்றும், ஆளுடைய அரசர் என்றும் குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

சுந்தரர்

ஏழாந்திருமுறை சுந்தரரின் பதிகங்கள் அடங்கியதாகும். சுப்பிரமணிய முதலியார் சுந்தரர் பதிகங்களை அவ்வப்போது இணைத்துத் தந்து உரைக்கு அகச்சான்றாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது முன்பே குறிப்பிடப்பட்டது. சுந்தரரின் பதிகங்களில் 'திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகம்' சிறப்பிடம் பெறுகின்றது. அடுத்து, தலயாத்திரைப் பதிகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

திருத்தொண்டத்தொகை திருப்பதிகம்

திருத்தொண்டத்தொகை திருப்பதிகமே பெரிய புராணத்திற்கு மூலகாரணமாக அமைந்தது. எனவே சுந்தரரின் இப்பதிகத்தைச் சுப்பிரமணிய முதலியார் திருமலைச் சிறப்பில் தருகின்றார். "நாடு-நகரம்-புராணவரலாறு கூறியபின் பதிகம் கூறுவது முறையாகவும் இவ்வாறே பின் ஆசிரியர்களான சிவ ஞானசுவாமிகள்-பரஞ்சோதி முனிவர் முதலாயினோர் அமைந்திருப்பதாகவும்"[18] கருதி இங்கு இப்பதிகம் கூறப்பட்டது எனச் சுப்பிரமணிய முதலியார் கூறுகின்றார்.

எனவே சுந்தரரின் இப்பதிகமே முதன்முதலில் எடுத்தாளப் பட்டுள்ளது என உணரலாம்.

மற்ற பதிகங்கள்

சுந்தரர் தாம் சென்ற தலயாத்திரைகளின் போது பல தலங்களைப் பற்றிப் பதிகங்கள் பாடியுள்ளார். அவற்றையெல்லாம் சுப்பிரமணிய முதலியார் தமது உரையில் தக்க இடங்களுக்கு ஏற்ப இணைத்துள்ளார்.

அதன் வழியாக மற்ற திருமுறைகளைப் போலச் சுந்தரரின் திருமுறை சாதாரண மேற்கோள் என்ற முறையில் மட்டும் அமையாது, சரித அகச் சான்றாக அமைந்துள்ளது என்பதை உணரமுடிகின்றது. மேலும் சுப்பிரமணிய முதலியாருக்குச் சுந்தரர் தேவாரத்தில் இருந்த முழுமையான ஆய்வுப் புலமையும் இதன் வழி தெரியவருகின்றது.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை என்றழைக்கப்படுவனவாகும். மாணிக்க வாசகரின் பாடல்களில் ஆழ்ந்த புலமை கொண்டவர் சுப்பிர மணிய முதலியார் என்பதற்கு உரையில் அவர் ஆங்காங்கே எடுத்துக்காட்டும் திருவாசக, திருக்கோவையார் மேற்கோள் களே சான்றுகளாகும்.

"எல்லை முடிவு இல்லான்" - என்ற பகுதிக்கு,

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே[19]

எனத் திருவாசகத்தினை எடுத்தாளுகின்றார்.

"உருத்திரகணிகைமாராம்" - என்ற மரபினைக் குறித்த தொடருக்கு,

உன்னைப்பிரானாகப் பெற்றவன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவராவர ரவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
என்கொங்கை நின்னன்பரல்லார் தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க[20]

என்ற திருவெம்பாவைப் பகுதியை உரையாசிரியர் எடுத்தாளு கிறார்.

அடுத்து திருக்கோவையாரிலிருந்து,

நீகண்டகைவையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன் சென்றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதொர் நானற்கனி நனி நல்கக் கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின்றானப் பெருந்தகையே

என்ற பாடலை "புள்ளினம் பெடையோடு பொய்கையிற் பகல் போக்கி சேக்கை மேற்செல்ல"[21] என்ற பகுதிக்குச் சான்று காட்டுகிறார் உரையாசிரியர்.

ஒன்பதாந்திருமுறை

திருமாளிகைத்தேவர், கருவூர்த் தேவர் முதலான ஒன்பதின்மர் பாடிய பாடல்களின் தொகுப்பு ஒன்பதாந் திருமுறை

என்றழைக்கப்படுகின்றது. இத்திருமுறைப் பகுதிகளையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் காணமுடிகின்றது.

இதற்குக் கருவூர்த் தேவரின் பாடல் ஒன்றினைக் கையாண்டுள்ளமையைச் சான்றாகக் காட்டலாம்.

இயற்கைப் பொருள்களில் சரிதப்போக்கின் தன்மை காட்டும் நிலை பெரியபுராண 228ஆம் பாடலில் இடம் பெறுகின்றது. இதேநிலை திருவிசைப்பாவில்,

தாயிலே ரிரங்கும் தலைவவோவென்று தமியனேன் துணைவாவோவென்று
நாயினே னிருந்து புலம்பினாலிரங்கி நலம்புரி பரமர்தங் கோயில்
வாயிலே ரரும்பு மணிமுருக் கலர வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயினே ரரும்பும் பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்பலமே
– கருவூர்த் தேவர்

என்ற பாடலில் இயற்கையில் கருத்தை உளப்படுத்திக் காட்டும் தன்மை இடம்பெறுகிறது.

"வாய்போற் சிவந்து அலர்ந்த முருக்கம் பூவின் வேண்டுதலுக் கிரங்கி, மாந்தளிர் தீமேனியனாகிய சிவம்போல அலர்ந்து காட்டும் காட்சியையுடையதில்லை; என்று பின்னிரண்டடிகளிற் சொல்லிய வருணனை, நாயினேன் - தலைவ! துணைவ! என வாயினாற் புலம்ப வெளிப்பட்டு நடம்புரி பரமர்கோயில் என்ற கருத்தைக் குறிப்பிற் காட்டுவது காண்க."

பத்தாந்திருமுறை

சாத்திர முன்னோடி நூலான திருமந்திரம் பத்தாந்திருமுறை என்றழைக்கப்படுகின்றது. இதனை இயற்றியவர் திருமூலர் ஆவார். சுப்பிரமணிய முதலியார் இம்மந்திர நூலையும் தெளிவாகக் கற்று உரையில் எடுத்தாண்டுள்ளார்.

ஒன்பது தந்திரங்களிலிருந்தும் பாடல்களை மேற்கோளாகக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

திருவடி யேசிவமா வது தேரிற்
றிருவடி யேசிவ லோகஞ் சிந்திக்கிற்
றிருவடி யேசெல் கதியது செப்பிற்
றிருவடி யேதஞ்ச முன்டெனி வோர்க்கே[22] – திருமந்திரம் –முதற்றந்திரம்

என்ற திருமந்திரச் செய்யுளை 237, 274 ஆகிய இரண்டு பாடல்களின் உரையில் கையாளுகின்றார்.

எட்டாந்த தந்திரச் செய்யுளான,

பெத்துத்துந் தன்பணியில்லை பிறத்தலான்
முத்தத்துந் தன்பணியில்லை முறைமையால்
அத்தற் கிரண்டு மருளால வித்தலாற்
கத்திப் பட்டோர்க்குப் பணியொன்று மில்லையே[23]

என்பதை "இருவினை" என்பதற்குப் பொருள் விளக்கமளிக்கக் கையாளுகின்றார்.

பதினோராந் திருமுறை

திருவாலவுடையார், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் நம்பி போன்ற பன்னிருவர் பாடிய பதிகங்கள் பதினோரந் திருமுறை என்று தொகுக்கப்பட்டது. இதனுள் காரைக்காலம்மையார், பட்டினத்தடிகள் ஆகியோரின் பாடல்களுக்கு முதன்மை தந்து அவற்றை அதிகமாக உரையில் குறிப்பிட்டுள்ளார் சுப்பிரமணிய முதலியார்.

பட்டினத்தடிகள்

இவர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்; மகன் மருதவாணன் மூலம் முக்திவழி சார்ந்தவர்; தத்துவஞானி.

பெரியபுராணத்தில் இடம்பெறும் "மாலும் இருவர்" என்ற சொல்லுக்குச் சான்றுகாட்ட,

இணையனாகிய தனிமுதல் வானவன்
கேழற் றிருவுருவாகி யாழத்
தடுக்கிய ஏழும் எடுத்தணன் எடுத்தெடுத்
தூழி யூழி கீழுறத் திளைந்துங்
காண்பதற் கரியநின் கழலும் வேண்டுபு
நிகல லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய
பொன்னிறக் கடவுள் அன்னமாகி
காண்டிலாதநின் கூதிர்; நெடுமுடியும்[23அ]

என்ற பட்டினத்தடிகள் பகுதியை எடுத்துக் கையாளுகின்றார்.

பெருவெள்ளம் மிதந்த திருத்தோணிபுர இறைவர் பெருமையைக் காட்ட,

நாகர்நாடு மீமிசை மிதந்து
மீமிசை யுலகங் கீழ்முதற் றாழ்த்திக்
கொன்றானந்த குன்றா னெள்ளம்[23-a]

என்ற இவரின் திருக்கழுமல மும்மணிக் கோவைப் பாடலை உரையில் எடுத்துக் கையாண்டிருப்பதையும் சான்றாகக் காட்டலாம்.

காரைக்காலம்மையார்

இவர் இறைவனாலேயே அம்மை என்றழைக்கப்பட்ட பெருமை உடையவர்; திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகியன இவரின் பாடல்தொகுப்புகளாகும்.

"கொத்தார் மலர்க் குழலாள்" என்ற பகுதிக்கு விளக்கம் காண,

சடைமேலக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவிந் தாழ்ந்தனவே போலும் – முடிமேல்
வலப்பாலக் கோலமதி வைத்தான் றன்பாங்கிற்
குலப்பாவை நீலக்குழல்[24] – அற்புதத் திருவந்தாதி –50

என்ற பாடலைக் காட்டியுள்ளார் சுப்பிரமணிய முதலியார்.

சேரமான் பெருமான்நாயனார்

இவர் சேரமன்னர் சுந்தரரின் தோழர்; முதன்முதலில் உலாப் பாடியவர். அவ்வுலா 'திருக்கயிலாய ஞானஉலா' என்றழைக்கப் படுகிறது. அவ்வுலாப் பகுதியினின்று,

பேதை பருவம் பிரியாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள் – தீதில்
இடையாலு மெக்கழுத்த மாட்டா வைஞ்சேர்
உடையாலு முள்குருக்க கில்லாள் – சடையாலும்
கௌவைநோய் காளையரைச் செய்யாள் – கதிர்முலைகள்
என்னநோய் செய்யுந் தொழில் பூணாள் ....
.... சேயிழையாள்[25]

என்ற அடிகளை 'தெய்வவளர் இளமுகை' அழகிற்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

நம்பியாண்டர் நம்பி

இவர் திருமுறைகளைத் தொகுத்து வகுத்தவர். பெரிய புராணம் இவருடைய 'திருத்தொண்டர் திருவந்தாதி' அடி

யொற்றியே எழுதப்பட்டது. உரையாசிரியர் ஒவ்வொரு புராணத்திற்கு முன்பும் இவருடைய பாடலையும் திருத்தொண்டத் தொகை அடியையும் காட்டியே உரை கூறத் தொடங்குகின்றார். இவ்வாறு "திருத்தொண்டர் திருவந்தாதி" இடம்பெற்றாலும், பாடல் உரையின் போதும் திருவந்தாதியைச் சுப்பிரமணிய முதலியார் கையாண்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

தகுமகட் பேசினோன் வீயவே நூல்போன சங்கிலியாற்
புகுமணக் காதலினால் ....
அருளாலின் வியனுலக நகும்வழக்கே நன்மையாப் புணர்ந்தான்[26]
– திருத்தொண்டர் திருவந்தாதி – 69

என்ற பகுதியை மேற்கண்டதற்குச் சான்றாகக் காட்டலாம்.

சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கியங்களையும் புலமையோடு கற்று அவற்றினையும் தம்முரைக்கு வலிமைகூட்டச் சுப்பிரமணிய முதலியார் பயன்படுத்தியுள்ளார்.

சிவப்பிரகாசர் நால்வர் பற்றி இயற்றிய நால்வர் நான்மணி மாலையில் இருந்து சுந்தரர் பாடல் நலம் காட்ட,

பட்டியிலநின்பாட்டிற் பெருவியப்பின் பரமனென்ப
தடியேன னறிந்தனன் (நால்வர் நான்மணிமாலை)

என்ற பகுதியை எடுத்தாண்டமையை உரையாசிரியரின் சிற்றிலக்கியப் பயில்விற்குச் சான்றாகக் காட்டலாம்.

புராணங்கள்

புராணம் என்பது பண்டை வரலாறு எனப்படும். சுப்பிரமணிய முதலியார் பல புராணங்களைத் தம் உரையில் கையாளுகின்றார். பேரூர்ப் புராணம், பிரபுலிங்கலீலை, திருவிளையாடற் புராணம், கோயில் புராணம் ஆகியனவற்றை இவரின் உரையில் காணமுடிகின்றது.

பேரூர்ப்புராணம்

இது கோவை அருகிலுள்ள பேரூர் என்ற தலம் கருதி எழுதப்பட்ட புராணம். சுப்பிரமணிய முதலியாரின் உரையில் இப்புராணம் அதிகமாக எடுத்தாளப் பெற்றுள்ளது.

"திருமஞ்சனநீர்" பற்றிய செய்தி வருகின்ற இடத்து,

பரிதிகுணக் கெழுமுன்னர்ப் பன்னிரண்டு புதுச்சாலின்
மருவுபுதுப் புனல்துகிலான் வடித்தெடுத்து மணல்பரப்பி
இருவிநிறை தொறும்ஏல முதலான திரவியங்கள்
பெருவிரை மலரோடு பெய்துமது வாலமைத்து...[28]

– மருதவரைப்படலம், 30

என்ற பேரூர்ப்புராணம் வரிகளைக் கையாளுகின்றார்.

தில்லையில் ஒத்த சிறப்புப் பெற்ற தலம் பேரூர் என்பதைக் காட்டுமிடத்து,

ஆரூரர் பேருரை யணைந்திறைஞ்சிப் போய்த்தில்லை
நீரூருஞ் சடையாரை நேர்வழுத்தும் பதிகத்திற்
பேரூரர் பெருமானைப் பெற்றா மென்றிசைத்தமிழ்
சீரூருந் தில்லைவா ழந்தணர்தஞ் செவி கேட்டார்[29]

என்ற பாடலைக் காட்டுகின்றார். இதனோடு "அழகிய திருச் சிற்றம்பலப் படலம்" காட்டும் இரண்டாம், மூன்றாம் பாடல் களையும் சுப்பிரமணிய முதலியார் காட்டுகின்றார்.

இவ்வாறு அதிகம் பயிலப்படாத புராணங்களையும் உரையில் மேற்கோள் காட்டி அப்புராணங்களைப் படிக்கும் ஆர்வத்தினைக் கற்போரின் உள்ளத்தில் ஏற்படுத்தும் உரை யாசிரியரின் உரைப்பாங்கு சிறப்பிற்குரியதாகும். இப்புராணம் அதிகம் பயன்படுத்தப்பட்டதற்கு ஒரு காரணமும் உண்டு. கோவைக்கு அருகில் அமைந்துள்ள இத்தலத்து இறைவரை உரையாசிரியார் 'மறவாது தொழுதார்' என்பதனால் இப்பதி குறித்த புராணம் அதிக இடங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது என்பதே அக்கராணமாகும்.

திருவிளையாடற்புராணம்

இறைவரது அறுபத்துநான்கு திருவிளையாடல்களை விதந்தோதும் புராணம் திருவிளையாடற் புராணம் ஆகும். இப்புராணத்தையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் எடுத்தாண்டுள்ளார்.

"அள்ளுதற்கமைந்த பொற்பு" என்ற பகுதிக்கு,

அழகிய பிரானோ என்னா அள்ளிமுத்தங்கொண்டு

(இரசவாதம் செய்த படலம். 29)

என்ற தொடரைக் காட்டிச் சான்றுரைக்கின்றார் உரையாசிரியர்.

"பொய்யுரைத்தவருக்கு - செம்பொன் மேனி வேறாகி நாலாம். பொய்யுகத்தவர்க்குத் தக்க பொருந்துருவாகி மன்னும்" என்ற இரசவாதம் செய்த படலத்தின் 30வது பாடலையும் சான்று காட்டித் திருவிளையாடற் புராணப் பயிற்சியை, சுப்பிரமணிய முதலியார் வெளிப்படுத்துகின்றார்.

பிரபுலிங்கலீலை

வீரசைவச் சார்புடன் பிரபுலிங்கமாக விளங்கும் சிவனின் லீலைகளைச் சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலையாகத் தந்துள்ளார்.

முக்கணி அழகைக் காட்ட விழையும்போது,

நன்னைநிந்தை செய் வெண்ணகை மேற்பழிசார
மண்ணியங்கது நிகரற வாழ்மனை வாய்தன்
முன்னிறந்திடு வேனென ஞான்று கொன்முறைமை
யென்ன வெண்மணி முக்கணி பொருத்தி நின்றிட்டாள்[30]

– மாலைபூசை கதி. 18

என்ற கற்பனை நயங்கொண்ட பிரபுலிங்கலீலைப் பகுதியைச் சான்று காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

கோயில்புராணம்

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியாரால் சிதம்பரம் பற்றி எழுதப்பட்ட புராணம் கோயில்புராணம் எனப்படுகிறது. மேருமலையைப் பற்றி விரித்துக்கூற,

வலங்கைமான் மழுவோன் போற்றும் வானரவரசை நோக்கி
யலைந்திடும் பிண்ட மண்டமவை சமமாதலாலே
யிலங்கைரேரிடைபோ மற்றையிலங்கு பின்கலைநாடி
நலங்கிள ரிமய நேர்போ நடுவு போர் சுழுனைநாடி[31]

(கோயிற்புராணம், பதஞ்சலிசருக்கம். 70)

என்ற பாடலைக் காட்டிவிரித்து உரை தருகின்றார்.

இவ்வெடுத்துக்காட்டுகளால் சுப்பிரமணிய முதலியார் பல புராணங்களைக் கற்று அவற்றைத் தம் உரைக்கு மெருகூட்டப் பயன்படுத்தியுள்ளமை தெரியவருகின்றது.

தனித்திறம் கொண்ட புலவர்கள்

தமிழிலக்கிய வரலாற்றில் தாயுமானவர், குமரகுருபரர், மாதவச் சிவஞான சுவாமிகள் போன்ற பலர் தமது பாடல்

புனைவுகளால் அழியா இடம் பெற்றுள்ளனர். அவர்கள் இயற்றிய தனிப் பாடல்களையும் உரையில் எடுத்தாண்டுள்ளார் சுப்பிர மணிய முதலியார்.

தாயுமான சுவாமிகள்

இவர் சமரச நோக்குடன் பாடல்கள் புனைந்தவர்.

அ. "உழவாரம்" என்ற சொல்லுக்கு,

> ஏரின் சிவபோக மிங்கிவர்க்கே யென்னவுழ
> வாரங்கொள் செங்கையர்தாள் வாரம் வைப்பதெந்நாளோ[31-அ]

என்ற பகுதியையும்,

ஆ. "சார்பு" என்ற சொல்லுக்கு,

> ஆணவத்தோடத்துவித மானபடிமெய்ஞ்ஞானத்
> தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ[31-ஆ]

என்ற பகுதியையும் இதுபோன்ற பலபகுதிகளையும் சுப்பிரமணிய முதலியார் உரையில் காட்டுகின்றார்.

மற்றவர்கள்

அ. இதைப்போலவே குமரகுருபரரின் வாக்கை, "கருணை" என்ற சொல்லுக்கு விளக்கங்கூற "அருள் வித்திட்டுக் கருணை நீர் பாய்ச்சி" (குமரகுருபரர்) என்றவாறு பயன்படுத்தியுள்ளார்.

ஆ. "உழவாரம்" என்பதற்கு "உழவாரத்தின் படையறாத் திருக் கரமும்" மாதவச் சிவஞான சுவாமிகள் வாக்கைக் காட்டி யுள்ளார்.

இவ்வாறு சுப்பிரமணிய முதலியார் சங்க இலக்கியங்கள் முதலாகப் பல இலக்கியங்களிலும் மிக்க புலமை உடையவ ராகத் திகழ்ந்துள்ளார். அதிலும் சைவ இலக்கியங்களில் அதிக ஈர்ப்பு கொண்டு கற்றுள்ளார்; அவற்றை உரை செழுமைபட பயன்படுத்திக் கொண்டார் என்பதை உணரமுடிகின்றது.

சாத்திரநூல் புலமை

சுப்பிரமணிய முதலியார் சைவ இலக்கியங்களை அதிக ஈர்ப்புடன் கற்றதுபோலச் சைவ சாத்திரங்களையும் பயின்றிருந் திருக்கிறார் என்பதை அவரின் உரை காட்டுகின்றது.

சைவசாத்திர நூல்கள் பதினான்கு ஆகும். இவை, பதி, பசு, பாசங்களைச் சைவநோக்கோடு அணுகுவனவாகும்.

1. திருவுந்தியார்,
2. திருக்களிற்றுப்படியார்,
3. சிவஞானபோதம்,
4. சிவஞானசித்தியார்,
5. இருபா இருபஃது,
6. உண்மை விளக்கம்,
7. சிவப்பிரகாசம்,
8. திருவருட்பயன்,
9. வினா வெண்பா,
10. போற்றிப் பஃறொடை வெண்பா,
11. கொடிக்கவி,
12. நெஞ்சுவிடு தூது,
13. உண்மை நெறி விளக்கம்,
14. சங்கற்ப நிராகரணம்,

ஆகிய பதினான்கும் ‘சைவ சாத்திரங்கள்’ என்று அழைக்கப் படுகின்றன.

சுப்பிரமணிய முதலியார் சிவஞான சித்தியாரையும், சிவ ஞானபோதத்யையும் அதிகமாக உரையில் கையாளுகின்றார். திருவருட்பயன், போற்றிப் பஃறொடைவெண்பா, சங்கற்ப நிராகரணம், திருக்களிற்றுப்படியார் ஆகியற்றைச் சிற்சில இடங்களில் கையாளுகின்றார்.

சிவஞானசித்தியார்

சிவஞான போதத்தில் வழிநூல், பரபக்கம், சுபக்கம் என்ற இருபகுதிகளை உடையது.

“மலர்ச்சென்னியிலும் சிந்தையிலும் மலர்வித்து” என்ற தொடருக்கு,

புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல்செய்வோம்[32]

என்ற பரபக்கத் தொடரை உரையாசிரியர் எடுத்துக்காட்டு கின்றார்.

காலதத்துவம் உணர்த்த,

காரியங்கள் காலம்தானே காண்டுங்
காரணன் விதியினுக்குக்
காலமுங் கடவுளே வலாற்றுணைக் காரணங்காண்[33] (சித்தியார்–10)

என்ற பகுதியை எடுத்தாளுகின்றார்.

சிவஞான போதம்

இது சைவ சமயத்தின் தலையாய சாத்திரம்; பன்னிரு சூத்திரங்களையும், உரைப் பகுதிகளையும் எடுத்துக்காட்டு வெண்பாக்களையும் உள்ளடக்கியது. மெய்கண்டார் அருளியது.

சுப்பிரமணிய முதலியார் ஒன்று, பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஆகிய சூத்திரங்களை நூல் எல்லைக்குள் பகுதி களுக்குள் கையாண்டுள்ளார்.

முதலை மீள பாலகனைத் தருமிடத்து,

ஒடுங்கி மலத்துள தாம்[34] (போதம்–1)

என்ற தத்துவச் செய்தியைக் காட்டி புராணத்திற்கு வலிமை கூட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

"நீங்காத காதலினா னினைந்தாரை நினைவாரை" என்ற தொடருக்கும்,

சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச் – சார்ந்தடியார்
தந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார் முன் செய்வினையும் ஆங்கு[35] (போதம் – 10)

என்ற சூத்திரத்தைக் காட்டித் தத்துவச் சார்புடைய உரை தருகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

திருவருட்பயன்

இது உயிர், மல, அருள் நிலைகளை விளக்க உமாபதி சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட குறள் வெண்பா நூறு கொண்ட நூல் ஆகும்.

"இருள்" - என்பதைத் தத்துவ விளக்கம் செய்ய,

ஒரு பொருளுங் காட்டா திருளுருவம் காட்டும்[35] (திருவருட்பயன். 23)

என்ற பகுதியைச் சுப்பிரமணிய முதலியார் எடுத்தாளுவது சிறப்பிற்குரிய ஒன்றாகும்.

மற்ற சாத்திர நூல்கள்

அ. "குவடே சார்வாக யோகம் விரும்பினார்" என்பதற்கு, (327)

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாமங்கு
முற்ற வரும்பரி கந்திபற
முளையாது மாயையென் றுந்திபற

என்ற திருவுந்தியார் பகுதியும்,

ஆ. "அடியாரவர் வான்புகழ்" (4281) என்பதைக் காட்ட

இன்றிச் சமயத்தின வல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார் – இன்றிங்கே
அங்கமுயிர் பெறவே பாடு மடியவரார்
எங்குமிலை கண்டாயிது (65)

என்ற திருக்களிற்றுப்படியார் பகுதியும்,

இ. "வினைஎலாம் விளக்கவல்லார்" (3510) என்பதற்கு,

வல்லார்கள் வல்லவகையாற் றொழில்புரித
லெல்லாமுடனே யொருங்கிசைந்து – சொல்காலை
முட்டாமற் செய்வினைக்கு முற்செய் வினைக்குஞ்செலவு

என்று போற்றிப் பஃறொடைப் பகுதியும்,

ஈ. முதலை பாலனைத் தந்த செய்திக்குச் சான்றாக, (4237)

ஈசன தியல்பரு னெய்துயிரியற்றல்
பேசுத றவறெனப் பெருமறை யறைய
ஐந்தொழி லுயிருந் தந்திட றகுமே?
ஆவதென் முன்னா ணாவலர் பெருமான்
பண்டொரு முதலையுண்டமைத் தனைவர

வழைத்தன னென்றாய் பிழைப்பில ததூஉம்
தந்திட வேண்டுமென்றனரன்றே

என்ற சங்கற்பநிராகரணப் பகுதியும்,

போன்ற சைவ சாத்திரநூல் பகுதிகள் கையாளப்பட்டுள்ளமை சுப்பிரமணிய முதலியாரின் சாத்திர அறிவுக்கு சான்றாகும்.

எனவே பெரிய புராணத்தில் தத்துவ அமைப்புக்கள் இடம் பெறுகின்ற இடங்களில் உரையாசிரியர் சைவ சாத்திரங்களைக் கையாண்டு விளக்கங்களைத் தந்துள்ளார் என்பது இதன்மூலம் மெய்யாகின்றது.

இலக்கணப்புலமை

சுப்பிரமணிய முதலியாரின் இலக்கணப் புலமையும் அவரின் உரையில் புலப்படுகின்றது. தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்களின் நூற்பாக்களை உரையில் காணமுடிகின்றது; பிங்கல நிகண்டின் மேற்கோளும் உரையில் எடுத்தாளப் பெற்றுள்ளது.

தொல்காப்பியம்

அ. "நாலாங்குலம்" என்பதைக் காட்ட,

வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி[36] (தொல்–பொருள்–மரபியல்–80)

என்ற நூற்பாவையும்

ஆ. "இன்புறுகின்றார்" என்ற வினைப் பெயரின் நிகழ்கால அமைவிற்கு,

முந்நிலை காலமுந் தோன்று மியற்கை
யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச் சொற் கிளத்தல் வேண்டும்[37]
(தொல்–சொல்–வினை. 43)

என்ற நூற்பாவையும்,

இ. "கற்புநிலை" பூண்ட மகளிர்க்கு

நல்லோள் கணவனொடு நனியழற் புகீஇச்
சொல்லிடையிட்ட பாவை நிலையும்[38]

என்ற நூற்பாவையும்,

ஈ. "உய்தி பெற்றேன்" என்பது "உய்த்தேன்" என்று விரைவில் காரணமாய் வந்ததற்கு,

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஒராங்கு வரூஉம் வினைச் சொற்கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்[39]

என்ற நூற்பாவையும்,

எடுத்தாளுகின்றமையால் சுப்பிரமணிய முதலியாரின் தொல்காப்பியப் பயில்வு புலப்படுகின்றது.

நன்னூல்

மேற்காட்டிய வினைப்பெயர் இயல்பு காட்ட,

> முக்காலத்திது மொத்தியல் பொருளைச்
> செப்புவர் நிகழுங் காலந்தானே[40]

என்ற நன்னூல் சூத்திரமும் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

பிங்கல நிகண்டு

பிங்கல முனிவர் செய்த இந்நிக்ண்டினையும் உரையாசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

கொம்மை என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் காட்ட, "வட்டம், அழகு, திரட்சி"[41] எனப் பிங்கல நிகண்டு மேற்கோளைக் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

உரையில் உரை

சுப்பிரமணிய முதலியார் நூல் அறிவோடு, நூல்களுக்குச் செய்யப்பட்ட உரையிலும் பயிற்சி உடையவராகத் திகழ்கிறார். சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையினையும், பட்டினப் பாலை நச்சினார்க்கினியர் உரையினையும், தொல்காப்பியப் பொருளதிகார மரபியல் உரையினையும், திருக்குறள் பரிமேலழகர் உரையினையும் தமது உரையில் உரையாசிரியர் எடுத்தாளுகின்றார்.

சிலப்பதிகார உரை

சுப்பிரமணிய முதலியார் சிலப்பதிகார உரைப்பகுதிகளை எடுத்தாளும்போது '(சிலப்-அரங் - (எண்) உரை)' என்றே குறிப்பிடுகின்றார். இங்கு குறிக்கப்படும் உரை அடியார்க்கு நல்லார் உரை என்பது ஆய்ந்தபோது கிடைத்த செய்தியாகும். எடுத்துக்காட்டாகச் சில பகுதிகள் தரப்பெறுகின்றன.

அ. 'மும்மைப்படி' என்பதற்கு,

"வலிவும் மெலிவும் சமனும் என்ற தாளநிலையுடைய இசைக் கூறுபாடுகளுக்கெல்லாம் பண்ணீர்மை குன்றாமல்"[42] (சிலப்-அரங் - 93-94) என்ற பகுதியையும்,

ஆ. "கூடும் கிழமையினால்" என்பதற்கு 'சிலப்-அரங்- 85, 86, 87 உரைகளையும்'[43]

இ. "பானி" என்பதற்கு - தாளம் "கொட்டும் அசையும் தூக்கு மளவும் ஒட்டப் புணர்ப்பது பாணியாகும்.(சிலப்-அரங் -16)"[44] என்பதையும்,

ஈ. "இசை" என்பதற்கு "பல இயற்பாக்களுடனே திறத்தை இசைத்தலால் இசை என்று பெயராம்."[45]

என்பதையும் காட்டலாம்.

மற்ற உரைகள்

அ. "துகிர்மேனி" என்றதற்கு "பவளம்போல நிறத்தினையும்"[46] என்று பட்டினப்பாலைக்கு நச்சினார்க்கினியர் செய்த உரையினைச் சுப்பிரமணிய முதலியார் எடுத்தாளுகின்றார்.

ஆ. "கிழவர்" என்பதற்கு விளக்கம் காண, "இது வேளாளர் மரபுக்கு வழங்கும் சிறப்புப்பெயர். இது முன்னாள் மிகுதியும் வழக்கிலிருந்தது; இந்நாள் அருகி வழங்குவதாயிற்று. தனிப் பெயர் கூறாது ஊர் பற்றிக் கூறியது மரபில் சிறப்புணர்த் திற்று" என்ற தொல்-பொருள்-மரபு 74-உரையினையும்,

இ. "கண்டுகேட்டு உண்டு உயிர்த்தற்று அமர்ந்திருந்தார் காதல னால்" என்ற தொடருக்குப் பொருள் விளக்கம் தர வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களாகனுபவிக்கப் படுவன ஒரு காலத்து இவள் கண்ணேயனுபவிக்கப்பட்டன என்பதாம்"[48] என்றபரிமேலழகர் உரையைக்கையாளுவதையும்

உற்று நோக்கினால் சுப்பிரமணிய முதலியார் பல உரைகளைக் கற்றுணர்ந்த பிறகே பெரியபுராணத்திற்கு உரை செய்யத் துணிந்துள்ளார் என்பது புலனாகின்றது.

இசைப்புலமை

சுப்பிரமணிய முதலியார் இலக்கிய, இலக்கணப் புலமை பெற்றிருந்ததோடு இசைப்புலமையும் ஒருங்கே பெற்றிருந்தார் என்பதை அவரின் இசைப்புலமை காட்டும் உரைப்பகுதிகளால் அறியமுடிகின்றது.

சுந்தரர் தேவாரப் பதிகத்தைப் பற்றி முதன் முதலில் உரை யாசிரியர் கூற நேர்ந்த இடத்தில் சுப்பிரமணிய முதலியாரின் இசைப் புலமை வெளிப்படுகின்றது.

"பண்" பற்றிக் கூறுமிடத்தில் அதற்கு அடிக்குறிப்பில் கீழுள்ள செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

"இங்ஙனம் மூலாதாரந் தொடங்கி எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின் இசையென்றும்-பண்ணென்றும் பெயராம்."

பாவோடணைதல் இசையென்றார் பண்ணென்றார்
மேவார் பெருந்தான மெட்டாலும் – பாவா
யெடுத்தல் முதலாவிரு நான்கும் பள்ளிப்
படுத்தமையாற் பண்ணென்றுபார்

பெருந்தான மெட்டினும், கிரியைகளெட்டானும் பண்ணிப் படுத்தலாற் பண்னென்று பெயராயிற்று. பெருந்தான மெட்டாவன: நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணாக்கு, உதடு, பல், தலை என இவை. கிரியைகள் எட்டாவன: எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என இவை"[49] என்று தேவாரத் தமிழிசையின் பண்அமைதி குறிப்பிடும் இடத்துச் சுப்பிரமணிய முதலியாரின் இசைப்புலமை வெளிப்படுகின்றது.

முன்பு காட்டியதுபோலப் பாணி, மும்மைப்படி, இசை கூடும் கிழமை ஆகிய இசைப்பகுதிகளுக்குச் சிலப்பதிகார உரைகளைக் கையாண்டு அதன்வழி இசைவிளக்கம் தருவதும் சுப்பிரமணிய முதலியாரின் இசைப்புலமைக்குச் சான்றாகும்.

மேலும் சுந்தரர் தலயாத்திரைப் பதிகங்களைக் காட்டும் போதும் ஆசிரியர் அவற்றின் "பண்"களைக் குறிப்பிடுவது அவற்றிற்கு விளக்கமளிப்பது ஆகியன இவரின் இசையறிவுக்குச் சான்றாகும். எடுத்துக்காட்டாக, "இந்தளப்பண்ணிற்கு"

"நவிர்-வடுகு-வஞ்சி-செய்திறம் என்னும் மருதயாழ்த் திறன் நான்கிலே ஒன்றாகிய வடுகு என்னும் மருதயாழ்த்திறன் வகை (உட்பிரிவு) பதினாறில் இந்தளம் என்று வழங்கும் பண்ணிலே (பிங்கல நிகண்டு இசைவகை. பக். 170, 171) இந்தளம்-பகற் பண் பத்தில் ஒன்று காலை 10 நாழிகையிலிருந்து 12 நாழிகை எல்லைக்குள் பாடத்தக்கது."[50]

என்ற பண் அறிமுகப் பகுதியினை இங்கு சுட்டலாம்.

அடுத்துச் சுப்பிரமணிய முதலியார் சேக்கிழாரின் இசை இலக்கணங்கள் பயிலும் இடங்களைச் சுட்டி உரைக்கின்றார்.

"குழலிசை இலக்கணத்தை விரிவாய் ஆனாயநாயனார் புராணத்தும், அதன்மேல் யாழினுக்குரிய சிறப்பியல்பைத் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணங்களிலும் கூறினார்."[51]

வழக்கியலனுபவம்

சுப்பிரமணிய முதலியார் வழக்கறிஞர் என்பதால் தடுத்தாட் கொண்ட புராணத்தில் இடம்பெறும் அக்கால வழக்காடும் நிலையினை அலசி ஆராய்கின்றார். அத்துடன் அவற்றை இக்கால வழக்கு மன்ற நடைமுறைகளோடு ஒப்புநோக்கி காணுகின்றார்.

"வந்தவாறு இசைவே அன்றோ வழக்கு" என்ற தொடருக்கு உரைகாணுகின்றபோது இவரின் வழக்கியல் அறிவு தெளிவாகப் புலப்படுகின்றது.

"இசைவு வழக்கு என்பது வழக்கு வகைகளில் ஒன்று. சில வழக்குகள் தருமநூல், தாயநூல், உலகநூல் என்றிவற்றில் விதிகளின்படி வரும். சில இசைவு அஃதாவது ஒப்புதலின் மேற் கிளம்பும். இவ்வழக்கு மேற்சொல்லிய நூல்களின் வழியேயின்றி இசைவு பட்டதாம் என்றார். அந்தணர் அவையின் மிக்கார் கூற்றை நாதனாம் மறையோன் உடன்பட்டு மறுத்தவாராயிற்று. இதனால் அந்நாளின் வழக்கு மூலங்கள் அறியப்பெறுகின்றன."[52]

இப்பகுதி அந்நாளைய வழக்கு நடைமுறையைக் காட்டு கின்றது. இதற்கு ஒப்பான இக்கால நடைமுறை அடுத்து இடம் பெறுகின்றது.

"பொது உரிமைகளின் பேரில் நூல் வழக்குப்படி வரும் வழக்குகள் (Causes based on common law rights) ஒப்பந்தப்படி வரும் வழக்குகள் (Causes based on agreement) என்று இக்காலத்தவர் வழங்கும் வழக்குமுறையும் காண்க. எனவே இவை தமிழர்க்குப் புதியனவல்ல என்பதறியலாம்."[53]

இவ்வாறு தமிழர்களின் சட்ட அறிவைப் பாராட்டும் உரைநலம் சிறப்பிற்குரியதாம்.

நீதியின் இயல்பை இன்னொரு இடத்தில் தெளிவாகச் சுப்பிரமணிய முதலியார் குறிப்பிடுகின்றார்.

"உண்மையின் விளக்கம் யுகந்தோறும் மாறுபடும் என்பது ஞான நூல்களின் துணிவு மட்டுமேயன்றி அனுபவத்தும் கண்டது. இதுபற்றியே தருமதேவதை முதல் யுகத்தில் நான்கு கால் களாலும், இரண்டாவதில் மூன்று கால்களாலும், மூன்றாவது நான்காவது யுகங்களின் முறையே இரு கால்களாலும், ஒரு காலாலும் நடக்கும் என்பர். நான்காவதாகிய கலியுகத்தில் அதன் தன்மைக்கேற்றவாறு சத்தியத்தின் வெளிப்பாடு மெத்தென

நிகழும்; ஆனாலும் எவ்வாற்றானும் நிகழ்ந்தே விடும். பிறழாது. உடனே நிகழாமை கண்டு உண்மைக்கிடமில்லை என முடித்து வாய்வேண்டின சொல்லித்திரிதல் அடாது."[54] என்ற உரை குறிப்பிடத்தக்கதாகும்.

வழக்குமன்ற அதிகாரிகள்

வழக்குமன்ற அலுவலர்கள் குறித்தும் சில குறிப்புக்களை உரையாசிரியர் தருகின்றார்.

1. அருள்பெறு கரணத்தான்

"கருணீகன், கணக்கன் என்பார். சபையாரின் உத்தரவின் படி அதன் காரியங்களைப் பார்க்கும் கணக்கன். (இந்நாளில் clerk of crown - clerk of the court)."[55]

2. மேலெழுந்திட்டார்கள்

"சாட்சிக்காகக் கைஒப்பம் இட்டவர்கள். எழுதிக் கொடுப்பவர் கைச் சாத்துக்கு மேலே எழுதப்படுவதால் சாட்சி ஒப்பந்தத்தை மேலெழுத்து என்பது. அந்நாள் வழங்கிய பெயர் (Attestation)"[56]

என்று இக்கால ஒப்புநோக்கோடு அக்கால வழக்குமன்ற அதிகாரிகளைக் காட்டுவது சிறப்பிற்குரியதாகும்.

நடைமுறை

வழக்குமன்ற நடைமுறைகளும் இவரது உரையில் ஆராயப் பெற்றுள்ளன.

1. "அதன் தொன்மை நோக்கி" - பழமை நோக்குதல் என்ற பழங்கால நடைமுறையைச் சுப்பிரமணிய முதலியார்,

   "To satisfy about its antiquity - To see if it is a genuine ancient document"[57]

என்பதோடு கொண்டு கூட்டிப் பார்க்கின்றார்.

2. "படிஓலை-மூலஓலை-அன்றியும் மூல ஓலைகளே நீதிசபை யில் வேண்டப்படுவனவன்றிப் படியோலையல்ல என்ற முறைமையுங் குறித்தவாறு 'Direct evidence' என்பர் நவீனர்"[58] எனக் காட்டுவதும் இங்கு காணத்தக்கதாகும்.

இவ்வாறு சுப்பிரமணிய முதலியாரின் நீதியறிவு உரைக்கு மிக்க வலிமை சேர்ப்பதாக அமைந்து அணி சேர்க்கின்றது எனலாம்.

சூழலறிவு

சேக்கிழார் நாயன்மார்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டு காப்பியம் செய்ததுபோலச் சுப்பிரமணிய முதலியார் காப்பியம் காட்டும் இடங்களுக்குச் சென்று அங்குள்ள சூழலைக் கண்டு உரையெழுதியுள்ளார். 1. பதிஅமைந்துள்ள இடச்சூழல், 2. பதியில் உள்ள இக்காலத்துக் கோயில் நிலை, 3. பதியில் விளங்கும் நம்பிக்கைகள் முதலியவற்றைக் கண்டறிந்து அவற்றைத் தமது உரையில் காட்டுகின்றார் சுப்பிரமணிய முதலியார்.

எடுத்துக்காட்டாகக் காஞ்சி ஆற்றின் இயல்பைக் கூறவந்த இடத்து அவ்வாற்றின் சிறப்புச் சூழலை விளக்கி உரை செய்துள் ளமையைக் காட்டலாம்.

"ஆறு; இது பேரூருக்கு மேற்கில் 25 நாழிகையளவில் வெள்ளி மலைச் சாரலில் வன்னிமூலத்தில் எழுந்து, ஓடிவந்து பேரூர்வழி வரும் வரைக் காஞ்சி நதி எனப் பெயர் பெற்றதும், அதன் கீழ்க்காவிரியில் கூடும்வரை நொய்யல் எனப் பெயர் பெற்று விளங்கும் ஓர் ஆறு. காவிரியின் கிளை நதிகளுள் ஒன்று. எப்போதும் நீரூற்றுடன் வற்றாது ஓடும்.... இதனுள் இடப்படும் - இறந்தோரது எலும்புகள் நாளடைவில் கல்லாக ஆகிவிடும் தன்மை இன்றும் காணப்படும் சிறப்புடையது. இதன்நீர் பல நோய்களைத் தீர்க்கும் தன்மையும் இன்று காணப்பெறும்."[59]

என்ற மேற்பகுதியில் குறிப்பிட்ட பதியின் இடச்சூழலும், நம்பிக்கையும் விளக்கப்பட்டுள்ளமையை அறியலாம்.

திருவெண்பாக்கம் பற்றிக் கூறுகின்றபோது, அதனோடு சேர்ந்த திருவுளம்பூதூர் என்ற பதியையும் பற்றிக் குறிப்பிடு கின்றார். "இவையிரண்டும் இப்போது சென்னைக் குடிநீர்த் தேக்கமாக்கப்பட்ட பரந்த ஏரியாகிய பூண்டி நீர்த் தேக்கத்தினுள் அகப்பட்டுள்ளன."[60] என்ற இக்காலக் கோயில் அழிவு நிலையைக் காட்டும் சூழலறிவையும் உரையினில் காணலாம்.

பிற மதங்களைப் பற்றிய அறிவு

சுந்தரர் கண்இழந்து மீண்டும் பெற இறைவனை வேண்டு கிறார். இந்த இடத்தில் கிறித்துவச் சடங்கான பாவமன்னிப் பினை ஒப்பு நோக்குகின்றார்.

"பாவமன்னிப்பு என்பது சைவசமயக் கொள்கைகளுக்கு உடன்பாடன்று. அது கிறித்துவம் முதலிய புறச் சமயிகள்

கொள்கையாம். அதுவே மக்களைத் தீயசெயல்களுக்குப் புகுத்தும் தூண்டுகோளாய் நிற்கும். ஆனால் சைவசமயங் கண்ட உண்மை யானது, இறைவரை எண்ணித் துதித்தலால் அஃது அந்நோய்க்கு மருந்தாக நின்று அதனுள் இறைவர் விளங்கி கன்மபரிபாகம் நிகழ அருளிக் கன்மானுபவத்தை உடலூழாய்க் கழியவோ அன்றி வேறெவ்வாறோ ஊட்டுவித்து அருள்புரிவான் என்பதாம்."[61]

இவ்வாறு புறச் சமயக் கொள்கையை ஏற்காது, சைவ சமயக் கொள்கையைத் தனித்துக் காட்டும் இயல்பும் இவரின் உரையில் காணப்படுகின்றது.

ஆங்கில மொழி அறிவு

பழைய உரையாசிரியர்களுக்கு எவ்வாறு வடமொழி, தமிழ் மொழி என்ற இருமொழிகளின் புலமை இருந்ததோ அது போலச் சுப்பிரமணிய முதலியாருக்கு ஆங்கிலம், தமிழ் என்ற இருமொழிகளின் புலமை அமைந்திருக்கின்றது. ஆங்கில ஆட்சி அமைப்பின் சார்பாலும், கற்ற ஆங்கில வழிக் கல்வியின் சார்பாலும் சுப்பிரமணிய முதலியாருக்கு ஆங்கிலப்புலமை எளிதாய்க் கிடைத்திருகின்றது. இருப்பினும் ஆங்கிலத்திற்கு முதலிடம் தராமல் அதற்கான தமிழ் பெயர்ப்பிற்கு அவர் முதலிடம் தந்துள்ளமையை ஆய்வு செய்கின்றபோது அறியமுடிகின்றது.

அ. முறைப்பாடு-முறையிடும் பொருள், நவீனர் (complaint plaint)[61] பிராது என்கின்றார்கள்.

ஆ. நீதிச்சபையினரே அறிந்து கொள்ளக் கிடந்தது - "A face which the court can take judicial notice of and which does not require proof"[62]

என்பர் இந்நாள் வழக்கர்.

இ. "நிரூபிக்கும் பொறுப்பு உம்மிடம் உள்ளது" - "Burden of Proof"[63] என்பர் நவீனர்.

ஈ. ஆணைசாட்சி - "Documentary evidence"[64]

உ. வாய்மொழி சாட்சி - "Oral evidence"[65]

ஊ. மாட்சி - "Hon'ble court - your honour"[66]

எ. உடன் ஒப்பு நோக்கி - "Comparison handwritting and Signature"[67]

ஆகிய பகுதிகளைச் சுப்பிரமணிய முதலியாரின் ஆங்கில அறிவுக்கு எடுத்துரைக்கலாம்.

"அறிவியல் அறிவு"

தற்காலத்தில் அறிவியல் துறை முன்னேற்றம் கண்டுள்ளது. அறிவியல் சூழலில் வளர்ந்த சுப்பிரமணிய முதலியாரும் பெரிய புராணத்திற்கு அறிவியல் சார்போடு சில இடங்களில் உரை எழுதுகின்றார். உடலியல் அறிவு கொண்டும், அறிவியல் கண்டு பிடிப்புகளைச் சார்ந்தும் இவர் உரை காண்பதைக் கீழுள்ள சான்றுகளால் அறியலாம்.

உடலியல் அறிவு

உடல்பற்றிய அறிவியல் அணுகுமுறையுடன் உரை கண்டுள்ளார் சுப்பிரமணிய முதலியார்.

முதலை உண்ட பாலகன் மீண்டும் வனப்போடும் வளர்ச்சி யோடும் வெளியேறுகின்றான்; சுந்தரர் அருள் அதற்குத் துணை செய்தது எனப் புராணம் குறிப்பிடுகின்றது.

முதலை உண்ட பாலகன் வெளிவருவது முடிகின்ற செயலா? என்ற கேள்வி எழுகின்றபோது சுப்பிரமணிய முதலியார் அறிவியல் அணுகுமுறையோடு தரும் பதில் குறிப்பிடத்தக்கதாகும்.

"முதலை வாயில் உள்ள கூரிய வரிசையின் பற்கள் அதன் இரையினை விடாது பற்றிக் கொள்வதற்கே பயன்படுவனவன்றி மென்று தின்பதற்கல்ல என்பது உடல்நூல் அறிஞர் கூற்று"[68] என்பதைக் காட்டி இவர் - இது நடக்கும் செயலே என்று நிறுவுகின்றார்.

மற்றொரு இடத்தில் உடல் சுகத்திற்குரிய நூல் விதியினைக் கையாளுகின்றார்.

"பலகொணர்ந்து உயரம் பண்ணி" உயரமுடைய தலை யணையின் மேல் தலையைக் கிடத்தித் துயில வேண்டுமென்பது உடல் அகத்திற்குரிய நூல் விதி"[69] என்று கூறி இங்கும் தமக்குள்ள உடலியல் அறிவினைச் சுப்பிரமணிய முதலியார் வெளிக்காட்டு கின்றார்.

அறிவியல் கண்டுபிடிப்புகள்

சுந்தரர் மனதில் நினைத்த ஒன்றை எவ்விதத் தொடர்பு மின்றிச் சேரமான் பெருமாள் நாயனார் அறிந்துகொண்டார் என்பதை விளக்க - இக்கால 'வானொலி' கண்டுபிடிப்பினைச் சுப்பிரமணிய முதலியார் உதாரணமாகக் காட்டுகின்றார்.

"நீண்ட தூரத்து அப்பாற் கிளம்பும் மொழிகள் ஓசைகள் முதலியவை ஒலியலைகளாகப் பூத ஆகாயம் பற்றுக்கோடாக இப்பால் வந்து அவற்றை வாங்கும் கருவியமைப்பின் ஒழுங்கு மூலமாக நமக்குச் செவிப்புலப்படுதல் இந்நாளின், வானொலித் தத்துவ ஆராய்ச்சியின் பயனாய் நாம் கண்ட உண்மை. Radio Transmitting and Recieving Stations, Receiving set என்பனவாதி விஞ்ஞான முறையமைப்புகள் ஆங்கிலத்தில் பேசப்படுவன. இதனின் சிறப்புடைத்தாய் சுந்தரர்தம் உணர்வலைகள் அவரைச் சார்ந்தன."[70]

என்று வானொலியின் தத்துவத்தினைக் கருத்தில் கொண்டு உரை செய்துள்ளார் சுப்பிரமணிய முதலியார்.

இவர் அடுத்து இன்னொரு கண்டுபிடிப்பினை உரையில் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது.

"நெடுந்தேர் இரவி-சூரியனது தேர்க்குதிரைகள் ஏழு என்பது மரபு. அவை முறையே நீலம் முதல் சிவப்பு இறுதியாக ஏழு நிறமுடையன என்றும் நிறங்களே புரவிகளாகக் கூறப்பெறு வன என்றும் சொல்லுவர்" என்று உரையில் தந்துவிட்டு அடிக்குறிப்பில் அறிவியலார் கண்டுபிடித்த வண்ணக் கலவை அமைப்பினைத் தருகின்றார் சுப்பிரமணிய முதலியார். "VIBGYOR" என்ற ஆங்கிலக் குறியீட்டு மொழியின் ஏழு எழுத்துக்களாலும் உணர்த்துவர் நவீன பௌதீக நூலோர். "Voilet-Indigo-Blue-Green-Yellow-Orange-Red"[71]

என்ற அறிவியல் கண்டுபிடிப்பினைக் கையாளுகின்றார்.

இவ்வாறு சுப்பிரமணிய முதலியார் அறிவியல் கண்டு பிடிப்புகளையும் உரையில் கையாண்டு உரைக்கும் பெருமை சேர்த்துள்ளார் எனலாம்.

பழக்கவழக்கங்கள் பற்றிய அறிவு

அக்கால பழக்க வழக்கங்களையும் சுப்பிரமணிய முதலி யார் உணர்ந்து வைத்துள்ளார்.

"இறைஞ்சிப்புறம் போந்து" - ஒரு திருப்பதியினை அணைந்த வுடன் முதலிற் செய்யும் கடமையாக இறைவர் கோயிலடைந்து வணங்கிய பின்னரே தமது ஏனைச் செயல்களுள் புகுதல் முந்தையோராகிய பெரியோரின் நிலை.... இதனை விடுத்து

இந்நாள் மக்கள் ஒரு பதியினை அணைந்தபோது தமது பிற காரியங்களையெல்லாம் முதலிற் செய்த பின்னரே கோயிலிற் சேர்தலும், அவ்வாறு செய்யா தொழிவனவும் வருந்தத் தக்கன" என்றவாறு இக்கால நிலை கண்டு வருந்துகிறார் சுப்பிரமணிய முதலியார்.

இவ்வாறு பல்துறையறிவு கொண்டவராக சுப்பிரமணிய முதலியார் விளங்கியமையால் அவரின் உரை ஆழமும், அகலமும் கொண்டு முழுமையான உரையாக விளங்குகின்றது.

இப்பகுதிவழி பெறும் கருத்துகள்

1. சுப்பிரமணிய முதலியார் சங்க இலக்கியங்கள் முதலாகத் தனிப்பாடல்கள் வரை பலவகை இலக்கியங்களிலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். அதிலும் சைவ இலக்கியங்களில் அதிகம் ஈடுபாடு கொண்டவராக இவர் விளங்குகிறார்.

2. பெரியபுராணத்தில் இடம்பெறும் தனித்துவத் தொடர்களுக்குச் சைவ தத்துவங்களான சாத்திர நூல்களை மேற்கோள் காட்டி உரை கண்டுள்ளார்.

3. உரையில் நிகண்டுகள்முதல் பலவகை இலக்கண நூல்களையும் சுப்பிரமணிய முதலியார் கையாண்டுள்ளார்.

4. சுப்பிரமணிய முதலியாரின் வழக்கியல் அறிவு தடுத்தாட்கொண்ட புராணத்திற்கு உரைசெய்யப் பேருதவி புரிந்துள்ளது.

5. ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் வல்லமை கொண்டவராகச் சுப்பிரமணிய முதலியார் உரைவாயிலாக அறியப்படுகின்றார்.

6. இசை, உடலியல், அறிவியல் என்ற பல துறைகளிலும் சுப்பிரமணிய முதலியாருக்குப் பயிற்சி இருந்துள்ளது என்பதை அவரின் உரை காட்டுகிறது.

குறிப்புகள்

1. வ.சுப. மாணிக்கம், உரைநெறிகள், தமிழியல் ஓர் அகநோக்கு, டாக்டர். தா.ஏ. ஞானமுர்த்தி மணிவிழாமலர், 1971, ப. 24.
2. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 200.
3. மேற்படி, ப. 430.
4. தி.தொ.பு., மு.ப.உ., ப. 340.

5. மேற்படி, ப. 341.
6. தி.தொ.பு.மு.ஆ.ப.உ., ப. 230.
7. மேற்படி, ப. 401.
8. தி.தொ.பு.மு.ப., ப. 339.
8.அ மேற்படி.
9. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 430.
10. தி.தொ.பு.மு.ப.உ., ப. 285.
11. மேற்படி, ப. 421.
12. மேற்படி, ப. 421.
13. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 5.
14. தி.தொ.பு.மு.ப.உ., ப. 342.
15. மேற்படி, ப. 273.
16. மேற்படி, ப. 273.
17. மேற்படி, ப. 328.
18. மேற்படி, ப. 59.
19. மேற்படி, ப. 219.
20. மேற்படி, ப. 334.
21. மேற்படி, ப. 263.
22. மேற்படி, ப. 274.
23. மேற்படி, ப. 211.
23.அ மேற்படி, ப. 210.
23.ஆ தி.தொ.பு.மு.ப.உ., ப. 308.
24. மேற்படி, ப. 249.
25. மேற்படி, ப. 338.
26. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 255.
27. மேற்படி, ப. 144.
28. தி.தொ.பு.மு.ப.உ., ப. 200.
29. மேற்படி, ப. 342.
30. மேற்படி, ப. 359.

31. மேற்படி., ப. 292.

31. அ மேற்படி., ப. 295.

31. ஆ மேற்படி., ப. 419.

32. மேற்படி., ப. 395.

33. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 306.

34. தி.தொ.பு.ஏ.ப.உ., ப. 595.

35. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 370.

36. மேற்படி., ப. 235.

37. மேற்படி., ப. 8.

38. மேற்படி., ப. 430.

39. தி.தொ.பு.மு.உ., ப. 209.

40. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 8.

41. மேற்படி., ப. 341.

42. தி.தொ.பு.மு.ப.உ., ப. 251.

43. மேற்படி.

44. மேற்படி.

45. மேற்படி.

46. மேற்படி., ப. 339.

47. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 11.

48. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 294.

49. தி.தொ.பு.மு.ப.உ., ப. 252.

50. மேற்படி., ப. 251.

51. மேற்படி., ப. 253.

52. மேற்படி., ப. 228.

53. மேற்படி.

54. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 305.

55. தி.தொ.பு.மு.ப.உ., ப. 234.

56. மேற்படி.

57. மேற்படி.

58. மேற்படி, ப. 232.
59. மேற்படி, ப. 200.
60. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 318.
61. தி.தொ.பு.மு.ப.உ., ப. 227.
62. மேற்படி, ப. 230.
63. மேற்படி, ப. 231.
64. மேற்படி, ப. 232.
65. மேற்படி.
66. மேற்படி.
67. மேற்படி, ப. 237.
68. தி.தொ.பு.ஏ.ப.உ., ப. 507.
69. தி.தொ.பு.ஆ.ப.உ., ப. 49.
70. தி.தொ.பு.ஏ.ப.உ., ப. 625.
71. தி.தொ.பு.மு.ப.உ., ப. 264.

ooo

நிறைவுரை

சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராண உரைத் திறன் என்ற இந்நூலின் வழியாக திறனாய்ந்து சில கருத்துகள் பெறப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

20-2-1878 முதல் 24-1-1961 வரை வாழ்ந்த கோவை சட்ட நூல் வல்லுநரும், இலக்கிய இலக்கண சாத்திரநூல் பயிற்சி மிக்கவரும், காண்பார்க்குச் சிவம் என்றே தோற்றம் அளிப்பவருமான சிவகவிமணி சுப்பிரமணிய முதலியார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழறிஞராகவும், உரையாசிரியராகவும் எண்ணத் தக்கவராவார். பெரிய புராணத்தின் மீதும், சேக்கிழார் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டு பெரியபுராண உரைகண்டு சைவப் பணியாற்றி இல்லற வாழ்வு வாழ்ந்த இவர் மதுரை ஆதீன வழியாகச் சம்பந்த சரணாலயத் தம்பிரான் என்ற பெயர் கொண்டு துறவு வாழ்வினையும் மேற்கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்தவராவார்.

பெரியபுராணத்திற்கு உரை எழுதும் நிலை - தொடக்கத்தில் வசனமெழுதுதல், குறிப்புரை தருதல், சூசனம் எழுதுதல், பொழிப்புரை எழுதுதல் என்றே அமைந்திருந்தது. பெரிய புராணத்திற்கு முழுமையான விளக்கமான உரைகாணும்நிலை முதன் முதலாகச் சுப்பிரமணிய முதலியாராலேயே அமையப் பெற்றது.

சுப்பிரமணிய முதலியாரின் உரை இருநெறிகளை உள்ளடக்கியதாகும். ஒன்று: இலக்கணநூல்கள் எடுத்துக்கூறும் உரையின் பொது இலக்கணங்களை ஒட்டியமைத்த பொது நெறியாகும். இப்பொது நெறியுள் உதாரணங்காட்டல், விசேடம், பயன் ஆகிய உரைப்பண்புகள் சிறப்புடன் கையாளப் பட்டுள்ளன. இவை தவிர, சுப்பிரமணிய முதலியாருக்கே உரிய உரைப் பொது நெறிகளாகக் கட்டமைப்பு நெறி, அருந்தொடர் நயம், பிறர் உணர ஒப்பு நோக்கல், சேக்கிழார் கவி நயங்காட்டல்,

பழமொழிகள் பயன்படுத்தல் ஆகிய நெறிகளும் உரையில் காணப்பெறுகின்றன

அடுத்தது திறனாய்வு நோக்கு கொண்ட சிறப்பு நெறியாகும். விளக்கமுறைத் திறனாய்வு, பாராட்டுமுறைத் திறனாய்வு, பாத்திரங்களின் பண்புகளைத் திறனாயும் நோக்கு, சிக்கல்களை ஆராய்ந்து முடிவுகாணும் ஆய்வு நோக்கு ஆகிய நான்கு நெறிகளும் குறிப்பிடத்தக்க சிறப்பு நெறிகளாக இவர் உரையுள் அமைந்துள்ளன.

சுப்பிரமணிய முதலியார் பல்வகை இலக்கிய, இலக்கணங்கள் சைவசாத்திரங்கள் ஆகிய நூல்களில் தெளிவான பயில்வையும், இசையியல், உடலியல், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்த பயிற்சியைப் பெற்றிருந்தார். இப்பயிற்சியும் அவருக்கு உரை செய்யப் பெரிதும் துணைபுரிந்துள்ளது. அத்துடன் சுப்பிரமணிய முதலியாரின் சட்டநூல் அறிவு தடுத்தாட்கொண்ட புராணத்திற்கு உரை காண மிகவும் பயன்பட்டுள்ளது. இதனால் இவரின் உரை இலக்கியவளமும், பல்துறை நலமும் கொண்டதாக அமைந்துள்ளது.

ooo

பின்னிணைப்புகள்

பின்னிணைப்பு – 1

சுப்பிரமணிய முதலியாரின் உரையில் இடம்பெற்றுள்ள அருஞ்சொல் விளக்கங்களின் பட்டியல் நூலாசிரியர் தொகுத்தவை

எண்	சொல்	பொருள்	பாடல் எண்
1.	அங்கணர்	அல்-கண்ணர் அழகிய கண்ணை உடையவர்	147
2.	அசைவு	சோர்வு	3501
3.	அடுக்கல்	மலை	3350
4.	அணிவாயில்	நகரத்தின் திருவாயில்	3265
5.	அண்ணல்	பெருமை உடையவர்	215
6.	அந்தணர்கள்	தில்லைவாழ் அந்தணர்கள்	3270
7.	அமர்காதல்	மிக்ககாதல்	3250
8.	அரவி	தீக்கடைக்கோல்	247
9.	அரண்தருகாப்பு	வேறொருவர் மாற்றக் கூடாத காணல்	208
10.	அரமங்கையர்	வானில் உள்ளவர்கள்	3351
11.	அரிசனம்	(கத்தூரி) மஞ்சள் கலந்த வாசனைத்தூள்	161
12.	அருமறை	எழுதற்கரிய முழுதும் உணர்தற்கரிய மறை	192
13.	அருள்பெற்றே	அருள்விடை பெற்றே	3296
14.	அலங்கல்	உரிய அடையாளமான தாமரை மாலை	3266
15.	அவதரித்த	அவதாரம் என்று இரங்குகை	148
16.	ஆடகப்பொது	பொன்னம்பலம்	3258
17.	ஆடகம்	பொன்வேலைப்பாடு கொண்ட மதில்	3328
18	ஆண்டகை	ஆண்மக்களிலே மிக்க பெருந்தகை	172

19.	ஆதவன்	சூரியன்	176
20.	ஆதிசைவர்	சிவபிராமணர்	200
21.	ஆதிதேவர்	எல்லாத் தேவர்களுக்கும் முற்பட்டவர்	3394
22.	ஆராஅன்பு	குறையாத அன்பு	3344
23.	ஆளும்	சந்திக்கின்ற	174
24.	இசைப்பா	இசைகளைத் தம்முட் கொண்ட பாட்டு	345
25.	இறையோன்	முதல்வன்	183
26.	உகிர்நுதி	நகத்தின் துணி	162
27.	உம்பர்	மேலுலகத்தவர்	299
28.	உரவோன்	அறிவின் வலியுடையோன்	288
29.	உருகியஅன்பு	மனம் உருகுதற்குக் காரணமாகிய அன்பு	3161
30.	ஊர்தல்	பொருந்துதல்	3223
31.	எஞ்சாத பேரன்பு	எக்காலத்தும் எல்லாற்றானும் குறைவுபடாத அன்பு	3277
32.	எண்ணில்	அளவில்லாத	180
33.	எய்த	ஒரு சேர	3229
34.	ஏத்தொலி	ஏந்துகின்றதால் எழும் ஒலி	166
35.	ஒருவர்	ஒப்பற்றவர்	174
36.	ஓர்வாக்கு	அசரீரியாக வானில் எழும் நாதம்	273
37.	ஓவுதல்	நீங்குதல்	3279
38.	கடி	புதுமை	169
39.	கடுக்கை	கொன்றை	147
40.	கடுமையாம் நிலை	பிறரால் அடைதற்கரிய நிலை	342
41.	கடும்பகற் பொழுது	உச்சிப்போது	3332
42.	கடைகட்ட	முடித்துவைக்க	288
43.	கணிதநூற்புலவர்	சோதிடர்	160
44.	கண்டிகை	உருத்திராக்க மணிகளால் ஆகிய வடம்	176
45.	கரணத்தான்	கணக்கன்	204

46.	கற்பில் வாழ்க்கை	இல்வாழ்க்கை	149
47.	கனி	முதிர்ந்த	3261
48.	கன்னிமாடம்	கன்னிப் பருவத்துப் பெண்கள் தவநிலை ஒழுக்கத்துடன் தனித்து வாழும் இடம்	3374
49.	காதல்புரி	ஒரு தலைக்காமத்தின் கைக்கிளை மனநிலை	3459
50.	காணாதார்	காணுதற்கரியார்	3487
51.	குஞ்சி	இங்கு ஆண்மக்களின் தலைமயிர் குறித்தது	315
52.	குழகு	இளமை	3226
53.	குறங்கு	துடை	3194
54.	கொடி	துவளும் தன்மையுடையது	271
55.	கோவணம்	மறையே இறைவனது கோவணம்	177
56.	சாலமிக	மிக அதிகமாக	3315
57.	சீர்	சிறப்புகள்	341
58.	சூழியம்	ஆண்மக்களின் கிரீட விசேடங்களில் ஒன்று	336
59.	சூரம்	மாமரம்	239
60.	சூது	சூதாடு கருவிவகை களில் ஒன்று	167
61.	சூளுறவு	சபதம்	3431
62.	செந்தமிழ்	இயலும் இசையும் கூடியநிலை குறித்தது	3250
63.	செருநாகம்	போர்குறித்து வந்த யானை	3322
64.	சேவகர்	ஆண்மையும் வெற்றியும் உடையவர்	3252
65.	தருநீர்மை	அருளுக்கும் அவர்க்கும் தகுந்த தன்மை	3424
66.	தங்கு நுகர்தல்	நிலைபெற்று மாறாத பெருவிருப்பு	3222
67.	தந்தைக்குத் தந்தை	பாட்டன்	198
68.	தம்பிரான்	தமக்குரியபெருமான்	150

69.	தமிழ்	1. இனிமை	313
		2. தேவாரத் திருப்பதிகம்	3222
		3. தடைகள் இல்லாமல் மேன்மேலும் வளரும் தமிழ்	3424
70.	தரியாமையாவது	தமக்கே உரியதாகிய தன் நாயகரது இன்பம் பிறர்க்கு உரித்தாகக் கண்டு பொறுக்கவாற்றாமை	3468
71.	தவநெறி	சிவபூஜையிற் செல்லும்வழி	225
72.	தனி	ஒப்பற்ற ஒன்று	3303
73.	தாழ்ந்து	வணங்கி	3184
74.	தாலின்	அடிப்பக்கத்திலே	266
75.	திண்ணம்	திண்மை	3387
76.	தீர்வு	தீர்வுசெய்யும் மொழிகள்	3473
77.	துஞ்சுதல்	உறங்குதல்	3404
78.	துணைப்பாதம்	இரண்டு பாதங்கள்	3274
79.	துவன்றி	நெருங்கி	167
80.	தூயபணி	மலர்தொடுத்தல் மிக்க தூயபணி	3409
81.	தெற்றி	சித்திரக் கூடங்கள்	3339
82.	தொண்டன்	தொண்டு செய்தவன்	217
83.	தொழில்உறுவார்	தொழிலதனை மேற்கொண்டார்	3305
84.	தோழனார்	உயிர்ப்பாங்கர்	3398
85.	நகை	புன்முறுவல்	285
86.	நங்கை	பெண்களில் உயர்ந்தவர்	3495
87.	நரத்தம்	நரந்த மரம்	239
88.	நரை	நரைமயிர்	3335
89.	நாகம்	நாவல் மரம்	3361
90.	நாமம்	புகழ்	239
91.	நாலாங்குலம்	நான்காவதாக வகுக்கப் பட்ட வேளாளர் குலம்	170
92.	நாளிகேரம்	தென்னை	239

93.	நிறைகுடம்	பூரணகும்பம்	170
94.	நிகர் இல்லால்	தமக்கு ஒப்பார் ஒருவருமிலாதார்	182
95.	நிர்த்தரங்கம்	நீர் நிறைதலால் உள்ள அலைகள்	311
96.	நெய்வளர்விளக்கு	நெய்விளக்குகள் குண மிகுந்தன	3532
97.	நோதகவு	நோவுத்தலின் தன்மை	3498
98.	பசுபதி	உயிர்களுக்குத் தலைவர்	3421
99.	படி	படிக்கட்டளை	3165
100.	படிஓலை	நகல் என்பார்	202
101.	படிந்தாடி	நிருட்டபுகுந்து நீராடல்	262
102.	படுவாசி	உளதாக்கிய மாற்றுக் குறைவு	3291
103.	பருப்பதம்	ஸ்ரீசைலம் சீபர்ப்பதமலை	3352
104.	பல்லாறு	வேறுவழிகளில் செல்லும்	222
105.	பழையமன்றாடி	வழக்கிடுதலே தொழிலாக உள்ளவர்	194
106.	பாக்கியம்	சிவபுண்ணியம்	3181
107.	பாதங்கள்	எதிர்நின்றனவாகிய திருவடிகள்	356
108.	பாலையோ	வன்மை உடையவனோ	188
109.	பஞ்சம்	மயிற்பீலி	181
110.	பிஞ்சுகன்	தலைக்கோலமுடையவன்	181
111.	பித்தன்	பித்துப்பிடித்தவன்	187
112.	பீடு	பெருமை	3252
113.	புகலி	புகலடைந்த இடம்	259
114.	புகலிட்டோம்	புகும்படி ஆற்றில் இட்டோம்	3281
115.	புண்ணியனார்	சிவபுண்ணிய விளைவா யுள்ளவர்	3272
116.	புனகம்	மயிற்கூச்செறிதல்	214
117.	புறவு	இடையே பரந்து காணும் சிறுகாடுகள்	3326

118.	பூமாலைப்பந்தர்	மங்கலவினைப்பந்தர்	157
119.	பெருமைசால்	பெருமைபொருந்திய	152
120.	பொன்றிரள்	பொற்றூள்	235
121.	போனகம்	உணவு	3166
122.	மங்கல வேள்வி	சிவன் மங்கலத்தைச் செய்பவன்	235
123.	மணத்திறம்	மணமகளாகப் பெருவிருப்பம்	153
124.	மணி	செயற்கையால் அமையாது இயற்கையாய் ஒளியுடைத்து	287
125.	மணிமுன்றில்	மனைகளின் முற்றங்கள்	3157
126.	மண்டிய	செறிந்து மிக்கு மேலெழுந்த	3298
127.	மறைஆயிரம்	அனந்த வேதம்	179
128.	மறைமூதூர்	மறைமுழக்கம் நீங்காத பழவூர்	189
129.	மனை	மனைவி	149
130.	மாசிலா மரபு	குற்றமிலாக் குலம்	186
131.	மாதுகம்	இலுப்பை மரம்	239
132.	மாலம்	பெருமை	3166
133.	முறைப்பாடு	முறையிடும் பொருள்	197
134.	மூலஓலை	அசல் என்பார்	202
135.	மெய்த்தவர்	அடியார் (உண்மையான)	3243
136.	மேலவர்	பகைவர் முப்புர வாணர்களான அரக்கர்	3302
137.	மொழி	தொடர்மொழி	348
138.	வம்பு	எவரும் செய்யாத புதுமை	3546
139.	வருத்தம்	காதல் துன்பம்	3386
140.	வளவன் செங்கணான்	கோச்செங்கச்சோழன்	3217
141.	வாகுளம்	மகிழமரம்	239
142.	வாழி	வாழ்வுதருவது	3341
143.	வித்தகம்	கேலி	187
144.	வேதபாரகர்	வேதம் வல்ல சிறந்தவர்கள்	197

பின்னிணைப்பு – 2 சுப்பிரமணிய முதலியார் எடுத்தாண்ட நூல்களின் பட்டியல்

எண்	பாடலடி	எடுத்தாளப் பட்ட நூல்	இடம்பெறும் பாடல் எண்	நோக்கம்
	சங்க இலக்கியம்			
1.	கேளன்... தானே	புறநானூறு-74	3333	சொ.பொ.வி
2.	என்வழி வல்லவராடவர்... ரிலலே	புறநானூறு-187	3447	சொ.பொ.வி.
3.	எமக்கெம்... ரற்றே	புறநானூறு-246	3552	சொ.பொ.வி.
4.	கோங்கின் குவிமுகிளமலை	திருமுருகாற்றுப்படை -34	280	சான்று
5.	வாள் அரமகளிர்க்கு வதுவைசூட்ட	திருமுருகாற்றுப்படை-294	3355	சொ.பொ.வி
6.	அரிவைக் கூந்தலின்	குறுந்தொகை-1		
7.	கோங்கு முகைத்தன்ன குவிமுலை	அகம்: 240-11	280	சான்று
	காப்பியங்கள்			
1.	பவளப்பாலையின் இளங்கொடி	மணிமேகலை	280	சான்று
2.	காதலற் இறப்பின்... ஞானத்து	மணிமேகலை	3552	பொ.வி.
3.	மாறன்மையின் ... யாரையுமறியன்	சீவகசிந்தாமணி	3190	பொ.வி.

எண்	பாடலடி	எடுத்தாளப் பட்ட நூல்	இடம்பெறும் பாடல் எண்	நோக்கம்
	திருக்குறள்			
1.	அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்	குறள்	245	பொ.வி.
2.	சார்புணர்ந்து.... நோய்	குறள்	346	பொ.வி.
3.	பிறப்பென்னும் பேதைமை... யறிவு	குறள்	348	பொ.வி.
4.	ஒருநோக்கு நோய்நோக்கு	குறள்	3156	பொ.வி.
5.	கொழுநற்றொழுதெழுவாள்	குறள்	3169, 3558	சொ.பொ.வி.
6.	ஈத்துவக்கும் இன்பம்	குறள்	3183	சொ.பொ.வி.
7.	பொய்யும்.... மெலின்	குறள்	3369	சொ.பொ.வி.
8.	தாழ்வீழ்வார்	குறள்	3381	சொ.பொ.வி.
9.	மணிநீருமண்ணும்	குறள்	4243	மரபு
10.	களைகட்டதனோடு	குறள்	4230	சொ.பொ.வி.
11.	செயற்கரிய செய்வர் பெரியர்	குறள்	4273	சொ.பொ.வி.

	திருமுறைகள்			
	திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரம்			
1.	குன்றவார்சிலை_ வேதியனே	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	190	சொ.பொ.வி.
2.	கோழைமிட_ மீசன்	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	216	சொ.பொ.வி.
3.	பத்திப்போர்_ செயுமனன்	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	236	சொ.பொ.வி
4.	மதுமா_ கண்டன்	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	236	சொ.பொ.வி
5.	வேதமலித்த வெளி_ கிளர	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	237	சொ.பொ.வி
6.	சொலவலவேதம் சொலவலகீதம்	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	237	சொ.பொ.வி
7.	சோறாடு_ மிழலையாமே	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	242	சொ.பொ.வி
8.	வெண்கொடிசேர் நெடுமாடம்	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	243	சான்று
9.	செல்வநெடுமாடஞ்சென்று_ வாழ்வதில்லை	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	243	சான்று
10.	திருத்தடக்கை முத்தழலோர்_ க முமலமே	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	281	பொ.வி
11.	காணவினியது நீறு -	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	331	இலக்கணம்
12.	நனவிலும்_ நின்மலன்	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	3391	சொ.பொ.வி
13.	பழயவிராலங்காட்டெம்மடிகளே	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	3496	சொ.பொ.வி
14.	கூனற்றின்கண் குறுங்கண்ணி	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	3470	சொ.பொ.வி

	நாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்			
1.	பூவணத்தவன் – அடியார்களை	திருநாவுக்கரசர் தேவாரம்	195	சொ.பொ.வி
2.	குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்	திருநாவுக்கரசர் தேவாரம்	231	சொ.பொ.வி
3.	திருர் பாடலாடலறாத செம்மாபார்ந்து	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்	233	சொ.பொ.வி
4.	நிறைமறை.. வீரட்டனாரே	திருநாவுக்கரசர் தேவாரம்	236	சொ.பொ.வி
5.	வீதிகள்தோறும் வெண்கொடி	திருநாவுக்கரசர் தேவாரம்	243	சான்று
6.	விதானமும் வெண்கொடியுமில்லா ஊரும்	திருநாவுக்கரசர் தேவாரம்	243	சான்று
7.	முழுதும்.. முய்வனோ	திருநாவுக்கரசர் தேவாரம்	250	பொ.வி
8.	தன்னைச் சரனென்று.. திடுமே	திருநாவுக்கரசர் தேவாரம்	263	சொ.பொ.வி
9.	முளைத்தானை	திருத்தாண்டகம்	271	சொ.பொ.வி
10.	ஆரூர்அமர்ந்த ... வாயிராவணமே	திருத்தாண்டகம்	274	சொ.பொ.வி
11.	மாதோர் பாகர் .... நானே	திருத்தாண்டகம்	274	சொ.பொ.வி.
12.	அத்தா.. வாறே	திருநாவுக்கரசர் தேவாரம்	337	சொ.பொ.வி.
13.	சித்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்	திருநாவுக்கரசர் தேவாரம்	337	சான்று
14.	இத்தனையும்... வாறே	திருநாவுக்கரசர் தேவாரம்	337	சொ.பொ.வி
15.	மன்னுமலைமகள் கையால் வருடின	திருநாவுக்கரசர் தேவாரம்	338	சொ.பொ.வி
16.	கெருடக்கடிமலர்ச்.. மலரடியே	திருநாவுக்கரசர் தேவாரம்	338	சொ.பொ.வி

17.	பொலம்பூண்டரிகப்புதுமலர்	திருநாவுக்கரசர் தேவாரம்	340	சொ.பொ.வி
18.	சாக்கமலத்தன்ன வடிவின	திருநாவுக்கரசர் தேவாரம்	340	சொ.பொ.வி
19.	மானிட_நடம்புரியும்	திருத்தாண்டகம்	3283	சொ.பொ.வி
20.	முன்னோ பின்னோ	திருத்தாண்டகம்	3285	சொ.பொ.வி
21.	தொண்டராணிப்பொன்	திருநாவுக்கரசர் தேவாராம்	3290	சொ.பொ.வி
22.	உன்னி_மாசொல்லி	திருநாவுக்கரசர் தேவாரம்	3391	சொ.பொ.வி
23.	பத்தர்களோடு பாவையர்சூழ	திருநாவுக்கரசர் தேவாரம்	3425	சொ.பொ.வி
24.	மறவாதே_திறலானை	திருத்தாண்டகம்	3426	சொ.பொ.வி
25.	தேசமுமையறிவதற்கு முன்னோ	திருத்தாண்டகம்	3459	சொ.பொ.வி
	மாணிக்கவாசகர்			
1.	மன்னுகலை_சாழலோ	திருவாசகம்	177	சொ.பொ.வி
2.	முன்னைப்பழம்பொருட்கு_பெற்றியனே	திருவாசகம்	183	பொ.வி.
3.	பானினைந்தூட்டும்_இனியே	திருவாசகம்	220	சொ.பொ.வி
4.	கற்றான் கெரியோம்வி	திருவாசகம்	241	பொ.வி
5.	தினைத்தனை_கோத்தும்பீ	திருவாசகம்	242	பொ.வி.
6.	மாறி_சோதி	திருவாசகம்	251	சொ.பொ.வி
7.	பத்துடையீர்_பொல்லாதோ	திருவாசகம்	269	சொ.பொ.வி
8.	வெறுப்பனவே_பொறுப்பனவே	திருவாசகம்	274	சொ.பொ.வி.

9.	உன்னை_பணிசெய்வோம்	திருவெம்பாவை	278	சான்று
10.	என்கொங்கை_செய்யற்க	திருவெம்பாவை	278	சான்று
11.	நாட்டார்_அம்மானாய்	திருவாசகம்	281	பொ.வி
12.	குற்றம்கவீக்கி_அம்மாவாய்	திருவாசகம்	281	பொ.வி.
13.	திருவளர்தாமரை_னொல்கி	திருக்கோவையார்	286	சொ.பொ.வி
14.	வளைபயில்_மிக்கனவே	திருக்கோவையார்	288	சொ.பொ.வி
15.	நீகண்டனை_பெருந்தகையே	திருக்கோவையார்	305	சொ.பொ.வி
16.	சிரிப்பார் களிப்பார்ந் தேனிப்பார்	திருவாசகம்	3161	சொ.பொ.வி
17.	சுற்றம்...கூர்ஞ்செக்கரே	திருக்கோவையார்	305	சொ.பொ.வி.
18.	அதிசயம் கண்டாமே	திருவாசகம்	3180	பொ.வி
19.	அத்தவிடை_மருதி_இனிப்புடையான்	திருவாசகம்	3184	பொ.வி
20.	அன்பெறுமாறு கரையது புரள	திருவாசகம் (திருகைவல்)	3350	சொ.பொ.வி
21.	பந்தமுமாய் வீடுமாயினார்க்கு	திருவாசகம்(பொற்26)	3372	சொ.பொ.வி
22.	குரம்பை_செய்தாங்கு	திருவாசகம் (அண்டப்பகுதி)	3380	சொ.பொ.வி
23.	நாடவர்_வாக	திருவாசகம் (அண்டப்பகுதி)	3381	சொ.பொ.வி
24.	பாங்களை_யெய்துதற்கே	திருக்கோவையார்	3382	சொ.பொ.வி
	9 ஆம் திருமுறை			
1.	தாயிலேரிரங்கும்_சிற்றம்பலமே	கருவூர்த் தேவர்	228	சொ.பொ.வி
2.	ஐஞ்னூற்றுந்தணரேத்தும்	திருவிசைப்பா	3211	பொ.வி

	10ம் திருமுறை			
1.	என்றாயோ... தாயே	திருமந்திரம்	195	சொ.பொ.வி
2.	திருவடியேசிவ... வோர்க்கே	திருமந்திரம் (முதல்)	237,274	பொ.வி.
3.	விளக்கொளி... நின்றாலே	திருமந்திரம் (முதல்)	250	பொ.வி.
4.	புறத்துளா... சமாதியே	திருமந்திரம் (முதல்)	250	பொ.வி.
5.	வாயொன்று... யாரே	திருமந்திரம் (ஆறாம்)	251	சொ.பொ.வி.
6.	நெறிவழி... மாமே	திருமந்திரம் (ஐந்தாம்)	251	சொ.பொ.வி.
7.	பெத்தலுத்துந்... மில்லையே	திருமந்திரம் (எட்டாம்)	342	பொ.வி
8.	அன்புள்ளுருகியமுவ... வேத்துனன்	திருமந்திரம் (நான்காம்)	3476	சொ.பொ.வி.
9.	தாவே... தளி	திருமந்திரம் (நான்காம்)	3563	சொ.பொ.வி
10.	ஆகமம் செப்ப வந்தேனே	திருமந்திரம் (முதல்)	3563	சொ.பொ.வி
11.	இங்கியான் வந்தேனே	திருமந்திரம் (முதல்)	3563	சொ.பொ.வி
	11ஆம் திருமுறை			
1.	மொய்குழலார் தம்மை நடுச்சங்கநல்	பட்டினத்தடிகள்	173	சொ.பொ.வி
2.	விலங்கு பூட்டும்	பட்டினத்தடிகள்	174	சொ.பொ.வி
3.	இனையனாகிய... முடியும்	பட்டினத்தடிகள்	174	சொ.பொ.வி.
4.	நாகர் நாடு... வெள்ளம்	பட்டினத்தடிகள்	253	சொ.பொ.வி

5.	உரையின் வரையும் பொருளியைவும் இருவகைப்பட்ட எல்லை	பட்டினத்தடிகள்	3299	சொ.பொ.வி.
6.	சடைமேல.. நீலக்குழல்	அற்புதத் திருவந்தாதி	220	சொ.பொ.வி
7.	மறுவுடைய.. மதி	அற்புதத் திருவந்தாதி	234	சான்று
8.	பேதைப்பருவம்.. சேயிழையாள்	திருக்கயிலாய ஞான உலா	280	சொ.பொ.வி
9.	தருமகட்.. யாப்புணர்ந்தான்	திருத்தொண்டர் திருவந்தாதி	3381	சொ.பொ.வி
	புராணங்கள்			
1.	பரிதிகுணக்கெழு.. வாலமைத்து	பேரூர்ப்புராணம்	161	சொ.பொ.வி
2.	ஆரூரர் ... செவிகேட்டார்	பேரூர்ப்புராணம்	3270	சொ.பொ.வி.
3.	வல்லவ.. யுள்ளார்	பேரூர்ப்புராணம்	3270	சொ.பொ.வி
4.	தனதனிற் சார்ந்த நற்றோழன்	பேரூர்ப்புராணம்	3487	சொ.பொ.வி
5.	அழகியபிரானோ என்னா	திருவிளையாடற்புராணம்	262	சொ.பொ.வி
6.	சொம்பொன்.. மன்னும்	திருவிளையாடற்புராணம்	3429	பொ.வி.
7.	தன்னை நிந்தைசெய்.. றிட்டாள்	பிரபுலிங்கலீலை	294	பொ.வி
8.	வலங்கைமான் மழுவோன்.. நாடி	கோயில் புராணம்	250	பொ.வி.
9.	நாடளுநடுலி.. வையன்	கோயில்புராணம்	250	பொ.வி.
	சிற்றிலக்கியம்			
1.	படியிலாநின்.. அறிந்தனன்	நால்வர் நான்மணிமாலை	3285	பொ.வி

	பழம்பாட்டு			
1.	அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழவாயினுங்	பழம்பாட்டு	282	சொ.பொ.வி
2.	கள்ளிமேற் கைநீட்டார் குடும்பூ வன்மையால்	பழம்பாட்டு	282	சொ.பொ.வி
	சைவசாத்திரநூல்கள்			
1.	பாசஞானத்தாலும்.. நாடி	சித்தியார் (191)	192	பொ.வி
2.	வேதசாந்தி.. பாசஞானம்	சித்தியார் (191)	192	பொ.வி
3.	புண்டரிகமலர் தாழச்சிரத்தே.. செல்வாம்	சித்தியார் (191)	328	பொ.வி
4.	ஆசையொடு.. திரியே	சித்தியார் (191)	343	பொ.வி
5.	குறித்ததொன்றாக... னாலே	சித்தியார் (191)	3311	பொ.வி
6.	ஞானவாரிமடுத்து	சித்தியார் (191)	3350	சொ.பொ.வி.
7.	இருந்துணர்கின்ற ஞானம்.. லாமே	சித்தியார் (191)	3352	சொ.பொ.வி.
8.	காரியங்கள், காலமே தரவே..	சித்தியார் (191)	3429	சொ.பொ.வி.
9.	என்னையிப்பாவத்திற் சேர வகையெடுத்து	சித்தியார் (191)	3461	சொ.பொ.வி.
10.	சீவன்முத்தர் சிவமே கண்டிருப்பர்	சித்தியார் (191)	3525	சொ.பொ.வி.
11.	போகியாயிருந்துயிர்க்குப்-வோரார்	சித்தியார் (191)	3525	சொ.பொ.வி.
12.	சில நோய் கட்டியாலும் கலத்துடன் கொடுத்துத் தீர்ப்பான்	சித்தியார் (191)	3543	சொ.பொ.வி.
13.	கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடி திரியே	சித்தியார் (191)	4251	சொ.பொ.வி.

	சிவஞானபோதம்			
1.	அன்பரொடு மரீஇ	போதம் (12)	3294	சொ.பொ.வி
2.	கண்டு காட்டலன்	போதம் (11)	3395	சொ.பொ.வி
3.	சார்ந்தாரை-மாங்கு	போதம் (10)	3310	சொ.பொ.வி
4.	ஒடுங்கிய மலத்துளதாம்	போதம் (1)	3426	சொ.பொ.வி
5.	ஏகமாய் நின்றேயிணையடி	போதம்	4238	சொ.பொ.வி
6.	கண்ணுக்குக் காட்டுமுளம்போல்	போதம்	4281	சொ.பொ.வி
7.	பெற்ற சிற்றின்பமே- நுந்திபற	திருவுந்தியார்	327	சொ.பொ.வி
8.	இன்றி- கண்டாயிறு	திருக்களிற்றுப்படியார்	4281	சொ.பொ.வி
9.	ஒருபொருளும் காட்டா	திருவருட்பயன்	3476	சொ.பொ.வி
10.	யெய்துவதோர் காலந்-யுண்டாக்கி	போற்றிப்பஃறொடை	3510	சொ.பொ.வி
11.	தந்திடவேண்டு மென்றனரன்றே	சங்கர்ப்ப நிராகரணம்	4237	சொ.பொ.வி
	தனித்திறம் கொண்ட புலவர் பாடல்கள்			
	தாயுமானசுவாமிகள்			
1.	ஏரின் சிவபோக- தெந்நாளோ	தாயுமானசுவாமிகள்	229	சொ.பொ.வி
2.	ஐவகை- வகுத்து	தாயுமானசுவாமிகள்	251	பொ.வி
3.	ஆணவத்தோ... எந்நாளோ	தாயுமானசுவாமிகள்	346	பொ.வி.
4.	ஆடுவதும் பாடுவதும் மானந்தாமாக நினைத் தேடுவது நின்னன் பர் செய்கை பராபரமே	தாயுமானசுவாமிகள்	3161	சொ.பொ.வி

5.	கனல்வாதை வந்தெய்தின்	தாயுமானசுவாமிகள்	3310, 3333	சொ.பொ.வி
6.	சந்ததமுமிளமை யோடிருக்கலாம்	தாயுமானசுவாமிகள்	3486	சொ.பொ.வி
7.	உழவாரத்தின்.. திருச்சரமும்	மாதவச் சிவஞானசுவாமிகள்	229	சொ.பொ.வி
8.	அருள்விந்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி	குமரகுருபரர்	3535	சொ.பொ.வி
	இலக்கணம்			
1.	வேளாண்மாந்தர்.. நிகழ்ச்சி	தொல்.பொருள். மரபியல் (80)	3361	இலக்கணம்
2.	நல்லோன் கணவனோடு..பாலைநிலையும்	தொல்.பொருள். மரபியல் (80) தொல்.பொருள். புறத்திணை (24)	3552	சொ.பொ.வி
3.	முந்நிலைக் காலமும்.. வேண்டும்	தொல். சொல். வினை-43	3461	சொ.பொ.வி
4.	முக்காலத்தினு.. தானே	நன்னூல்	3161	சொ.பொ.வி
5.	கொம்மை.. வட்டம் அழகு திரட்சி	பிங்கல நிகண்டு	3468	சொ.பொ.வி
	உரைகள்			
1.	தற்கிழமை.. கிழமை	சிலப். அர (85-86-87)	221	சான்று
2.	இசை	சிலப். அர (85-86-87)	221	சான்று
3.	இது வேளாளர் மரபுக்கு வழங்கும் சிறப்புணர்த்தியது	தொல்.பொருள் மரபு (74) உரை	3164	சான்று
4.	பவளம்போலும் நிறத்திணையும்	பட்டினப்பாலை நச்சர். உரை	280	சான்று
5.	வேறு.வேறு.. பட்டன என்பதாம்	திருக்குறள், பரிமேலழகர் உரை	3421	சொ.பொ.வி

பின்னிணைப்பு – 3

துணைநூற்பட்டியல்

அரவிந்தன். மு.வை.,

உரையாசிரியர்கள், மணிவாசகர் நூலகம் சிதம்பரம், ஏப்ரல், 1968.

இளவரசு.சோம. (ப.ஆ.).

நன்னூல் விருத்தியுரை, திருப்பனந்தாள் திருட நிதிவெளியீடு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சிதம்பரம், 1989.

கண்ணப்ப முதலியார். பாலூர் (தொ.ஆ.).

தமிழ்இலக்கிய அகராதி, சென்ட்ரல் புக் டிப்போ. சென்னை, 1957.

கைலாசபதி. க.,

சமூகவியலும் இலக்கியமும் நியூசெஞ்சுரி புக் அவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை பிப்ரவரி 1988, இரண்டாம் பதிப்பு.

சடகோபராமானுசாரியார் வை.மு.

கிருஷ்ணமாசாரியார். சே. (உ.ஆ.கள்).

நன்னூல் காண்டிகையுரை, வைஷ்ணவ சம்பிரதாய புஸ்தக சாலை, சென்னை, 1939, பதினான்காம் பதிப்பு.

சுந்தரமூர்த்தி. இ.,

பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், தேன்மொழி வெளியீடு, ஐந்திணைப்பதிப்பகம், சென்னை, 2.10.1985.

சுப்பிரமணிய முதலியார் சி.கே. (உ.ஆ.).

(உ.ஆ.) திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம், முதற்பகுதி, கோவை - தமிழ்ச்சங்கம், கோயம் புத்தூர், 15.9.1937.

சுப்பிரமணிய முதலியார் சி.கே. (உ.ஆ.).
திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் ஆறாம்பகுதி, கோவை - தமிழ்ச்சங்கம், கோயமுத்தூர் 1.11.1969. இரண்டாம் பதிப்பு.

சுப்பிரமணிய முதலியார் சி.கே. (உ.ஆ.).
திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம், ஏழாம் பகுதி, கோவை - தமிழ்ச்சங்கம், கோயமுத்தூர், 6.5.1954.

சுப்பிரமணியன். ச.வே.,
அடியார்க்கு நல்லார் உரைத்திறன், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1976.

ஞானசம்பந்தம். அ.ச.,
இலக்கியக்கலை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், பிரைவேட் லிமிடெட், சென்னை, 1960.

ஞானசம்பந்தம். அ.ச. (ப.ஆ.).
திருத்தொண்டர் புராணம், (பெரியபுராணம்) சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை, 1993.

தமிழண்ணல் (பு.பெ.).
உரைவிளக்கு, அன்புச்செல்வி பதிப்பகம் வெளியீடு மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1985.

தட்சணாமூர்த்தி. பி.,
புலப்பாட்டு நெறி, கலைஞன் வெளியீடு, இலஞ்சியார் பதிப்பகம், திருநெல்வேலி - 6, டிசம்பர், 1984.

நீதிவாணன். ஜெ.,
நடையியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், அக்டோபர், 1983.

பழனியப்பன். மு.,
பெரியபுராணத்தில் பெண்கள் ஓர் ஆய்வு, மீனாட்சி நூலகம், பொன்னமராவதி, 1996.

பெரியகருப்பன். இராம.,
புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சோலை நூலகம் மதுரை அக்டோபர், 1980.

முத்தப்பன். பழ.,

அருணந்தி சிவாச்சாரியார் நூல்கள் ஓர் ஆய்வு, மீனாட்சி நூலகம், பொன்னமராவதி, 2002.

மோகன் இரா. சொக்கலிங்கம். ந. நெல்லை.

உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், வெள்ளிவிழா வெளியீடு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், ஆகஸ்ட், 1985.

வரதராசன். டாக்டர். மு.,

இலக்கியத்திறன் மு.வ., சென்னை 1992 மறுபதிப்பு.

விநாயகம். க.,

சிவஞானமுனிவர் உரைத்திறன், ஸ்ரீ அன்னை நூலகம், மயிலம், 1991.

விமலானந்தம் மது.ச.,

தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, டிசம்பர், 1987.

வையாபுரிபிள்ளை. ச.,

தமிழ்ச்சுடர் மணிகள், பாரிநிலையம், சென்னை, 1968.

ஆங்கில நூல்

Halen Gardner The Sceptre And the Touch in the Business of Critism oxford paper backs, 1970.

ஆங்கில இதழ்

Annals of Oriental Research Vol.21, University of Madras, 1971.

விளம்பரத்தாள்

மலேசியா, கோலாலம்பூர் சைவசித்தாந்த நிறுவனத்தினரின் ஆறுமுக நாவலரின் சூசனத்தோடு கூடிய பெரியபுராண நூல் விற்பனைக்காக வெளியிடப்பட்ட விளம்பரத்தாள்.

ooo



விடுதலைக்குமுந்தைய பெண்களின் நாவல்கள்
என்ற நூலுக்கு
'அருவி பரிசு' – பெறும்
மு. பழனியப்பன்.
பரிசளிப்பது
திருமிகு வசந்திதேவி அவர்கள்.
அருகில்
திரு. மாலன் அவர்கள்.

ஆசிரியரின் பிற நூல்கள்

- பெரியபுராணத்தில் பெண்கள் - ஓர் ஆய்வு
- பெண்ணிய வாசிப்பு
- விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள்
- சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரிய புராண உரைத்திறன்.

ooo

நன்முத்து

"மதுரம் பெறுகுறு தமிழ்ச்சொல் மாலை
நினக்கு அணியும் பிறவியே வேண்டுவன்"


என்னும் சிவப்பிரகாசரின் மொழிகளுக்கு ஏற்ப நண்பர் முனைவர் மு. பழனியப்பன் அவர்கள் தமிழன்னைக்குப் பல நூல் ஆரங்களை அணிவித்து வருகிறார். அதனுள் ஒன்று "சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராண உரைத்திறன்" என்னும் இந்நூல். "சுந்தரரை ஆராய்ந்தால் பெரியபுராணத்தையே ஆராய்வது போன்ற முழுமை உடையதாகும்" என்ற எண்ணத்தில் பக்தி இலக்கிய வரிசையில் ஓர் ஒப்பற்ற முத்தினைக் கோத்திடும் வண்ணமாக இந்நூலை நண்பர் வரைந்துள்ளார்.

ஆறாண்டு காலமாகப் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பணிபுரிந்த இவர் தற்போது சென்னை, தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தில் உதவி இயக்குநராகப் பணிபுரிகின்றார். தமிழிலக்கிய ஆராய்ச்சி மாணவர்களுக்கு நெறியாளராகவும், படைப்பிலக்கியக் கர்த்தாவாகவும், ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிடும் ஆய்வாளராகவும், பெண்ணியச் சிந்தனையாளராகவும் விளங்கிடும் நண்பரின் தமிழ்ப்பணி போற்றற்குரியது.

வாழையடி வாழையாக தமிழ் ஆய்வுலகில் பிரகாசித்துவரும் நண்பரின் பணிகள் மேலும் உயரவேண்டும். தமிழுலகின் நன்முத்தாய் விளங்கிடும் இந்நண்பரைத் தமிழுலகிற்கு அறிமுகம் செய்வதில் அகமகிழ்கின்றேன்.

நட்பின்

முனைவர் மயிலம் வேல். கார்த்திகேயன்
தமிழ் விரிவுரைஞர்,
தாகூர் கலைக் கல்லூரி,
புதுச்சேரி.



முனைவர் மு. பழனியப்பன்

அன்னவரே என் கணவர்!

அவரை பற்றிச் சொல்லுவதற்கு
ஏராளமானவை எனக்குள் உண்டு...

அன்பானவர், பண்பானவர்,
பாசமானவர். பிறரிடம்
மரியாதையாக நடந்து கொள்வார்.

அவரிடம் எனக்கு
மிகவும் பிடித்த விஷயங்கள்...
குறிப்பிட்ட இடத்திற்கு
குறிப்பிட்ட நேரத்திற்கு
முன்பாகவே சென்று விடுவார்.
எந்த ஒரு பணியினையும்
செய்வதற்குமுன்,
யோசித்து, திட்டமிட்டுப்
பின்புதான் செயல்படுத்துவார்.
திட்டமிட்ட பணியினையும்,
சிறிதும் காலதாமதம் இன்றி
விரைவாகச் செய்து
முடித்துவிடுவார்.
இதனால் அவர் செய்த பணிகள்
நிறைவாகவும், எளிதாகவும்
முடிந்துவிடும்.

பேச்சிலும், செலவு செய்வதிலும்
சிக்கனமாக இருப்பார்.
ஒரு நிமிடம் கூட
உட்கார்ந்து இருக்க மாட்டார்.
அலுவலகத்திலும், வீட்டிலும்
எடுத்துக்கொண்ட காரியம்
எதுவாக இருந்தாலும்
அதனை முடிக்காமல் விடமாட்டார்.
ஒன்றே செய்க, நன்றே செய்க,
அதுவும் இன்றே செய்க என்பது
இவருக்குத்தான் பொருந்தும்.
அவ்வழியில் ஒன்றாய் நன்றாய்
இன்றைக்கு வருவது
இந்த நூல்.

– பழ. விஜயலட்சுமி.